விலை: ரூபா 20 பக்கங்கள் 24

இதயன்

சுடர் 30 கதிர் 268 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 4, வெள்ளிக்கிழமை 21.08.2015

மீள் வாக்கு எண்ணிக்கை யாழில் நடைபெறவில்லை

அரச உத்தியோகத்தர்களைக் களங்கப்படுத்த சிலர் முயற்சி என யாழ். அரச அதிபர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். தேர்தல் மாவட்டத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கையின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீள் வாக்கு எண்ணிக்கை இம்முறை இல்லை.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் திருப்தியீனம் இருக்கும் எவரும் நீதிமன்றத்தை நாட முடியும். மேலும், வெளிப்படைத் தன்மையுடன் இடம் பெற்று முடிந்த தேர்தல் தொடர்பில் பொதுமக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கி அரச உத்தியோகத்தர்களை களங்கப்படுத்தச் சிலர் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஊடகவிய

பக்கம் 21

தேசிய அரசமைக்க சு.க பச்சைக் கொடி

சந்திரிகா தலைமையில் குழு அமைப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 21

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசை அமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பச்சைக் கொடி காட்டியுள்ளது. இதற்கு அந்தக் கட்சியின் மத்திய செயற்குழுவும் ஒப்புதல் அளித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில், அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் பற்றி ஆராய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுக் கூடியது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்திய குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். இதன்போது தேசிய அரசில் இணைவது குறித்து ஆராயப்பட்டு அதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தேசிய அரசில் இணைவதற்காக ஐக்கிய தேசிய முன்னணியுடன் செய்து கொள்ளப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை எவ்வாறு அமைய வேண்டும்; தேசிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வகிபாகம், எத்தகைய அமைச்சுப் பதவிகளை வகிப்பது என்பவை தொடர்பில் ஆராய்வதற்காக அறுவரடங்கிய குழுவொன்றையும் மத்திய செயற்குழு அமைத்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் போஷகரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான இக்குழுவில் நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரே

பக்கம் 21

ரணில் இன்று பிரதமராகிறார்

கொழும்பு, ஓக. 21

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இன்று வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாகப் பதவியேற்கவுள்ளார். இவர் நான்காவது தடவை பிரதமர் பதவியேற்கும் சந்தர்ப்பம் இதுவாகும். இந்தப் பதவியேற்பு வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முக்கிய எம்.பிக்கள் பலரும் கலந்து கொள்வதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர்.

பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க, 5 லட்சத்து 566 வாக்குகளைப் பெற்று இலங்கைத் தேர்தல் வரலாற்றில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவான மக்கள் பிரதிநிதி என்ற சாதனைக்குச் சொந்தக்காரராகியுள்ளார்.

மறுமுனையில் இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ, 4 லட்சத்து 23 ஆயிரத்து 529 வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய அமைச் சரவை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கள்கிழமை பதவியேற்கவுள்ளது. கடந்த ஆட்சியிலிருந்த ஐ.தே.கவின் 7 மாத அரசில் அமைச்சுப்

பக்கம் 21

தோல்வி கண்டோர் தேசியப் பட்டியலில் இடம்பெறார்

கொழும்பு, ஓக. 21

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய எவருக்கும், தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்குவதில்லை யென்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐ.தே.கவுக்கு, 13 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன. இந்த நிலையில், ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களது விவரம், இன்று வெள்ளிக்கிழமை தேர்தல்கள் ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

கூட்டமைப்பின் தலைமையுடனேயே உள்ளனர் வடக்கு - கிழக்குத் தமிழர்

தேர்தல் முடிவுகள் எடுத்துக் கூறுகின்றன என்கிறது உலகத் தமிழர் பேரவை

கொழும்பு, ஓக. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடனேயே வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் உள்ளனர் என்ற தெளிவான செய்தியை இலங்கையின் பொதுத் தேர்தல் முடிவுகள் புதிய அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக்கூறியிருக்கின்றன" - என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெற்றிருக்கும் பாரிய வெற்றிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்

பக்கம் 21

தேசியப் பட்டியல் ஆசனம்; சம்பந்தனுடன் நேற்று பேச்சு

பங்காளிக் கட்சிகள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கப் பெற்றுள்ள இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஓர் ஆசனத்தை தமிழரசுக் கட்சியின் சார்பில் ஒருவருக்கும் மற்றைய ஆசனத்தை ஏனைய மூன்று கட்சிகளும் தங்களுக்கு விரும்பிய ஒருவரை நியமிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்கம் 21

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழில் பெற்ற விருப்பு வாக்குகள்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளாத கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்டவர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளும் தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

செல்லுபடியான வாக்குகளில் 5 சதவீத வாக்குகளைப் பெற்று ஆசனங்கள் எதனையும் பெறாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அகில இலங்கை

பக்கம் 21

தேசிய அரசை அமைப்பதற்கு மஹிந்த அணி போர்க் கொடி

ஐ.ம.சு.மு. பிளவுபடும் நிலையில்

கொழும்பு, ஓக 21

தேசிய அரசு அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு ஒப்புதல் அளித்துள்ள நிலையில், அதற்கு மஹிந்த ஆதரவு அணியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சியிலுள்ள மைத்திரி ஆதரவு அணியினரின் முடிவே இதுவென்று தெரிவித்துள்ள வாசுதேவ நாண

பக்கம் 23

கூட்டமைப்பின் வெற்றி நல்லிணக்கத்துக்கு வழி

சோபிததேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்றாவது சக்தியாக இடம் பிடித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இது நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும்

பக்கம் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச - தனியார் பஸ்கள் கிளிநொச்சியில் முறுகல்

போக்குவரத்து அமைச்சர் தலையீட்டினால் தீர்வு

கொழும்பு, ஓக. 21

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சபையினருக்கு இடையில் நேற்றுக் காலை முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த முறுகல் நிலை, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் தலையீட்டினால் சுமுகமான நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி டிப்போவில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு 11 மணியளவில் தனியார் பஸ் நிறுத்தி வைக்கப்படும் இடத்தை, மறைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், முள் வேலி அமைத்துள்ளனர். இதை அறிந்த தனியார் பஸ் உரிமையாளர்கள், பகல் வேளையில் வேலி அடைக்காமல் யாருக்கும் தெரியாது இரவு வேளையில் வேலி அடைப்பது தவறு என்று கூறியுள்ளனர். அத்துடன் இது தனியார் பஸ் சேவையை முடக்குவதற்காகச் சாலை முகாமையாளரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எனவும் குறிப்பிட்டனர்.

இதனால் நேற்றுக் காலை இரு தரப்பினரிடையேயும் முரண்பாடு ஏற்பட்டது. இந்த முரண்பாட்டையடுத்து, பஸ் நிறுத்துவதற்குப் பொருத்தமான இடம் இல்லாமையினால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அத்துடன் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, நேற்று நண்பகல், போக்குவரத்து அமைச்சர் குறித்த பகுதிக்கு வருகை தந்து இரு தரப்பினருடனும் கலந்துரையாடினார். இதன் போது இரு தரப்பினரும், தங்கள் தரப்பு நியாயங்களை அமைச்சர் முன்னிலையில் கூறினர். பிரச்சினைகளை விளங்கிக் கொண்ட அமைச்சர் மக்கள் சேவையை மனதில் வைத்து இரு தரப்பினரையும் சமரசத்துக்கு வருமாறு கூறி அடைத்த முள் வேலியை மேலிடத்தில் கதைத்து அகற்றுவதாகக் கூறினார். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கு என்று ஒரு பஸ் நிலையம் அமைக்கும் வரை இரு தரப்பினரையும் அமைதியை பேணுமாறு கூறியதோடு விரைவில் பஸ் நிலையம் அமைத்துத் தருவதாகவும் உறுதியளித்தார். இதனால் இரு தரப்பினருக்குமான முறுகல் நிலை சீராகியது.

இதேவேளை இந்த முரண்பாட்டைச் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களை அரச பஸ் ஊழியர்கள் தாக்க முற்பட்டதாகவும், அதனால் தங்களுடைய உயிருக்கு அச்சுறுத்தல் எனவும் தெரிவித்து ஊடகவியலாளர்களால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-5-21)

தொழில் வாய்ப்பை ஆரம்பிக்க 6 கோடி ரூபா வரையில் உதவி

தொடர்பு கொள்ளுமாறு யாழ்.வர்த்தக சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

வடக்கு கிழக்கு உள்ளிட்ட மாகாணங்களில் தொழில் வாய்ப்பை வழங்க, பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்குத் தேவையான பண உதவி செய்ய யு.எஸ். எயிட் நிறுவனம் முன்வந்துள்ளது. 6 கோடி ரூபா வரை பணஉதவி வழங்குவதற்கு அந்த நிறுவனம் தயாராக உள்ளதால் தொழில் வாய்ப்பை ஆரம்பிக்கவுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.வர்த்தக சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு ஒன்று யாழ்.வர்த்தக சங்கத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இந்தத் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கும் பொருளாதாரத்தை முன்னேற்றுவதனை நோக்காகக் கொண்டும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசு சார்ரா அமைப்பான யு.எஸ்.எயிட் ஆனது பிக் பிளஸ் நிறுவனம் ஊடாக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. அதனை யாழ்.வர்த்தக சங்கம் நெறிப்படுத்துகிறது.

தொழில் முயற்சி ஆரம்பிப்பவர்கள் ஆண்களாகவும் இருக்கலாம் பெண்களாகவும் இருக்கலாம். முதலீடு செய்யும் தொகையின் 50 வீதத்தை குறித்த நிறுவனம் வழங்கும். அந்தத் தொகையை மீளச் செலுத்தத் தேவையில்லை. ஒருவர் 5 கோடிவரை முதலிட்டால் குறித்த நிறுவனமும் 5 கோடியை முதலீட்டாளருக்கு தரும். அவ்வாறு 6 கோடிவரை குறித்த நிறுவனம் பணம் தரும்.

தொழில் வாய்ப்புத் தொடங்குவதற்கு பணம் இல்லையென்று காத்திருப்பவர்கள், வசதியில்லாதவர்கள், வழிப்படுத்தல் இல்லாதவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அவ்வாறு தொழில் முயற்சியை ஆரம்பிக்கவுள்ளவர்கள் யாழ்.வர்த்தக சங்கத்துக்கு நேரடியாகச் சென்று தேவையான ஆலோசனைகளைப் பெறமுடியும். அல்லது 021 222 2367 அல்லது 021 222 8593 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெறமுடியும். அவ்வாறு விண்ணப்பிக்க விரும்புவர்கள் யாழ்.வர்த்தக சங்கத்தில் தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவ்வாறு பெற்று ஆரம்பப் படிவம் பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் சேர்க்கப்பட்டு தொடங்கவுள்ள தொழில் முயற்சிக்கான திட்ட வரைபுகள் பற்றிய ஆலோசனைகளை உரிய நிபுணத்துவரிடம் பெற்று விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் செப்ரம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி விடவேண்டும். எனவே தொழில் முயற்சியை ஆரம்பிக்கவுள்ளவர்கள் சில நாள்களுள் அல்லது இயன்றவரை விரைவாக இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளை யாழ்.வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்துதரும்.

அவ்வாறு விண்ணப்பிப்பவர்கள் அந்தத் தொழில் முயற்சியை ஆரம்பிக்கும் நிலப்பரப்பு சொந்தமானதா அல்லது குத்தகையா, அந்தத் தொழில் வாய்ப்பு ஆரம்பிப்பதற்கான ஆரம்ப முதலீட்டுப் பணம் முதலீட்டாளர் வைத்துள்ளாரா அல்லது வங்கிக் கடனா, கடன் வழங்கல் பற்றிய வங்கியின் ஆவணங்கள் என்பனவற்றையும் கவனத்தில் கொள்வார்கள்.

ஒரு தொழில் ஆரம்பிப்பதாக இருந்தால் அது என்ன வகையான தொழிற் முயற்சி, அதனால் எவ்வளவு வருமானம் கிடைக்கும், எவ்வளவு பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வர், எவ்வளவு பயன் கிடைக்கும், அதற்கு அவர்களது முதலீடு எவ்வளவு ஆகியவற்றை நிபுணர் மூலமாக ஆராய்வு செய்ய வேண்டும். அதனை வர்த்தக சங்கம் செய்துதரும்.

அவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட ஆவணத்தை செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிக் பிளஸ் நிறுவனம் ஊடாக யு.எஸ். எயிட் நிறுவனத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் அந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்து எதிர்வரும் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிப்பர். அதில் உங்கள் திட்ட முன்வைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா இல்லையா என்பன உள்ளிட்ட விடயங்களைக் கூறியிருப்பர்.

அந்தக் கடிதம் வந்த பின்னர் உங்கள் தொழில் முயற்சிக்கான வேலைகளை நீங்கள் ஆரம்பிக்கலாம். அதற்கு இயந்திரங்கள் தேவையா, என்ன வகை இயந்திரம் என்பன உள்ளிட்ட முழுமையான ஒப்பந்தம் ஒன்றைப் பெறுவதற்கான முழு ஆவணம் ஒன்றை அந்த நிறுவனத்துக்கு அனுப்ப வேண்டும். திட்ட நகல் பெறப்பட்டதும் ஆரம்ப ஒப்பந்தம் மற்றும் பணம் வழங்குவதற்கான நடவடிக்கை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். அது பரிசீலிக்கப்பட்டு அடுத்த வருடம் மார்ச் மாதம் முழுமையான ஒப்பந்தம் வரும். அவ்வாறு வந்தவுடன் அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு அடுத்த வருடம் டிசெம்பர் மாத்துக்க முன்னர் தொழில்முயற்சியை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும்.

இவற்றை நடைமுறைப்படுத்தும் போது வர்த்தக ரீதியாக எவ்வளவு தாக்குப் பிடிக்கும் திறன் அல்லது செல்வாக்கு, அதன்மூலமாக தொ[illegible] வுள்ள வேலைவாய்ப்பு எவ்வளவு, அவற்றுடன் தொடர்ந்து வரும் நல்ல விடயங்கள், முதலீட்டாளர்களது பணக் கோரிக்கை, மொத்த முதலீட்டின் அளவு, வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான முன்னுரிமை, தனக்குரிய தொழில் முதலீட்டை எவ்வாறு பெறுகிறார், அந்த நிறுவனத்தை நிர்வகிப்பவர் யார்? அவரது தராதரம், சூழல் பாகாப் பைப் பாதிக்காத தன்மை, கலாசார பாதுகாப்பு, இளைஞர் பங்களிப்பு, அவர்களது அனுபவம் ஆற்றல் என்பன கவனம் செலுத்தப்படும். அவ்வாறு ஆரம்பிக்கும் நிறுவனம் வறிய இடங்களில் ஆரம்பிக்கப் படுகின்றனவா என்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும். - என்றார்.

கடந்த முறை இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டபோதும் வடக்கு கிழக்கிலுள்ளவர்கள் அக்கறை காட்டத் தவறியதால் தென்பகுதியிலுள்ளவர்கள் அதனைப் பெற்று வடக்கில் தொழில் நிறுவனங்களை ஆரம்பித்துள்ளார்கள் என்றும் பலராலும் தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

ஏட்டிக்கு போட்டியாக நடந்துகொள்ளாது அனைவரும் இணைந்து செயற்படுங்கள்

அரச, தனியார் பஸ் சங்கங்களுக்கு அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை

கிளிநொச்சி, ஓக. 21

இரண்டு மாடுகளும் சேர்ந்து சரியாக வண்டில் இழுத்தால் தான் வண்டில் குறித்த இடத்திற்கு போய் சேர முடியும். ஒரு மாடு தலையை சாய்த்தாலும் வண்டில் நகராது. - இவ்வாறு அரச தனியார் பஸ் சங்கங்களுக்கு உபதேசம் கூறினார் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ப.டெனீஸ்வரன்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற அரச, தனியார் பஸ் உரிமையாளர்களுக்கிடையிலான முரண்பாட்டை அடுத்து நண்பகல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு வந்திருந்த வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இரு தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போக்கு வரத்து என்பது மக்களுக்கான சேவை என்பதை தனியார், அரச பேரூந்து உரிமையாளர்கள் மனதில் வைத்து கொள்ளவேண்டும். எனது அமைச்சு தனியார் பேரூந்து உரிமையாளர்களுக்கோ அல்லது அரச போக்கு வரத்து கழகத்திற்கோ சார்பானது அல்ல. எனக்கு மக்கள் சரியான நேரத்திற்கு தங்களுடைய போக்கு வரத்துகளை பூர்த்தி செய்யவேண்டும். தற்போது இலங்கைப் போக்குவரத்துக் கழகத்தினர், தனியார் பஸ் உரிமையாளர்கள் தெருவில் நின்று சண்டை பிடிக்கின்றனர். தடி எடுத்து அடிக்கின்றனர், இரும்பு கம்பி எடுத்து கொண்டு ஓடுகின்றனர். இது மக்களை வைத்து கொண்டு செய்யலாமா இது சரியா என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும். இலங்கை போக்கு வரத்து கழகத்தினர் தவறு செய்துள்ளனர் என்று தனியாரும், தனியார் பஸ் உரிமையார்கள் தவறு விட்டுவிட்டார்கள் என்று இ.போ.ச. வினரும் தெருவில் நின்று சண்டை பிடித்தால் பஸ்ஸின் உள்ளே இருக்கும் பயனிகளுக்குதான் பாதிப்பை ஏற்படுத்தும். அவ்வாறான ஒரு சம்பவம் அன்மையில் கிளிநொச்சியில் தான் இடம்பெற்றது. இது நாளாந்தம் இரு தரப்பினருக்கிடையிலும் இடம்பெற்றே வருகின்றது. இதை இப்படியே விட்டுவிடமுடியாது. இது நாளைக்கு மக்களுக்குதான் பிரச்சினை, மக்கள் எல்லாரும் ஒன்று திரண்டால் போக்கு வரத்து செய்யமுடியாது. எங்களுடைய சேவை மக்களை நோக்கியதாகதான் இருக்கவேண்டும்.

இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காவும் போக்கு வரத்தினுடைய நேர சூசிகளை மேற்கொள்வதற்காகவுமே அண்மையில் வடக்கில் 9 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்தேன். அவ்வாறு திட்டமிட்டு வேலைகளை செய்து வரும் போது அதை உடைத்து கொண்டு வேறு ஒரு பக்கத்தால் பிரச்சினைகளை வளர்த்துகொண்டு செல்வது தவறு. விட்டு கொடுப்பு இல்லாமல் ஏட்டிக்கு போட்டியாக நாங்கள் நடப்போமானால் நாளைக்கு எல்லாம் ஸ்தம்பிதம் அடைந்து ஒட்டு மொத்தத்தில் மக்கள் ஆதங்கப்பட்டு விசனப்படுகின்ற நிலைமைக்கு ஆளாக்கிவிடும். - என்றார். (ற-21)

பாலியல் துஷ்பிரயோகம்: அதிபர், பூசகர் மறியலில்

யாழ்ப்பாணம், ஓக.21

மாணவிகளை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் பாடசாலை அதிபர் மற்றும் ஆலய பூசகரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் பிரிவினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். அந்தச் செயற்றிட்டத்தின் கீழ் கைதடியில் உள்ள விழிப்புலன் மற்றும் செவிப்புலன் அற்றோர் பாடசாலையிலும் (நபீல்ட), பாடசாலை அதிபர் தலைமையில் பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தி அவ்வாறு ஏதும் நடந்தால் தெரிவிக்குமாறு கேட்டுள்ளனர். ஆயினும் அப்போது சிறுமிகள் எதுவும் கூறவில்லை எனினும் சிறிது நாள்களின் பின்னர் அந்தப் பாடசாலையைச் சேர்ந்த சிறுமிகள் அந்த அலுவலரை அணுகி தமக்கு அதிபரால் இழைக்கப்படும் கொடுமைகளை விளக்கிக் கூறியதுடன் முறைப்பாடும் செய்துள்ளனர். இதனையடுத்து சிறுவர் உரிமைகள் அலுவலர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தார்.

அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் குறித்த பாடசாலை அதிபரைக் கைது செய்யுமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார். அதிபரைக் கைது செய்த பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது அதிபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை சாவகச்சேரி புறநகர்ப் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் வழிபடச் செல்லும் பத்து வயதுச் சிறுமியை ஆலய பூசகர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிறுமி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பூசகரைக் கைதுசெய்த பொலிஸார் அவரையும் நீதிமன்றில் முற்படுத்தினார். வழக்கை விசாரித்த நீதிவான் பூசகரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)

முன்னறிவித்தல் இன்றி தடைப்பட்ட மின்சாரம்

முன்னறிவித்தல் இன்றி மின்சாரம் தடைப்பட்டதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளனர்.

வடமராட்சி பொலிகண்டி மேற்குப் பகுதியில் நேற்றுக் காலை நிறுத்தப்பட்ட மின்சாரம் பின்னிரவு வரை வழங்கப்படவில்லை .

ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சை நடைபெறவுள்ள சூழ்நிலையில் மின்சார சபையினரின் இத்தகைய செயற்பாட்டால் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதாக பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல தடவைகள் மின்சார சபையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதும் எவ்வித மான ஆக்கபூர்வமான பதிலும் வழங்கப்படவில்லை என்றும், மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் பெற்றோர் கூறினர்.

இதேவேளை தற்போது உயர்தரப் பரீட்சையும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-108)

இலவச கண் பரிசோதனை முகாம் நாளை

விஷன் கெயர் நிறுவனத்தினருடன் சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணி வரையும் நடைபெற உள்ளது. ஸ்ரான்லி வீதியையும் மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் தபாற் கந்தோர் வீதியில் உள்ள சம்பத் வங்கிக் கிளையில் இலவசக் கண் பரிசோதனை முகாம் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

556 பெண் வேட்பாளர்களில் 12 பேரே நாடாளுமன்றுக்கு

வீழ்ச்சி கண்டுள்ளது பெண் பிரதிநிதித்துவம்

கொழும்பு, ஓக.21

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்கு, 12 பெண் உறுப்பினர்கள் மட்டுமே தெரிவாகியுள்ளனர். தேர்தலில் பல்வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 556 பெண் வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர். இவர்களில் 12 பேர் மட்டுமே, நாடாளுமன்றத்துக்குத் தெரியாகியுள்ளனர். இவர்கள் அனைவரும், ஐ.தே.க. மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டவர்களாவர்.

மாவட்ட ரீதியாக 14 ஆசனங்களை வென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து இம்முறை ஒரு பெண் உறுப்பினரேனும் தெரிவாகவில்லை.

அதேவேளை, இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களில், கூடுதலான விருப்பு வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் தலதா அத்துகோரள பெற்றுள்ளார். இவர் 1 லட்சத்து 45 ஆயிரத்து 828 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை பெற்ற 48 வேட்பாளர்களில் தலதா அத்துகோரளவும் இடம் பெற்றுள்ளார். இரத்தினபுரி மாவட்ட வரலாற்றில் பெண் ஒருவர் பெற்றுக் கொண்ட அதிகூடிய விருப்பு வாக்கு இதுவாகும். அதேவேளை, கடந்த முறை நாடாளுமன்றத்தில் 13 பெண்கள் உறுப்பினர்களாக இருந்தனர். (ற)

போனஸ் ஆசனங்களுக்கு மைத்திரி- மஹிந்த பேச்சு

கொழும்பு, ஓக. 21

தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பும் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மொத்தமாக 12 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன. இவற்றைச் சரி பாதியாகப் பகிர்ந்து கொள்வது குறித்து பேசப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்துத் தேர்தல் செயலகத்தில் வைத்து இரு தரப்புக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

மஹிந்த தரப்பும் மைத்திரி தரப்பும் இரு வேறு தேசியப் பட்டியல் உறுப்பினர் பரிந்துரைகளை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதில் எந்த பட்டியலை ஏற்றுக் கொள்வது என்பது குறித்து இன்னமும் தேர்தல் ஆணையாளர் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு தரப்பும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளாவிட்டால் இந்தப் பிரச்சினை குறித்து நீதிமன்றின் உதவியை நாட நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது. (த)

பெரும்போக விதை நெல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 21

இந்த ஆண்டின் பெரும்போக நெற் செய்கைக்கான விதை நெல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மூவாயிரத்து ஐநூறு புசல் விதை நெல் கமநலசேவைகள் நிலையங்கள் ஊடாகவும் மற்றும் விதை உற்பத்தி சங்கத்தின் ஊடாகவும் செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பி.ஜி. 402 இனத்தைச் சேர்ந்த விதை நெல்லே கூடுதலாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டும் வருகின்றன.

கடந்த வருடத்தைவிட இந்தமுறை கூடுதலான விதை நெல்லை சங்கம் கொள்வனவு செய்துள்ளது. விவசாயிகள் தமக்கு தேவையான அளவு விதை நெல்லை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–17)

'19'ஐ எதிர்த்தவரும் 'அவுட்'

கொழும்பு, ஓக. 21

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக வாக்களித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான சரத் வீர சேகரவும் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அணி உறுப்பினரான இவர், பொதுத் தேர்தல் பரப்புரையின்போது போர் வெற்றியை மையப்படுத்தி தனது பரப்புரைகளை முன்னெடுத்திருந்தார்.

19ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது ஆளும், எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. 215 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்திருந்ததுடன், இலங்கை வரலாற்றில் பாரிய ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட முதலாவது சட்டமூலமாகவும் இது அமைந்திருந்தது. எனினும், இந்தச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஒரே ஒரு உறுப்பினர் சரத் வீர சேகரவாகும்.

இவர் இம்முறை திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

திகாமடுல்ல மாவட்டத்தில் சிங்கள வாக்குகள் அதிகம் உள்ள அம்பாறை தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 60,506 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றிருந்தது. எனினும், ஒட்டுமொத்த மாவட்டத்திலும் 89,334 வாக்குகளைப் பெற்று இரு ஆசனங்களைப் பெற்றதுடன், ஏற்கனவே இருந்த இரு ஆசனங்களை இழந்தது.

இதில் சரத் வீரசேகர 49,494 விருப்பு வாக்குகளைப் பெற்று ஐ.ம.சு.மு. பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்தன்மூலம் நாடாளுமன்ற வாய்ப்பை இழந்தார். இம்மாவட்டத்தில் ஏற்கனவே இருந்த அதாவுல்லா 16,771 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் எம்.பிக்கள் 23பேர் தேர்தலில் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

500,556 விருப்பு வாக்கு பெற்று புதிய சாதனை படைத்தார் ரணில்

கொழும்பு, ஓக. 21

இலங்கை வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக 5 இலட்சத்துக்கு மேல் விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற சாதனையை பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நிலை நாட்டியுள்ளார்.

1994 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 4 இலட்சத்து 64 ஆயிரத்து 588 வாக்குகளைப் பெற்று சாதனை புடைத்திருந்தார். இந்தச் சாதனையை கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 5 இலட்சத்து 556 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ4 இலட்சத்து 23 ஆயிரத்து 529 வாக்குகளைப் பெற்றுள்ளார். இது குருநாகல் மாவட்டத்தில் தேர்தல் ஒன்றில் பெறப்பட்ட அதிகூடிய விருப்பு வாக்காகவும் அமைந்துள்ளது.

(த)

அடிப்படைத் தேவைகளை முன்பள்ளிக்கு தாருங்கள்

அம்பலப்பெருமாள்குள மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.21

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் உள்ள முன்பள்ளியை புனரமைத்துத் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள அம்பலப்பெருமாள் குளத்தில் உள்ள முன்பள்ளி எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாது தற்காலிகக் கொட்டகை ஒன்றில் இயங்கி வருகின்றது.

அடிப்படை வசதிகள் எவையும் அற்ற நிலையில் சிறார்களால் மகிழ்வான கல்வியைப் பெறமுடியாது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற)

ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

தெற்கு அதிவேக வீதியின் கெலனிகம – தொடங்கொட பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியிலுள்ள 28ஆவது மைல் அருகே பெரும் விபத்துதொன்று நடந்துள்ளது.

இச்சம்பவத்தில் ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் தெற்கு அதிவேக வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிவேக வீதியின் கொழும்பு காலி வரையான ஒரு வழிப் பாதையில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர்ப்படுத்தும் முயற்சியில் போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவத்தில் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கும் பொலிஸார், முன்னால் சென்ற வாகனமொன்று சடுதியாக வீதியில் நின்றமையே இவ்விபத்திற்கு காரணம் என்று தெரிவித்துள்ளனர்.

(ற)

ஹிங்குராணை சீனி தொழிற்சாலை 20ஆண்டுகளின் பின் மீளத் திறப்பு

கொழும்பு, ஓக.21

கடந்த 20 வருட காலமாக மூடப்பட்டிருந்த ஹிங்குராணை சீனித் தொழிற்சாலையின் உற்பத்திப் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் திட்டத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த தொழிற்சாலை மூடப்பட்டதன் காரணமாக பணியின்றி இருந்த சுமார் 600 ஊழியர்கள், இந்த சீனித்தொழிற்சாலையின் மீள்திறப்பின் போது இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் தயாரானது

கொழும்பு, ஓக. 21

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் தற்போது கட்சிகளின் தேசிய பட்டியல் ஆசனங்களுக்கு உரியவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை இடம் பெறுகின்றது. இதன்படி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தனக்குக் கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய இருவரைத் தெரிவு செய்துள்ளது.

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் தெரிவுகளாக நாடாளுமன்றத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி மற்றும் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத் சந்திர மயாதுன்ன ஆகிய இருவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(த–10)

புனர்வாழ்வு ஆணையாளர் பதவியேற்பு

கொழும்பு, ஓக. 21

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜனக்க ரத் நாயக்க நேற்றுமுன்தினம் ராஜகிரிய புனர்வாழ்வு ஆணையாளர் நாயகக் காரியாலயத்தில் கடமைகளை பொறுப் பேற்றார்.

காரியாலய வளாகத்துக்குள் வருகை தந்த ஆணையாளர் நாயகத்தைச் சிரேஷ்ட அதிகாரிகள் வரவேற்றனர். அதனையடுத்து இடம்பெற்ற சமய நிகழ்வுகளைத் தொடர்ந்து கடமைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்கவின் மறைவையடுத்து இதுவரை நிலவிய இடவெளியை நிரப்பும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இறுதிப் போரின் போது சரணடைந்த 12ஆயிரம் முன்னாள் போராளிகளில் 11ஆயிரத்து 600 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீளிணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 594 சிறுவர் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டதுடன் ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சையிலும் தோற்றுவதற்கு இந்தத் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

ஐ.ம.சு.மு தோல்விக்கு மஹிந்தவே காரணம்

சொல்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஓக. 21

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற ஆசனங்கள் குறைவடைந்ததற்கு மஹிந்த அந்தக் கட்சியை நெறிப்படுத்த முன் வந்தது தான் மூல காரணம் என கருதுகிறேன் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்பொழுதே ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீண்டும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நான் ஏனைய மாவட்டங்களுடன் இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளிலும் முழு மூச்சாக ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளேன். நானும் கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஏனைய ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களும் இணைந்து ஒரு பலமான அணியாக இயங்கவுள்ளோம்.

இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. இது அந்தக் கட்சியினருக்கு மிகவும் கவலையளிக்கும். ஐக்கிய தேசிய கட்சியுடன் எங்களைப் போன்ற ஏனைய கட்சியினர் சிலரும் ஒத்துழைத்து அப்போதைய முன்னாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரை இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவிக்கு தெரிவு செய்தோம். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசியலிலிருந்து ஓய்வு பெற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சி நடவடிக்கைகளை முழுமையாக கையாள இடமளித்திருக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற ஆசனங்கள் குறைவடைவதற்கு மஹிந்த அந்தக் கட்சியை நெறிப்படுத்த முன்வந்தது தான் மூலகாரணம் என நான் கருதுகின்றேன்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தமது கட்சியை வேறு தலையீடுகள் இன்றி சரிவர நெறிப்படுத்தி நாம் எதிர்பார்க்கின்ற பலமான தேசிய அரசினூடாக போரின் பின்னரான சூழலில் முடியாது போன இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டை சுபீட்சத்தை நோக்கியும் ஐக்கியத்தை நோக்கியும் முன்கொண்டு செல்வார் எனத் திடமாக நம்புகின்றோம்–என்றார். (த–10)

தேசியப் பட்டியலுக்காக ஹக்கீமின் வீடு முற்றுகை

கொழும்பு, ஓக. 21

தேசியப் பட்டியலில் தமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களையும் நியமிக்குமாறு கோரி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கொழும்பு இல்லத்தைச் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்சி ஆதரவாளர்கள் முற்றகையிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பசீர் சேகுதாவூத், திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற எம்.எஸ்.தௌபீக், கல்குடாவில் போட்டியிட்ட றியாழ் கம்பஹாவில் போட்டியிட்ட ஷாபி ரஹீம் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசம் ஆகியவற்றுக்குத் தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குமாறு ஆதரவாளர்களினால் கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு இரண்டு ஆசனங்கள் வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் பெறுபேறுகள் அனைத்தும் அறிவிக்கப்பட்டதை அடுத்து தேசியப் பட்டியலுக்காக அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கொழும்பு இல்லத்தை ஆதரவாளர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

(த–10)

பாலமுனை ஹோமியோபதி வைத்தியசாலை பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய கோரிக்கை

அம்பாறை, ஓக.21

அம்பாறை, பாலமுனையில் அமைந்துள்ள அரசினர் ஹோமியோபதி வைத்தியசாலை போதியளவான அடிப்படை வசதிகளின்றி காணப்படுகின்றது என்றும் நீண்டகாலமாக நிலவும் பௌதீகவளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.எச்.எம்.அஷ்ரபின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டு கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இயங்குகின்ற இந்த வைத்தியசாலைக்கு நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, தீகவாபி, திராய்க்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து நாளாந்தம் சுமார் 80 நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் ஒரே யொரு பெண் வைத்தியரும் ஊழியர்களும் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர். வைத்தியசாலைக்கு சுற்றுமதில், மலசலகூட வசதி, தளபாடங்கள், வைத்தியர் தங்கும் விடுதி ஆகியவை இல்லாமையால் உத்தியோகஸ்தர்களும் நோயாளர்களும் சிரமத்தை எதிநோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் கூடிய விரைவில் கவனமெடுத்து இந்த வைத்திய சாலையை அபிவிருத்தி செய்து தருவதுடன், தேவையான ஆளணியினரை நியமிக்குமாறும் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக அங்கு கடமையாற்றும் பொறுப்பு வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவித்தபோது, இங்கு காணப்படும் பௌதீகவளப் பற்றாக்குறை மற்றும் போதிய வைத்தியர் இன்மையால் சிகிச்சை அளிப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. இந்த வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை சமமந்தப்பட்ட அதிகாரிகள் நிவர்த்திசெய்து தரவேண்டும்.– என்றார். (ற)

அ.அட்டையின்றி வாக்களிக்க சென்ற கொழும்பு முதல்வர்

கொழும்பு, ஓக. 21

தேசிய அடையாள அட்டையைக் கொண்டு செல்லாமையினால் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்காமல் திரும்பியுள்ளார்.

இந்தத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் மேயரின் மனைவியான பெரேஸா போட்டியிட்ட நிலையில் கணவனும் மனையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிக்கு வாக்களிக்கச் சென்றுள்ளனர். இதன்போது தனது தேசிய அடையாள அட்டையைக் கொழும்பு மேயர் கொண்டு செல்லவில்லை.

இந்த நிலையில் வாக்குச் சாவடியில் கடமையாற்றிய அலுவலர் தேசிய அடையாள அட்டையைக் காண் பித்து ஆள் அடையாளத்தை நிரூ பிக்குமாறு கோரியுள்ளார்.

இதற்கு என்னைத் தெரியாதா உங்களுக்கு? நான் தான் கொழும்பு மேயர்' என ஏ.ஜே.எம்.முஸம்மில் பதிலளித்துள்ளார். எனினும் ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என வாக்குச் சாவடியில் கடமையாற்றிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனை அவதானித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க,'இங்கு விளையாடாமல் வீடு சென்று தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருமாறு கொழும்பு மேயரிடம் தெரிவித்துள்ளார். அனைவருக்கும் சட்டம் சமன். பிரதமராகிய எனது அடையாள அட்டையும் இங்கு சோதனையிடப்பட்டது. இன்னும் நேரமுள்ளது. வீடு சென்று தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வந்து வாக்களியுங்கள் எனவும் பிரதமர் கூறியுள்ளார். (த–10)

உதய கம்மன்பிலவிடம் 2 மணி நேரம் விசாரணை

கொழும்பு, ஓக. 21

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குத் தன்னை அழைத்து 2 மணி நேரத்துக்கும் அதிகமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக, பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய நாட்டுப் பிரஜை ஒருவருடன் இணைந்து நிறுவனம் ஒன்றின் பணத்தை மேசடி செய்ததாகத் தனக்கெதிராக குற்றம் சுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்றுக் காலை அழைக்கப்பட்டிருந்த உதய கம்மன்பில, விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தன் மீது சேறுபூசும் நோக்கில் இவ்வாறு பொய்யான முறைப்பாடொன்றைச் சம்பிக்க ரணவக்க மேற்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் தன்னை விசாரணைக்காக அழைத்திருந்தபோதிலும் தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவுக்கிணங்க தேர்தல் முடிந்த பின்னர் நேற்று தன்னிடம் விசாரணைகளை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த)

தங்களது தோல்விக்கு மஹிந்தவே பொறுப்பு

சாடுகின்றனர் தோல்வியுற்ற ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள்

கொழும்பு, ஓக.21

தாம் தோல்வியடைந்தமைக்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் செயற்பாடுகளே காரணமென்று ஐ.ம.சு.மு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய எஸ்.பி.திஸா நாயக்க, திலங்க சுமதிபால, லக்ஷ்மன் செனவிரட்ண, பியசேன கமகே, விஜித் விஜயமுனி சொய்ஸா, ஜகத் புஷ்ப குமார உள்ளிட்டோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இதன்போது மஹிந்தவால் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளே தமது தோல்விக்கு காரணமென்றும், அதற்கு அவரே பொறுப்புக்கூற வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் மஹிந்தவின் தீவிர ஆதரவாளர்கள் பலர், படுதோல்வியடைந்துள்ளனர். (ற)

ரூ. 49 லட்சம் பணம் அரசுடமையாகியது

கொழும்பு, ஓக. 21

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்டவர்களால் பிணையாக வைக்கப்பட்ட 49 லட்சத்து 96 ஆயிரம் ரூபா பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போட்டியிட்ட 2498 வேட்பாளர்களின் பிணைப் பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் 201 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டிருந்தன. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டிருந்ததுடன் சுயேச்சைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அதிக வேட்பாளர்கள் கம்பஹா மாவட்டத்திலும் போட்டியிட்டிருந்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப்பட்டியலின் மூலமாக தென்மராட்சிக்கு உறுப்பினர்

தென்மராட்சி பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தமிழ் கூட்டமைப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.21

மிகச் சொற்ப வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்த தென்மராட்சி வேட்பாளர் க.அருந்தவபாலனுக்கு தேசியப் பட்டியல் மூலம் இடம் வழங்க வேண்டும் என கூட்டமைப்பின் செயலாளரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சோ.சேனாதிராசாவிடம் தென்மராட்சி பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

கூட்டமைப்பின் தலைவருக்கான வேண்டுகோள் மனுவையும் அந்த ஒன்றியம் மாவை சேனாதிராசாவிடம் கையளித்தது.

வேட்பாளர் அருந்தவபாலனின் அதி சயிக்கத்தக்க இறுதி நேரத் தோல்வி அறிவிப்பு தென்மராட்சி மக்களிடையே பெரும் கவலையையும் கொந்தளிப் பையும் ஏற்படுத்தியுள்ளது. மாணவர் கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், அதிபர் கள்,பொது அமைப்புக்கள் ஒன்று திரண்டு தமது உணர்வலைகளை வெளிப் படுத்தினர். தென்மராட்சி மண்ணின் உணர்வுகளுக்கு கூட்டமைப்பின் தலை வர்களும், கட்சிகளும் மதிப்பளிக்க வேண்டும் என்று அந்த ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் இடம் பெயர்ந்து வந்தது முதல், வடமராட்சி, வலிகாமம் என இலட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்த போது அவர்களைத் தாங்கித் துயர் துடைத்த மண் தென்மராட்சி. இறுதியாக தாமே இடம்பெயர்ந்து இடர் சுமந்து மீள் குடியேற்றத்தின் பின் பல்வேறு தேவைகளையும் ஈடு செய்ய வேண்டிய அவசியம் தற்போது இந்த மண்ணுக்கு உண்டு. எனவே தென்ம ராட்சி மண்ணிலிருந்து ஒரு நாடா ளுமன்ற உறுப்பினர் அவசியம் என்று அந்த ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,தென்மராட்சி முதியோர் பேரவை, தென்மராட்சி அதிபர்கள் சங்கம், தனி யார் கல்வி நிலைய ஒன்றியம், ஓட்டோ சங்கம், சனசமூக நிலையங்களின் சமாசம், தென்மராட்சி பாடசாலை களின் ஆசிரியர் சங்கங்கள், தென் மராட்சி அபிவிருத்தி ஒன்றியம் என இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் சேர்ந்து தமது கோரிக் கையை தமிழ்க் கூட்டமைப்புக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி யோர்கள் தமது வேண்டுகோளை சாக்குப்போக்குகள் கூறித் தட்டிக் கழிக்காமல் நிறைவேற்றித் தரவேண் டும் என்று அந்த அமைப்புக்களைச் சேர்ந்த பலரும் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

தமது கோரிக்கை தொடர்பாக தம் முடன் கலந்துரையாடுவதற்கு முன் தேசியப்பட் டியல் தொடர்பான இறுதி முடிவை எடுக்க வேண்டாம் என்ற கோரிக்கையையும் மாவை. சேனா திராசா மூலம் தலைவர் சம்பந்த னுக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ள னர்.

(ற-9)

இனவாத அரசியலுக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது

எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக் கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளருமான எம்.எஸ். எஸ். அமீர் அலி.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசியக் கட் சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட் டியிட்டு வெற்றிபெற்றுள்ள எம்.எஸ். எஸ்.அமீர் அலி தேர்தல் முடிவின் பின்னர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு ஒட்டமாவடியில் உள்ள தனது வீட்டில் ஆதரவாளர்கள் மத்தி யில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனவாதம் கூறி அரசியல் செய்பவர் களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இந்தத் தேர்தலில் நல்ல பாடம் கற் பித்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்து இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். இன வாதம் பேசிக்கொண்டு அரசியல் செய்பவர்களுக்கு மத்தியில் இனவாதம் பேசாமல் மாவட்டத்தின் அபிவிருத் திக்கும் இன ஒற்றுமைக்கும் 20 க்கு 20 என்ற 2020ஆம் ஆண்டை நோக் கிய எனது திட்டங்களுக்கு மக்கள் தந்த அதிகாரமாகவே எனது வெற்றியை நினைக்கிறேன். – என்று அவர் தெரி வித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–

எனது வெற்றிக்கு உதவிய மட்டக் களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் வாக்காளர்களுக்கும் என்னு டன் இணைந்து ஐக்கிய தேசிய கட்சி யில் போட்டியிட்ட அனைத்து வேட் பாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் களது ஒத்துழைப்புடன் இணைந்து மாவட்டத்தின் அபிவிருத்தியை மேற் கொள்வேன்.

எனது வெற்றிக்கு எதிராக செயற்பட்ட வர்கள் எல்லோரும் என்னை எதிரி யாகப் பார்த்துக்கொண்டு இருக்காமல் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒன் றிணைந்து செயற்படுவோம். அதற் காக என்னுடன் இணைந்து உங்களது நல்ல ஆலோசனைகளையும் தெரிவி யுங்கள். நாட்டில் 2015ஆம் ஆண்டு டன் ஏற்பட்டுள்ள நல்லாட்சியில் ஜனா திபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் வழிகாட்டிலில் மாவட்டத்தின் அபி விருத்தியை மேற்கொள்வேன்.– என் றார்.

(ற-10)

நல்லாட்சிக்காக மக்கள் வாக்களித்துள்ளார்கள்

கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.21

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நாட்டில் சமாதானத்தையும் சந்தோசமான வாழ்க்கையையும் விரும் பிய மக்கள் நல்லாட்சிக்கு வாக்களித் துள்ளனர். வாக்களித்த அனைவருக் கும் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன் – என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:–

நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நடந்து முடிந் திருக்கும் இந்தத் தேர்தல் நல்ல செய்தி ஒன்றை இந்த நாட்டுக்கும் உலகத்துக் கும் தெரியப்படுத்தியுள்ளது. மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டில் நல்லதொரு ஆட்சி இடம்பெற வேண்டும், அமைதியானதும் அதற்கேற்ற வாழ் வாதார நடைமுறையையும் புதிய அரசு குறைவில்லாமல் வழங்கும் என்ற நம் பிக்கையோடு வாக்களித்துள்ளனர்.

புதிய அரசு மக்களுக்கான சிறந்த ஆட் சியைச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆட்சியின் பங்காளர்களாக இணைந்து கை கொடுத்தவர்கள் சில லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இதர கட்சிகளும் மக்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மக்களுக்கான ஆட்சியாக இந்த ஆட் சியைப் பயன்படுத்த வேண்டும்.

சமூக நலன் கருதி மட்டக்களப்பு மற்றும் வன்னி மாவட்டத்தில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும், ஏனைய மாவட்டங்களில் கட்சி வேட்பாளர்களுக்கும் குறிப்பாக அம் பாறை மாவட்டத்தில் மூன்று ஆசனங் களையும் பெறுவதற்கு வாக்களித் தோருக்கும் வேட்பாளர்களாக கள மிறங்கி கட்சியின் வளர்ச்சிக்கும் சமூ கத்துக்காகவும் குரல் கொடுத்த வர்க ளுக்கும், தேர்தலில் வெற்றிபெற்ற வாக்களுக்கும் தனியே னான வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். – என்றுள்ளது.

(ற-10)

3 ஆம் திருவிழா

வெள்ளி மயிலேறும் வடிவேலா

வெள்ளிமயில் ஏறி வீதி வலம் வந்திடும்
வள்ளி மணவாளனே எம் வல்வினையைத் தீர்த்தருள்வாய்
நள்ளிரவில் சுடலை மிசை நடம் புரியும் நாதனவன்
அள்ளியெடுத்தரவணைக்கும் அணிசுரக்கும் பாலகனே
தெள்ளு தமிழ் காப்பவனே தேவர் துயர் தீர்த்தவனே
கள்ளருந்தி வண்டினங்கள் களித்திசைதான் பாடிவர
எள்ளளவும் குற்றமிலா எழில்பொழில் சூழ் நல்லையுறை
வள்ளல் தொழுதேத்தி நிற்கும் வடிவேலா வந்தருள்வாய்

வேலணையூர் சுகுமார்

அவலம் போக்கிட வருகிறான்

வீர சோழியத்தில் இலக்கண விளக்கம் தந்து
சுட்ட பழம் ஈந்து குறும்புத் தனம் காட்டி
ஔவைக் கிழவியை வாயூற வைத்து
தினைப்புனத்தில் கிழவனாய் வள்ளியை ஏமாற்றி
வேங்கை மரமாகி நின்று வேடிக்கை காட்டி,
யானை வருதென்று வள்ளிக்குப் பயம் காட்டி
பிரணவப் பொருள்தனை தந்தைக்கேயுரைத்து
கிரவுஞ்ச மலை துளைத்து வேல்வீரம் காட்டி
ஒயிலான மயிலிலே வேலோடு ஏறி
சூரனின் மார்பதனை இரு கூறாய் ஆக்கி
சேவலும் மயிலதையும் வெற்றிக் கொடியாக்கி
பழனி மலை மீதிலே ஆண்டியாய் நின்றவன்
நல்லூரில் குடிகொண்டு ஆட்சி புரிகின்றான்.
அழுது தொழும் அடியவர் தம்
அவலம் போக்கிடுமெம் முருகன்

நடன முருகன், யாழ்ப்பாணம்.

எல்லோருக்குமாய்க் கேட்கிறேன்

பாக்கள் ஆயிரம் பாடினாலும்
பஞ்சம் பசியோ தீர்ந்திடாது
ஆயிரம் தேர் இழுத்தாலும்
ஆறாத்துயர் மாறாது
குடிப்பதற்கு நீர் இல்லை
குளம் குட்டைகள் வற்றியே விட்டன
குற்றங்கள் குறையவில்லை
குடியிருக்க வீடில்லை
கால்நடைகள் பரிதவிப்பு
கண்டு கொள்வார் யாருமில்லை
பயிர் பச்சை தானுமில்லை
பார்க்கும் இடம் எதிலும்
நீர்தான் வேண்டுமப்பா
நிம்மதியாய் வாழ்வதற்கு
உன் அப்பன் தலையில் இருக்கும்
கங்கையைக் கவிழ்த்து விடு
பார் முழுதும் செழிப்பதற்கு
நம் நாடு சிறப்பதற்கு
எனக்காகக் கேட்கவில்லை
எல்லோர்க்குமாய்த் தானப்பா!

பாவரன், வவுனியா.

நல்லைக்கந்தனுக்கு
இன்று (21.08.2015) வெள்ளிக்கிழமை
மூன்றாம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அபி பென் வேல்ட்
112, காங்கேசன்துறை வீதி,
(H.S.B.C வங்கிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: வேலைப்பளுவால் சிரமம் ஏற்பட்டாலும், ஆதாயம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மித மான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்ப் பது நல்லது. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பில் ஈடுபடுவர்.

இடபம்: நல்லவர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை, சுமா ராகவே இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும்.

மிதுனம்: செயல்களில் நேர்மைக்குணம் நிறைந்திருக் கும். சமூகத்தில் செல்வாக்குப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

கடகம்: எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். உறவினர்களின் ஆதரவு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

சிங்கம்: முயற்சிக்கேற்ப பயன் கிடைக் கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறை வேறும். இயன்ற அளவில் பிறருக்கு உதவி செய்து மகிழ் வீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற வாய்ப்புண்டு.

கன்னி: மறைமுக எதிரிகளை இனம் கண்டு ஒதுங்கு வீர்கள். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை ஏற்படும்

துலாம்: உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண் டாகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப் பீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும்.

விருச்சிகம்: உங்களின் நற்செயலைப் பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், அமோக வளர்ச்சி ஏற்படும். சுப விடயத்தில் நல்ல முடிவை எட்டுவீர்கள். மனைவிவழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

தனுசு: குழப்பம் நீங்கி, மனத்தெளிவு காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

மகரம்: பெற்றோரின் ஆலோசனையை ஏற்று நடப் பீர்கள். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். செலவு கூடும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப காரியம் குறித்துப் பேச்சு நடக்கும்.

கும்பம்: பொதுநலப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடு படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு உயரும். அழகு சாதனப் பொருள் மீது நாட்டம் ஏற்படும். பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

மீனம்: மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பெண்கள் புத்தாடை, அணிகலன் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவு உண்டாகும்.

புகழ் வாய்ந்த நடிகர்களில் தமிழில் முதல் இடத்தில்

விஜய்

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை முதல்வரை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். அதுபோன்று வருடத்துக்கு ஒருமுறை... நடிகர்களில் யார் முதலிடம் என்று கருத்துக் கணிப்பு இடம்பெறும். பிரபல தென்னிந்திய ஊடகம் ஒன்று சம்பளம், புகழ், இளமை, நடிப்பு, வசூல், மக்கள் செல்வாக்கு உள்ளிட்டவைகளின் அடிப்படையில் கணிப்பு ஒன்றை மேற்கொண்டது. அந்தக் கணிப்பில் தமிழ் மற்றும் தெலுங்கு நடிகர்கள் மட்டுமே இடம் பெற்றனர். அதில் பங்குபெற்ற நடிகர்களில் தமிழ்த் திரையுலகில் இருந்து விஜய், அஜித், விக்ரம், தனுஷ், சிம்பு, சூர்யா, ஆர்யா, உள்ளிட்ட பிரபல நடிகர்களும்தெலுங்குத்திரையுலகில்இருந்துபிரபாஸ்,அல்லுஅர்ஜுன்,மகேஷ்பாபு,ராம்சரண்,ரவிதேஜா, பவன் கல்யாண் ஆகியோரும் பங்கேற்றனர். இவர்களில் முதல் 10 இடங்களை பிடித்துள்ள நடிகர்களின் பட்டியல் வெளியாகி யுள்ளது. இந்தப் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளார் பாகுபலி நாயகன் பிரபாஸ். பாகுபலியால் இவரின் மதிப்பு கூடியுள்ளது. 35 வயதாகும் பிரபாஸ் டோலிவூட்டின் ரிபல் யங் ஸ்டார் என்று அழைக்கப்படுகிறார். இளையதளபதி விஜய்க்கு 2 ஆவது இடம் கிடைத்துள்ளது. ஆனால் தமிழ் நடிகர்களில் இவர் தான் முதல் இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அல்லு அர்ஜுனனுக்கு 3வது இடம் கிடைத்துள்ளது. அண்மையில் வெளிவந்த இவரின் சன் ஒப் சத்தியமூர்த்தி உலகமெங்கும் நன்றாக வசூ லித்துள்ளது. இவருக்கு திருமணமாகியும் பெண் ரசிகைகள் அதிகம்.

டோலிவூட்டின் பிரின்ஸ் என்று அன்பாக அழைக்கப்படும் மகேஷ்பாபுவுக்கு 4 வது இடம் கிடைத்துள்ளது. இவர் அண்மையில் நடித்த செல்வந்தன் இவருக்கு நல்ல பெயரைப் பெற்று தந்துள்ளது. மகதீரா நாயகன் ராம் சரண்... 5 ஆவது இடத்தில் உள்ளார். ஆந்திர சூப்பர் ஸ்டார் நடிகர் சிரஞ்சீவியின் மகன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. 6 ஆவது இடத்தில் தனுஷ், 7 ஆவது இடத்தில் பவன் கல்யாண். 8 ஆவது இடத்தில் ரவி தேஜா, 9 ஆவது இடத்தில் விக்ரம், 10 ஆவது இடத்தில் அஜீத்குமார் ஆகியோர் உள்ளனர்.

இப்பிடி பண்ணிடிங்களேம்மா

இது என்ன குப்பையா? பக்கத்துவீட் டுக்காரன் வீடு கட்ட வச்சிருந்த சல் லிக்கல்ல? அட்டய போடுறதுக்கு பேருதான் தூய்மை இந்தியாவா.. என் னம்மா இப்பிடி பண்ணிடிங்களேம்மா.



கவலைப்பட ஏதுமே இல்லையேனு கவலையா இருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பின் வெற்றி தமிழரின் தீர்வுக்கு வழி

கலைஞர் கருணாநிதி நம்பிக்கை

சென்னை, ஓக. 21

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி, தமிழர்களின் நெடுங்காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு நல்ல வாய்ப்பாக அமையும் என தமிழக முன்னாள் முதலவரும் திமுக தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்–

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சிக் கூட்டணி, 45.7 சதவீத வாக்குகளைப் பெற்று 93 இடங்களிலும், ராஜபக்ஷவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி 42.4 சதவீத வாக்குகளைப் பெற்று 83 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ள நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு 14 இடங்களில் பெற்றி பெற்று, இலங்கையில் மூன்றாவது பெரும் கட்சிக்குரிய இடத்தைப் பெற்றிருப்பது முக்கியமானதொரு திருப்பமாகும்.

இந்தத் தேர்தலைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகப் பொறுப்பேற்க இருக்கிறார். அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ராஜபக்ஷ, இந்தப் பிரதமர் தேர்தலிலும் போட்டியிட்டு, வெற்றி வாய்ப்பினை இழந்துள்ளார். எனினும் அவருடைய கட்சி 83 இடங்களிலே வெற்றி பெற்றுள்ளது. தற்போது ஜனாதிபதியாக உள்ள மைத்ரிபால சிறிசேனா அறிவித்த 20 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி, இலங்கை விரைவில் ஜனாதிபதி ஆட்சி முறையிலே இருந்து மாறி, நாடாளுமன்ற ஜன நாயகத்துக்குத் திரும்பும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ள வெற்றி, புதிய பிரதமர் எடுக்கும் முடிவுகளை வடிவமைத்திடக் கூடிய நிலையில் அமைந்துள்ளதால், ஈழத் தமிழர்களின் நெடுங்காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகள் முன்னெடுத்துச் செல்வதற்கான நல்ல வாய்ப்பு உருவாகியிருக்கின்றது என நம்பலாம்.

எனவே இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வாழும் தமிழர்களுக்குச் சம உரிமைகளுடன் கூடிய கண்ணியமான அமைதியான நல்வாழ்வு அமைந்திட வேண்டுமென்ற எம்முடைய நீண்ட நாள் எண்ணம் நிறைவேறத்தக்க அளவுக்கு தற்போது அமையவுள்ள நாடாளுமன்றத்திலாவது ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்பட்டு புதிய விடியலுக்கு வழி ஏற்படும் என்ற விழைவினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

மஹிந்தவுக்கு திடீர் ஞானம் பிறந்துள்ளது

சுஜீவ சேனசிங்க கூறுகின்றார்

கடந்த 3 வருடங்களாக தாஜு தீனின் மரணம் விபத்து என்று கூறி வந்த மஹிந்த ராஜபக்ஷ தான் வெற்றி பெற்றதும், அதனை கொலை என்று நிரூபிப்பதாக கூறுகின்றார் என்று பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவிலியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தாஜுதீன் கொலைத் தொடர்பில் இன்று பல்வேறான கருத்துக்கள் வெளிவருகின்றன. இந்த கொலைக்கு சாட்சிகள் எவரும் இல்லை என டிலான் பெரேரா கூறுகின்றார்.

ராஜபக்ஷ அணியின் பலர் இது குறித்து கசப்புணர்வுடன் இருக் கின்றனர். அவரின் கொலை குறித்த உண்மை வெளிவருவதை அவர்கள் விரும்பவில்லை.

இதனைக் கைவிடுமாறும், அது கொலை அல்ல என்றும் அவர்கள் கூறுகின்றனர். அத்துடன் அது ஒரு விபத்து என்றே கூறுகின்றனர்.

வாகனம் மோதி தீப்பற்றிக் கொள்ளும்போது அதற்குள் இருப்போர் இறங்கி விடு வார்கள். தாஜுதீன் ஒரு றகர் வீரர். அவரது வாகனம் இடதுப்பக்கம் விபத்துக்குள்ளாகிய போது, அது தீப்பற்ற ஒரு மணித்தியாலமாவது சென்றிருக்கும்.

இந்த விபத்தின்போது தாஜுதீன் வாகனப் பட்டியை அணிந்தவாறு தீயில் கருகியிருக்கின்றார். ஆனால் அவரது பணப்பை 5 கிலோமீற்றர் தொலைவில் கிடைத்துள்ளது. இவ் வாறான சாட்சிகள் இருக்கும் போது முன்னைய அரசு 3 வருடங்களாக இதனை மறைத்துள்ளது. அவர்கள் ஏன் மறைத்தார்கள் என கேள்வி எழுப்புகின்றோம்.

இப்படியிருக்கையில் மஹிந்த ராஜபக்ஷ அந்த சம்பவம் ஒரு கொலை எனக் கூறுகின்றார். தான் இந்தத் தேர்தலில் வென்றால் தாஜுதீனின் மரணம் ஒரு கொலை என்பதை நிரூபிப்பேன் என அவர் கூறியுள்ளதாக செய்தி பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

3 வருடங்களின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ கனவு கண்டு எழுந்துள்ளார். – என்றார். (ற)

முதல்வர் கதிரைக்கான போட்டி வலுவடைகிறது

ஹரின், தயாசிறி, பிரசன்ன சபைக்கு தெரிவானதால்

கொழும்பு, ஓக 21

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பல மாகாண சபை உறுப்பினர்கள் வெற்றிபெற்றதை அடுத்து அந்த வெற்றிடங்களுக்குப் புதிய உறுப்பினர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதுடன் வடமேல், ஊவா மற்றும் மேல் மாகாணங்களுக்கான முதலமைச்சர்களுக்கான வெற்றிடங்களும் நிலவுகின்றன.

அந்த வகையில் கண்டி மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆன வேலுகுமார், மயந்த திஸாநாயக்க, லக்ஷ்மன் ஜயவர்தன ஆகியோர் வெற்றிபெற்றுள்ளமையால் அவர்களது வெற்றிடங்களுக்கு கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அந்த மூன்று பேரும் சிறுபான்மை இனத்தவர்களாவர். விருப்பு வாக்குப் பட்டியலில் 10,11,12ஆம் இடங்களில் இருந்த முத்தலிப் ஹாஜியார், ராஜரட்ணம் மற்றும் ஹிதாயத் சத்தார் ஆகியோரே மாகாணசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மத்திய மாகாண சபையின் சு.க. உறுப்பினரான அநுராத ஜயரத்ன நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் அதற்கான வெற்றிடமும் காணப்படுகின்றது.

அதேபோன்று, மேல் மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினர்களான மனோகணேசன், எஸ்.எம். மரிக்கார், முஜி பூர் ரஹ்மான், ஹர்ஜன ராஜ கருணா, காவிந்த ஜயவர்தன ஆகியோருடன், ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாகாண சபை உறுப்பினர்களான முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன் பில, நிமல்லான்சா, ஹிருனிகா பிரேமச்சந்திர ஆகியோரும், ஜேவிபி சார்பில் நளிந்த ஜயதிஸ்ஸவும் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களாக இருந்த சந்தித் சமரசிங்க, சுஜித் பெரேரா, துசிதா விஜயமான்ன ஆகியோர் இம்முறைப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், ஐ.ம.சு.மு. மாகாண சபை உறுப்பினர்களான தாரக பாலசூரிய மற்றும் துஷ்மந்த மித்ரபால ஆகியோரும் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமையால் சப்ரகமுவ மாகாண சபையிலும் வெற்றிடம் நிலவுகின்றது.

அதேபோன்று மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, வடமேல் மாகாண சபை முதலைமைச்சர் தயாசிரி ஜயசேகர, ஊவா மாகாண சபை உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் இம்முறை பொதுத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் அந்த மாகாணங்களுக்கான முதலமைச்சர் வெற்றிடமும் நிலவுகின்றது.

இதேவேளை, ஊவா மாகாண சபை உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் அதற்கான வெற்றிடமும் நிலவுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், அலிசாஹிர் மௌலானா, மன்சூர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் ஆகியோரும் இம்முறை பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அந்த மாகாண சபைகளிலும் வெற்றிடம் நிலவுகின்றது.

தென் மாகாண சபை உறுப்பினர்களான துலிப் வெத ஆராச்சி (ஐ.தே.க.), சாகல ரத்னாயக்க (ஐ.தே.க.) ஆகியோரும் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமையால் தென் மாகாண சபையிலும் வெற்றிடம் காணப்படுகின்றது. (த)

செப்ரெம்பர் முதலாம் திகதி ரணில், மைத்திரி விசேட உரை

கொழும்பு, ஓக. 21

செப்ரெம்பர் முதலாம் திகதி கூடவுள்ள 8ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் விசேட உரையாற்றவுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசின் கொள்கைத் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையின் போது முன்வைக்கவுள்ளார்.

மேலும், தேசிய அரசொன்றை அமைப்பதற்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தமது அரசின் கொள்கைத்திட்டம் குறித்து முதலாவது அமர்வில் உரையாற்றவுள்ளதுடன், தேசிய அரசுக்கான அழைப்பையும் அனைத்துக் கட்சிகளுக்கும் விடுக்கவுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி கொள்கைத் திட்டம் குறித்து விவாதமொன்றை நடத்துவதற்கும் முதலாம் திகதி ஜனாதிபதி மற்றும் பிரதமரால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், கட்சித் தலைவர்களும் அன்றைய தினம் உரையாற்றுவதுடன், புதிய அரசுக்குத் தமது வாழ்த்துகளைத் தெரிவிக்கவுள்ளனர்.

(த)

திருமண அழைப்பு

நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் ஆவணி
மாதம் 4 ஆம் நாள் (21.08.2015) வெள்ளிக்கிழமை
காலை 9.51 மணிமுதல் முற்பகல் 10.27 மணிவரையுள்ள துலா லக்கினமும்
சுவாதி நட்சத்திரமும் வளர்பிறை ஷஸ்டி திதியும் சித்த யோகமும்
கூடிய சுபமுகூர்த்தவேளையில்

திரு.திருமதி சிவகணேசன்
இந்திராதேவி தம்பதிகளின்
செல்வப்புதல்வன்
திருநிறை செல்வன்
பிரதீபன்
அவர்களுக்கும்

திரு.திருமதி தங்கவேல்
கௌரி தம்பதிகளின்
ஏகபுதல்வி திருநிறை செல்வி
நிஷாதனா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இல.5/9, ஆர்கோட் வீதி, காரம்பாக்கம் போரூர், சென்னை - 600116 இல் அமைந்துள்ள ஹோட்டல் சென்னை லீ பலஸ், லில்லி மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப்பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு.திருமதி சிவகணேசன் குடும்பம்
[illegible]

திரு.திருமதி தங்கவேல் குடும்பம்
காளிகோயில் வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.
தொ.பே.0091 9840 703507

(திருவிழாச் அழைப்பு)

(6x174)(45.73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்

கடமை நிறைவேற்றும் பாடரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களிலுள்ள கடமை நிறைவேற்றும் பாடரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான வினைமாகான வலய ரீதியாக வடமாகான கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் 04.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்," என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வெற்றிடவிபரம்

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (முறைசாராக்கல்வி)

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)

மன்னார் வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (கணிதம்)

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்)

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி)

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்)
உதவிக்கல்விப் பணிப்பாளர் (சமூகவிஞ்ஞானம்)

நிபந்தனைகள்

1. ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றுக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை ஆசிரியர் சேவை I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவராயிருத்தல். (இலங்கை ஆசிரியர் சேவை I இலுள்ள ஆசிரியர் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை 2-1 உடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோரிடமிருந்து பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை 2-1 இலுள்ள ஆசிரியர்களிடம் இருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்).
3. இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக்குறிப்பில் குறித்த பாடத்திற்கு தேவையென பிரகடனப்படுத்திய கல்வித் தகைமைகளைக் கொண்டவராயிருத்தல்.
4. முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தொழில் நுட்ப பாடத்தில் குறைந்த பட்சம் 05 வருட கற்பித்தல் அனுபவம் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது அப் பாட துறைசார்ந்த பாடத்தில் 03 வருட கற்பித்தல் அனுபவத்துடனான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
5. ஆரம்பக் கல்வி மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆரம்பக் கல்வி துறைசார்ந்த பாடத்தில் குறைந்த பட்சம் 05 வருட கற்பித்தல் அனுபவம் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது அப் பாட துறைசார்ந்த பாடத்தில் 03 வருட கற்பித்தல் அனுபவத்துடனான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

கல்வி அமைச்சக சுற்றறிக்கை இல 2008/3 இற்கு அமைய எழுத்துப்பரீட்சை முள்ளிகள், நேர்முகப்பரீட்சை முள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு கடமையை நிறைவேற்றும் உதவிக் கல்வி பணிப்பாளர் நியமனம் வழங்கப்படும்.

இ.இரவீந்திரன்
செயலாளர்

19.08.2015

கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

சங்கானை, தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றது. இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை III / இகநிசே II ஐ சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் அதிபர் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் உரிய விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் 04.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்,"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிபந்தனைகள்

1. ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றுக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல்.
2. இலங்கை கல்வி நிர்வாக சேவை III / III சேர்ந்த உத்தியோகத்தர் அல்லது இலங்கை அதிபர் சேவை I அல்லது அதிபர் சேவை II ஐ சேர்ந்தவராயிருத்தல்.

   இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தோரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

   இலங்கை அதிபர் சேவை I இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை II ஐச் சேர்ந்தவர்களிலிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ள கல்வி வலயத்தில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அதிபர் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து கல்வி அமைச்சக சுற்றறிக்கை இல 2008/3 இற்கு அமைய எழுத்துப்பரீட்சை முள்ளிகள், நேர்முகப்பரீட்சை முள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு கடமை நிறைவேற்றும் கோட்டக் கல்வி பணிப்பாளர் நியமனம் வழங்கப்படும்.

இ.இரவீந்திரன்
செயலாளர்.

19.08.2015

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 01 . 1929

மறைவு 24 . 08 . 2012

அமரர் **கலாகம்மா சிவசம்பு** (மண்டைதீவு)

தீதி அபரடச சுத்தமி 21.08.2015

பாசத்தின் உறைவிடமே அம்மா
ஈர விழிகளுடன் உங்கள் முகம் பார்த்து
மூன்றாண்டுகள் சென்றதம்மா
உங்களுடன் வாழ்ந்த அந்தம்
பகலமபான நினைவுகள் என்றும் மறக்காது
அம்மா என அழைக்க
அவனியிலே நீங்கள் இல்லை எனினும்
ஆருயிர்த் தாயே எம் நினைவுதனில்
அழியாமல் நீங்கள் இருப்பீர்கள் எம் தெய்வமாக

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

குடும்பத்தினர்.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்

1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடம் நிரப்புவதற்கான விண்ணப்பம் வடமாகான கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றது.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பத்தைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் **2015.08.28** ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்," என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் மூன்று (03) வருட சேவையை முழுமையாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
   a) பொருத்தமான அதிபர் தரத்திலுள்ள பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கு இது பொருத்தமற்றது. (உதாரணமாக இ.அ.சே I ஐச் சேர்ந்த ஒருவர் தரம் II, III பாடசாலையில் கடமையாற்றிக்கொண்டிருப்பின், அவர் விண்ணப்பிக்க முடியும்)
   b) பிரதி அதிபராக, பகுதித் தலைவராக மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்படாதுள்ள இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு இது பொருத்தமற்றது.
3. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளில், குறித்த கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. பா/ஒலுமடுவிலுள்ள கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் முல்லைத் தமிழ் பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரிகள் தங்கள் விருப்பப் ஒழுங்கு முறைக்கு அமைய ஆகக்கூடியது மூன்று பாடசாலைகளுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.
6. ஏழு வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் அதிபராக கடமையாற்றுபவர்கள் (கடமைநிலையிலும் அதிபராக கடமையாற்றிய சேவைக்காலம் உட்பட) கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வி அமைச்சின் தொழுத்த தேதி சனலின் தேர்முகப்பரீட்சை முளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு சேவை நிலையம் வழங்கப்படும்.
மேற்படி தகவல் தெரிவு செய்தல் தொடர்பாக வடமாகாண கல்வி செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

இல	வலயக் கல்வி அலுவலகம்	பாடசாலையின் பெயர்	வகை
1	தீவகம்	பா/தெற்குதீவு மகா வித்தியாலயம்	1C
2	யாழ்ப்பாணம்	பா/இடைக்காடு மகா வித்தியாலயம்	1C
3	யாழ்ப்பாணம்	பா/ஒஸ்மானியாக் கல்லூரி	1AB
4	வலிகாமம்	பா/இணுவில் இந்துக் கல்லூரி	1C
5	வடமராட்சி	பா/அமரர்.வை.சி.தக்காபாடசாலை	1C
6	வடமராட்சி	பா/உடுத்துறை மகா வித்தியாலயம்	1C

இ.இரவீந்திரன்
செயலாளர்.

2015.08.20

கெருடமடு ஆடி அமாவாசை நிகழ்வு

முல்லைத்தீவு, ஓக. 21
வரலாற்றுச் சிறப்புமிக்க கெருடமடு ஆடிஅமாவாசை தீர்த்தோற்சவ நிகழ்வு கடந்த வாரம் வியாழக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள மன்னாகண்டல் கிராமத்தை அண்டிய கெருடமடு ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ நிகழ்வு மாலை 5 மணிக்கு ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரர் ஆலயத்திலிருந்து வேகாவனேஸ்வரர், பூலோக நாயகி குடும்ப சமேத ராய் எருது வாகனத்தில் ஆரோகணித்து ஒட்டுசுட்டானில் இருந்து வீதி உலாவர முருகனுடைய வேலாயுதத்தை தலையில் சுமந்தவாறு அடியார்கள் கூட்டம் பின் தொடர கெருடமடு பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்தது.
விசேட பூசை வழி பாடுகள் நடைபெற்று முத்துச்சப்பரத்தில் வீதி உலாவரும் காட்சி மிக அற்புதமாக இருந்தது.
அன்றிரவு விசேட கலைநிகழ்வும் இடம் பெற்றது.
மறுநாள் காலை இறந்தவர்களுக்கான பிதிர்க்கடன்களை முடித்த அடியார்கள் அமாவாசை கூடும் நேரத்தில்கொண்டு வந்த வேலாயுதத்துடன் தீர்த்தமாடினர் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.
வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக இடம்பெற்றது.
(ற-600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரில் நகை திருடிய பெண் சிக்கினார்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இரண்டரைப் பவுண் நகை திருடப்பட்டுள்ளது நகை திருடிய வர்களில் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் காலை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது. ஆலயத்துக்கு வந்திருந் திருந்த பெண் ஒருவரிடம் புத்தளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர்நகைகளை திருடியுள்ளார். திருடியவர்களில் ஒரு பெண்ணை பொலிஸார் ஆலய வளாகத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் தற்போது விசா ரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் அவரை முற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்கள் தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும், தமது உடமைகளை பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-106)

வெவ்வெறு விபத்துகளில் ஐவர் காயம்

தென்மராட்சி, ஓக.21

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். சாவ கச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியில் சைக்கி ளில் வந்த வயோதிபரை வேகமாக வந்த ஓட்டோ மோதியதில் சரசாலை வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (வயது-65) என்பவரும், சாவகச்சேரி கச்சாய் வீதி, யில் நடமாடும் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட ஓட்டோவொன்று வந்த ஓட்டோ வீதியில் சைக்கி ளில் சென்ற சிறுவனை மோதியதுடன் எதிரே வந்த ஓட்டோ மீதும் மோதி யதில் அதில் பயணித்த பெண் பாண் வியாபரத் தில் ஈடுபட்ட விற்பனை யாளர் சைக்கி ளில் வந்த சிறுவன் ஆகியோர் காய மடைந்தனர். இந்த விபத்தில் தலையில் காய மடைந்த சாவகச் சேரி பெரியமாவடியைச் சேர்ந்த தர்மேந்திரன் சகீலா (வயது-26) சைக் கிளில் வந்தசாவகச்சேரிகச்சாய் வீதியைச் சேர்ந்த லக்ஸ்மணன் கோல்டன் (வயது-13) பாண் வியா பாரத்தில் ஈடுபட்ட இதே இடத்தைச் சேர்ந்த கேச வன் அனிஸ்ரன் (வயது -20) ஆகியோரும், நுணாவில் கிழக்கு ஏ-9 வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதி யின் குறுக்கே ஓடிய நாயு டன் மோதி விபத்துக்குள் ளானதில்மோட்டார்சைக் கிளில் பயணித்த நுணா வில் மேற்கைச் சேர்ந்த நிர்மலன் விதுஷா (வயது -22) என்ற பல்கலைக் கழக மாணவியும் காயம டைந்தனர். காயமடைந்த வர்கள் சாவகச்சேரி வைத் திய சாலையில் நேர்க்கப் பட்டு, தர்மேந்திரன் சகீலா என்பவர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.(ற-9)

வேலையாள்கள் தேவை

சுத்திகரிப்பு பணிக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. வயதெல்லை 25-45 இற்கு இடைப்பட்டோர் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களில் (62391) (45.3.6) வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 077 363 9388, 077 355 0849

தவறவிட்டது

கோ. திவாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (750084238v) கன்னாகத்திற்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்த தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: 077 634 1277

A/L இரசாயனம்/உயிரியல்

இலற்றிக்கான Exampool பரீட்சை தடகம் விதைகளைக் குன்டு. தோல்/ விசாகா இம் முறை விளாத்தாள்கள் மற்றும் தனி/குழு வகுப்புக்கள்

சிங்கம் மாஸ்டர்: 077 773 0840

விடு வாடகைக்குண்டு

இல.94, நல்லூர் குறுக்கு வீதியில் 2000 சதுரஅடி கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், அரசதிணைக்களங்கள் விரும்பத்தக்கது. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு: 077 668 1547

வாடகை அடிப்படையில் வான் பொறுப்பதரிகாரை கேள்வி விலை கோருதல்

சாகசம் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்.

கட்டடங்கள் திணைக்கள பிராந்திய அலுவலகமான முல்லைத்தீவு நிறைவேற்று எந்திரி அலுவலக பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1998 அல்லது அதற்கு பிற்பட்ட வான் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2015.09.03 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னராக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எந்திரி.செ.மோகனதேவன்
தலைவர்,
பெறுகைக்குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 021 222 8091

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்

மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.30 / 2.30 / 6.30

சில்வர் 10.15 / 2.15 / 6.15

ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk

வீடு வாடகைக்கு உண்டு

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கும் அச்சுவேலி மத்திய கல்லூரிக்குமிடையிலுள்ள புத்தம் புதிய வீடு வாடகைக்குண்டு.அரச சேவையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. இருவாரத்திற்குள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 8172931
021 226 4002

(58515.3.5.7)

சாவகச்சேரி பல.தொ.கூ.சங்கம் கிளைக்குழு தெரிவிற்காக வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர்பட்டியல்

31.07.2015 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பின் பிரகாரம் அங்கத்தவராக இணைந்து ஒருவருடம் பூர்த்தி செய்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல்கள் கிளைகளிலும் தலைமை அலுவலகத்திலும் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படுகின்றது. இவற்றில் ஏதேனும் திருத்தங்கள், மாற்றங்கள், ஆட்சேபனைகள் இருப்பின் 07.09.2015ஆம் திகதிக்கு முன்னர் சங்க செயலாளருக்கு எழுத்தில் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். தற்போது சங்கத்தின் செயற்படாமல் அருகில் உள்ள கிளைகளுடன் இணைக்கப்பட்ட பின்வரும் கிளைகளின் பெயர்ப்பட்டியல்களை இணைக்கப்பட்ட கிளைகளிலும் தலைமைக்காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

இயங்காத கிளைகள்	நற்போது இணைக்கப்பட்டுள்ள கிளையின் பெயர்
கிளை இல 02 - சாவகச்சேரி தெற்கு	கிளை இல 01 - தென்மராட்சி
கிளை இல 03 - நுணாவில் கிழக்கு	கிளை இல 01 - தென்மராட்சி
கிளை இல 04 - நுணாவில் ஜோதி	கிளை இல 05 - கைதடி நுணாவில்
கிளை இல 06 - மீசாலை கிழக்கு	கிளை இல 19 - மீசாலை மேற்கு
கிளை இல 08 - மலர்மகள்	கிளை இல 07 - வேரகேணி
கிளை இல 12 - சரசாலை தெற்கு	கிளை இல 13 - சரசாலை வடக்கு
கிளை இல 16 - சாவகச்சேரி வடக்கு	கிளை இல 01 - தென்மராட்சி
கிளை இல 17 - வேம்பிராய்	கிளை இல 18 - மீசாலை வடக்கு
கிளை இல 20 - சாவகச்சேரி வட கிழக்கு	கிளை இல 21 - சங்கத்தானை

செயலாளர்(பதில்)
நெரியாளர் குழுகட்டளைப்படி.

PATRICIAN INSTITUTES
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 07.09.2015

I. Computer course:
- A. Information & Communictication Technology (ICT) (O/L மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படுகின்றன) — Duration 4 months
- B. Advanced in Computer Programming — Duration 8 months
- C. Diploma in Microsoft Office — Duration 4 months
- D. Diploma in desk top Publishing — Duration 4 months
- E. Diploma in Video Editing — Duration 4 months
- F. Diploma in Type Setting — Duration 6 months
- G. Diploma in Computerized Accounting — Duration 4 months
- H. Diploma in Software Engineering — Duration 4 months
- I. Diploma in Micro media — Duration 6 months
- J. Diploma in Web Multimedia — Duration 4 months
- K. Professional Diploma in Graphic Design — Duration 4 months
- L. Computer Hardware Technology — Duration 4 months
- M. Internet & Email — Duration 3 months
- N. General Information Technology (GIT) — Duration 4 months

(கணினி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில தட்டெழுத்து (ENGLISH TYPING) தமிழ் தட்டெழுத்து (TAMIL TYPING) இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

II. Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) Duration 6 months
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

III. Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) — Duration 6 months
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

IV. Central motor Mechanism (Petrol & Diseal வாகனங்கள், மோட்டார் வாகனம் திருத்துதல்) — Duration 6 months

V. Central Electrician (Wiring & Re - Winding) ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங் — Duration 6 months

VI. Lathe Machine Operation (Milling & Machine, Shaping Mechine என்பன கற்றுக்கொடுக்கப்படும்) (கடைச்சல் இயந்திரம் பயிற்சி) (On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VII. Carpentery (With use of Machinery மரவேலை (On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VIII. Refrigeration and Air Conditioning — Duration 6 months

IX. Motor Cycle Mechanism — Duration 6 months

குறிப்பு: 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு: Registrar, Patrician Institutes (4.12.2014)
61, (39), St.Patrick's Road, Jaffna.
T.P. 021 222 6148, Fax: 021 222 6148
Email: Patricianjaffna@yahoo.com

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபை பதிவு இல:407

விநாயகர் அடியார்களே!

மேற்படி கோயில் அடியார்களின் நெடுங்கால வேண்டு கோளுக்கு இணங்க கோயிலுக்கு ஒரு திருப்பணிச்சபையை பல இடர்ஞ் சல்கள்,எதிர்ப்புகள் மத்தியில்அயராத உழைப்பால் ஓர் இலங்கை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட திருப்பணிச்சபை கைலா சநாதரின் அருளால் இனிதே நிறைவேறியது.

திருப்பணிச் சபையால் மேற்கொள்ள இருக்கும் சில முக்கிய திருப்பணிகள்

- *இராஜகோபுரம் அமைத்தல்
- *பிள்ளையாருக்கும் சிவனுக்கும் உள்ள கொடித்தம்ப மண்டபம் புனரமைத்தல்.
- *கோயிலுக்கு சுற்றுமதில் அமைத்து வர்ணம் பூசுதல்
- *அம்மன் வாசல் புனரமைத்தல்
- *கோயில் பூந்தோட்டம் புனரமைத்தல் மற்றும் கோயிலில் உள்ள சகல திருப்பணிகளும் எதிர்வரும் காலங்களில் திருப் பணிச் சபையால் மேற்கொள்ளப்படும்.

மேற்படி திருப்பணிக்கு உங்களால் இயன்ற உதவி களை வேண்டி நிற்கின்றோம்.

முக்கிய அறிவித்தல்

நன்கொடை வழங்க விரும்பும் அடியார்கள் வழங்கப்படும் நன்கொடைக்கு பற்றுச்சீட்டை திருப்பணிச் சபையிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும். எக்காரணத்துக்கும் கோயில் பூசகரிடம் நன்கொடை வழங்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி வைப்பு:-8157008651
Nallur kailasappillaiyar kovil Trust
Swift. Code- cceylklx
Commercial bank.

திருப்பணிச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப தகராறு காரணமாக மகனை வெட்டினார் தந்தை

யாழ்ப்பாணம், ஓக. 21

தந்தையின் கத்தி வெட்டுக்கு இலக்காகி காலில் படுகாயமடைந்த நிலையில் அவரது மகனான 15 வயது மகன் சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

விசுவமடு பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சிறுவனே கத்தி வெட்டுக்கு இலக்கானான்.

அவரது குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு ஒன்றில் தலையிட்டதன் காரணமாக கோபமடைந்த தந்தை குறித்த சிறுவனைக் கத்தியால் வெட்டியுள்ளார் என்று கூறப்படுகிறது. காயமடைந்த சிறுவன் உடனடியாக தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-4,10)

எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும்
உரிய வன்னி வாழ் வாக்காளப் பெருமக்களுக்கு
அன்பு கலந்த நன்றிகள்

பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

சொல், நேர்மை, ஈகைகுணம்,
செயல்வீரம் கொண்ட
உங்கள்

கே. கே.
மஸ்தான்

இந்தப் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்ட மக்கள் அளித்த தீர்ப்பை தலை வணங்கி சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்கின்றேன். மிகக் குறுகிய காலத்தில் என்னுடைய சேவையை மதித்து நாடாளுமன்ற உறுப்புரிமையை வழங்கி உங்களுக்கு சேவை செய்ய அளித்த வாக்காளர் பெருமக்களுக்கு என்றும் அன்பு கனிந்த நன்றிகள். எத்தனையோ கட்சிகள் போட்டியிட்ட இன்றைய அரசியற் சூழ்நிலையில் எனக்கு நீங்கள் தந்த அங்கீகாரத்தை நான் மறக்கமாட்டேன். எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வின் மேம்பாட்டுக்காகவும் கூட்டுச்சத்திற்காகவும் எமது மக்களின் அரசியல் உரிமைக்காகவும் அவற்றை உறுதி செய்வதற்காகவும் நான் செயற்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

நன்றி

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு

நன்றி நவில்கிறேன்

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில்
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில்
இலங்கை தமிழரசு கட்சி சார்பாக வன்னி தேர்தல்
மாவட்டத்தில் இலக்கம் 3ல் போட்டியிட்ட
இ.சாள்ஸ் நிர்மலநாதன்
ஆகிய என்னை
வன்னி மாவட்ட வேட்பாளர்களில்
அதிகூடிய விருப்பு வாக்குகளால் (34620)
முதன்மை பெற வைத்து வன்னி மாவட்டத்திலிருந்து
பாராளுமன்றத்திற்கு உங்கள் பிரதிநிதியாக
அமோக வாக்குகளால் வெற்றியடையச் செய்த
மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா
வாழ் மக்களுக்கு எனது மனம் நிறைந்த
நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தமிழர்களின் தாகம்
வடக்கு கிழக்கு இணைந்த தாயகம்"

என்றும் உங்கள்
இ.சாள்ஸ் நிர்மலநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்
(வன்னி மாவட்டம்)

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் அரையாண்டு சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி, ஓக.21

தென்மராட்சி கல்வி வலயத்தின் அரையாண்டுச் சஞ்சிகையான 'தென்மதி- 7' அண்மையில் வெளியிடப்பட்டது.

வேள்ட் விஸன் நிறுவன அனுசரணையுடன் வலய சஞ்சிகை வெளியீட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகையை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் வெளியிட்டு வைத்தார்.

2015 ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதிக்குரிய இந்தச் சஞ்சிகை அறிவியல்சார் சிந்தனைகளுக்கு வலுவூட்டத்தக்கதான மாணவர்களினதும், துறைசார் வல்லுநர்களினதும் ஆக்கங்களைத் தாங்கியதாக வெளியிடப்பட்டுள்ளது. இளம் எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்து அறிவியல் சிந்தனைகளைப் பரப்புவதை தலையாய நோக்கமாகக் கொண்டு இந்தச் சஞ்சிகை வெளியிடப்படுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரத்தில் பயில்கின்ற கணிதம் விஞ்ஞானம், தொழில் நுடபத்துறை மாணவர்களினதும் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களினதும் சிந்தனைகளுக்கு உரமூட்டக் கூடிய கட்டுரைகள் வெளிவர வேண்டும் என்ற உயரிய நோக்குடன் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலில் 'பாதுகாப்பான இணையத் தேடலும் தமிழ்மொழிமூல இலத்திரனியல் கற்கைக்கு உதவும் இணையதளங்களும் ஒரு நோக்கு', 'விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞான ஆசிரியர்களுக்கான களப் பயணம்', 'பல்கலைக் கழகக் கல்லூரிகளும் கற்கை நெறிகளும்', 'ஆரம்பக் கல்வியில் ஜீசீரி பாடத்தைக் கற்பித்தலும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியும்', 'க.பொ.த. உயர்தரப் பொறியியல் தொழில் நுட்ப பாடக் கற்கையில் ஆய்வுகூட செயல்முறையின் முக்கியத்துவம்', 'உயர்கல்வியில் விஞ்ஞானத்தின் பங்கு', 'தொழில்வழிகாட்டல் கல்வியின் அவசியம்' போன்ற ஆக்கங்களை உள்ளடக்கியதாகச் சஞ்சிகை உருவாக்கப்பட்டுள்ளது. (ற-9)

அரச பொது ஊழியர் சங்கம் இன்று வடக்கு முதலமைச்சருடன் பேச்சு

அம்பாறை, ஓக.21

வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை தொழிற்சங்கப் பேச்சு ஒன்றை நடத்தவுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள முதலமைச்சரின் அமைச்சு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பும் பேச்சும் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் சார்பில் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் தாய்ச்சங்கப் பொதுச்செயலாளர் எம்.எம்.ஏ.வஹாப், பொருளாளர் என்.சத்தியமோகன் மற்றும் வடமாகாண இணைப்பாளர் எம்.மகேஸ்வரன், வன்னி மாவட்ட இணைப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.சற்குணராஜா, வவுனியா மாவட்ட செயலாளர் கே.கோல்டன், வடமாகாண மேலதிக இணைப்பாளர் இ.சித்திரன், யாழ் மாவட்ட செயலாளர் மு.சிவசண்முகராஜா, யாழ் மேலதிக மாவட்ட இணைப்பாளர் பி.பொன்னம்பலம், யாழ் மாவட்ட ஆலோசகர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாகாண உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் பதவி உயர்வு மற்றும் பிரச்சினைகள், வடமாகாண சபை அமைச்சுகளுக்கான ஆலோசனைச் சபைகள் நியமித்தல், கல்வித் திணைக்கள ஊழியர்களின் பதவியுயர்வு மற்றும் பிரச்சினைகள், உள்ளூராட்சி மன்ற ஆட்சேர்ப்பு திட்டங்களில் மாற்றங்கள் செய்தல் என்பன உட்பட 15 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் இந்தப் பேச்சு நடைபெறவுள்ளது என்று சங்கப் பொதுச்செயலாளர் எம்.எம்.ஏ.வஹாப் தெரிவித்தார். (ற-30)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு மாடுகள்

தென்மராட்சி ஓக.21

கால்நடை திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 35 குடும்பங்களுக்கு மாடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 35 குடும்பங்களைச் சேர்ந்த வர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நேற்று தென்மராட்சி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (ற-9)

பெருந்திருவிழா

தென்மராட்சி ஓக.21

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் இடம்பெறும். (ற-9)

அலங்காரத் திருவிழா

பளை, ஓக.21

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் திருவிழாவில் வெண்ணெய் திருடுதல், துகில் திருவிழா, சயனத் திருவிழா, மஹாகம்சன் போர், வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா ஆகியவை இடம்பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆழியவளை கொடுக்குழாய் கடலில் சமுத்திரத் தீர்த்தமும் மறுநாள் 30ஆம் திகதி ஆலய தாமரைத் தடாக தீர்த்தமும் இடம்பெறும். (ற-9)

கும்பாபிஷேகம்

பளை, ஓக.21

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஐந்தாம் பனை பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்த மண்டபத்துக்கான கும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிசேக கிரியைகள் நேற்றுக் காலை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ற-9)

பாராட்டும் வாழ்த்தும்

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில்
வெற்றிவாகை சூடிய வட, கிழக்கு மாகாணங்களின்
தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற
உறுப்பினர்கள் 14 பேருக்கும் பாராட்டுக்களையும்
வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எம் இனத்தின் அபிலாசைகளையும்,
உரிமைகளையும் வரும் ஆண்டுகளில்
வென்றெடுத்து தருவீர்கள் என வாழ்த்தி நிற்கும்.

பருத்தித்துறை, இன்பர்சிட்டி கிராம
முன்னேற்றச்சங்கம்,
கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்,
சனசமூக நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வருகிறது அன்ரோயிட் மாஸ்மலோ (Android Marshmallow)

கூகுள் நிறுவனத்தின் அன்ரோயிட் இயங்குதளமானது தற்போது அதிகளவான மொபைல் சாதனங்களில் பயன்படுத்தப்பட்டுவருவது அனைவரும் அறிந்ததே.

இந்த இயங்குதளத்தின் ஒவ்வொரு பதிப்பையும் அந்த நிறுவனம் உணவுப் பண்டங்களின் பெயர்களைப் பயன்படுத்தி அறிமுகம் செய்து வந்தது.

இந்த நிலையில் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ள அன்ரோயிட் 6.0 பதிப்புக்கு Android Marshmallow அல்லது Android M (அன்ரோயிட் மாஸ்மலோ) என பெயரிட்டுள்ளது.

தற்போது சோதனையில் இருக்கும் இந்த இயங்கு தளப்பதிப்பில் பல்வேறு புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய பதிப்பில் காணப்பட்ட தவறுகளும் நீக்கப்பட்டு வருகின்றன.

இந்தப்பதிப்பானது, இன்னும் சில மாதங்களில் மொபைல் சாதனங்களில் தவழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

களமிறங்கும் புதிய இயங்கு பொறி

ஸ்மார்ட் உலகை ஆண்டு கொண்டிக்கும் அப்பிள் அல்லது ஆண்ட்ராய்ட் இயங்கு பொறிகளுக்கு போட்டியாக புதிய இயங்கு பொறியை அறிமுகப்படுத்துகிறது மோசிலா.

மோசிலா பயர்பொக்ஸ் (Mozila firefox) கணினிகளில் பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்த தேடு பொறியாக விளங்கியது. அதில் தனது செல்வாக்கை இழந்ததால் தற்போது ஸ்மார்ட் போன்களின் பக்கம் தனது கவனத்தை திருப்பியுள்ளது.

இந்த நிறுவனம் வருகிற 2016 இல் H5OS என்ற தனது இயங்கு பொறியை அறிமுகப்படுத்தும் முடிவில் உள்ளது. இது குறித்து மோசிலாவின் முன்னாள் தலைவரான சீனாவைச் சேர்ந்த லீ கோங் கூறுகையில்,

எளிமையான H5OS என்ற இயங்கு பொறியை வருகின்ற 2016 ஆம் ஆண்டில் மோசிலா அறிமுகப்படுத்தப்போகிறது என்றும், இது தற்போது பயன்பாட்டில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், H5OS என்ற இந்த இயங்கு பொறி ஸ்மார்ட் போன்களின் உலகில் ஒரு மைல்கல்லாக இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கலக்குகிறது அங்ரி பேர்ட்ஸ் – 2 (Angry Birds 2)

Rovio நிறுவனம் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் Angry Birds ஹேமின் இரண்டாம் பதிப்பை வெற்றிகரமாக அறிமுகம் செய்திருந்தது.

இவ்வாறு அறிமுகம் செய்து இரு வாரங்கள் ஆன நிலையில் சுமார் 30 மில்லியன் தடவைகள் தரவிறக்கம் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த மொத்த எண்ணிக்கையில் 10 மில்லியன் வரையான தரவிறக்கங்கள் சீனாவில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய பதிப்பை விடவும் சுவாரஸ்யமான பல அம்சங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இந்தக் ஹேமை தற்போது இலவசமாக தரவிறக்கம் செய்ய முடிவதுடன், விரைவில் கொள்வனவுசெய்யக் கூடியபதிப்புஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

முன்னாள் எம்.பியும், கூட்டுறவாளருமான சிவமகாராசாவின் நினைவுநாள் நிகழ்வு

வலி.வடக்கு, ஓக.21

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவாளருமான அமரர் சி.சிவமகாராசாவின் 9 வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை தெல்லிப்பளை பல நோக்கக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் ந.உமாகரன் தலைமையில் நடைபெற்றது.

சங்க ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற நினைவு நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் விவசாய சுற்றுச் சூழல் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டார்.

சிவமகாராசாவின் திருவுருவப்படத்துக்கு அவரது சகோதரி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் மலர் மாலை சூட்டினார். நினைவுச் சுடரை கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் சகோதரன் கைலைமான், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் சரவணன் மற்றும் ஊழியர்களும் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தினர்.

(ற-86)

தேர்தலில் தோற்றமை கவலையளிக்கவில்லை

ரோசி சேனநாயக்க தெரிவிப்பு

தேர்தல் தோல்லி குறித்து தமக்கு கவலையில்லை என்றும், மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுக் கொள்கின்றேன் என்றும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரோசிக்கு விருப்பு அடிப்படையில் நாடாளுமன்ற ஆசனம் எதுவும் கிடைக்கவில்லை.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்தபோதே ரோசி இவ்வாறு தெரிவித்தார். அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு மேற்கில் மாத்திரம் தேர்தல் பரப்புரை நடவடிக்கையை மேற்கொண்டதால், முடிந்தளவு வாக்குகளை பெறமுடியாமல் போனது. ஏனைய பகுதிகளில் பரப்புரை செய்வதற்கு சக வேட்பாளர்கள் விரும்பவில்லை. எனினும் கட்சிக்கு கிடைத்த வெற்றியால் நான் மகிழ்ச்சியடைகின்றேன். – என்று தெரிவித்தார்.

தேசிய பட்டியல் மூலமாக ரோசிக்கு வாய்ப்பு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்பட்டபோதும், தோல்வியடைந்தவர்களுக்கு தேசிய பட்டியல் வாய்ப்பு வழங்குவதில்லையென ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. நாடாளுமன்ற தேர்தலில் ரோசி 65 ஆயிரத்து 320 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார். (ற)

எம்.பியானார் இம்ரான் மஹ்ரூப் அவரிடத்துக்கு அருண சிறிசேன

திருகோணமலை, ஓக.21

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார். அதையடுத்து மாகாண சபையில் அவரின் இடத்துக்கு டாக்டர் அருண சிறிசேன நியமிக்கப்படவுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இம்ரான் மஹ்ரூப்பிற்கு அடுத்து பட்டியலிலுள்ள அப்துல்லாஹ் மஹ்ரூபும் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனவே பட்டியலில் மூன்றாவது இடத்தி லுள்ள டாக்டர் அருண் சிறிசேன, மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சேருவில தொகுதி அமைப்பாளரான அருண நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் [illegible] தலைப் பெற்று ஐக்கிய தேசிய கட்சியின் பட்டியலில் நான்காவது இடத்தைப் பெற்றிருந்தார். (ற-10)

நெல் கொள்வனவு விவரங்கள் இணையத்தளத்தில் பதிவேற்றம்

கொழும்பு, ஓக.21

நெல் கொள்வனவு தொடர்பிலான தகவல்கள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அரசின் நெல்கொள்வனவு நடவடிக்கையின்போது ஏற்படக்கூடிய முறைகேடுகளை கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல்லின் அளவு, விவசாயிகளின் விவரம் போன்ற அனைத்துத் தகவல்களும் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் எம்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் புதுப்பிக்கப்படும் இந்த தகவல்களை நெல் சந்தைப்படுத்தல் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சிறுபோகத்தின்போது 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளிடம் இருந்து 22 ஆயிரத்து 664 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவில் தியான்ஜின் நகரில் கடந்த வாரம் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அந்த நகரின் பல பகுதிகளில் அஞ்சலி செலுத்தப்பட்டது. வெடிவிபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைகளில் தாதியர்கள் மற்றும் மருத்துவர்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றியும், மலர்களைத் தூவியும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மேலும் விபத்து நடந்த இடம் மற்றும் பாதுகாப்பாக மக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் தற்காலிக குடில்கள் போன்றவற்றிலும் சீன மரபுப்படி அஞ்சலி செலுத்தப்பட்டது. கடந்த புதனன்று நடைபெற்ற இரு வெடிவிபத்துகளின் காரணமாக 114 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

அகதிகளுக்காகக் களத்தில் ஜேர்மனிய மாணவர்கள்

பேர்லின்.ஓக.21

தங்களது நாட்டில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக ஜேர்மனிய மாணவர்கள் களமிறங்கியுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மனியில் அடைக்கலம் தேடி வரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதே வேளையில் அகதிகள் முகாம்களின் மீதான தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் ஜேர்மனியின் சியாஜின் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது பரீட்சை விடுமுறையைத் தங்களது பல்கலைக்கழக வளாகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த முடிவு செய்துள்ளனர். அதன்படி அவர்களுக்குத் தேவையான உணவுகளைத் தங்களது கல்லூரி உணவகத்தில் இருந்து ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் அவர்களுக்கு மொழி தொடர்பான வகுப்புகளும் எடுத்து வருகின்றனர். அகதிகளுக்கான அடிப்படை மருத்துவ வசதிகளையும் ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலும் முகாம்களில் கணினி வசதியும் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், அதன் மூலம் அகதிகள் சிரியாவில் உள்ள தங்களது உறவினர்களிடம் ஸ்கைப் வழியாக பேசிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

உருளைக்கிழங்கில் வாழ்த்து

வொஷிங்டன்.ஓக.21

அட்டைகள், பொருள்களில் வாழ்த்துகள் அனுப்பப்பட்டு வந்த நிலை மாறித் தற்போது உருளைக்கிழங்கில் அழகிய தகவல்களை எழுதி பொதியில் அனுப்பும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த, அலெக்ஸ் கிரெக் என்பவரது மனதில் உருளைக்கிழங்கில் தகவலை எழுதி அனுப்பும் திட்டம் தலையெடுத்தது. தன்னுடைய நிறுவனத்துக்கு பொட்டட்டோ பார்சல் டாட்காம் என்று பெயரிட்டுள்ளார். பொதியில் வருவது, சாதாரண உருளைக்கிழங்கு என்றாலும், அதில் எழுதப்படும் தகவல்கள் மதிப்புமிக்கவை என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

யேமன் போரில் 398 சிறுவர்கள் சாவு

13 இலட்சம் பேர் அங்கிருந்து வெளியேற்றம்

நியூயோர்க்.ஓக.21

யேமன் நாட்டில் நடைபெற்ற போரில் இதுவரை 398 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு ஆசியாவில் அரபு தீபகற்பத்தில் உள்ள இரண்டாவது பெரிய நாடு யேமன். அந்த நாட்டில் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதிக் கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி ஹாதியின் அரச படைகளுக்கும் இடையே, உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. கடந்த மார்ச் மாத இறுதியில், அரச படைகளுக்கு ஆதரவாக, சவூதி அரேபியக் கூட்டுப் படைகள் போரில் குதித்தன. அதன் பின்னர் கடந்த வாரம் வரை, இந்தப் போரில் 398 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். 13 லட்சம் பேர் உயிர் பிழைக்க, வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். அதே சமயம், இதே காலத்தில் போர் புரிவதற்காக 377 சிறுவர்கள் படையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஐ.நா. குழந்தைகள் நல நிதியமான யுனிசெப் தெரிவித்துள்ளது. யேமன் கிளர்ச்சியாளர்களும், அரச படையினரும் போர் விதிமுறைகளைக் கடைபிடிப்பதில்லை என்று மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. யேமன் போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா. விசாரணை நடத்த வேண்டும் என்று சர்வதேச பொது மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது. (ஐ)

70 வருடங்கள் பழமையான புதையல் ரயில் கண்டுபிடிப்பு

மாஸ்கோ.ஓக.21

ரஷ்யாவிடம் இருந்து தங்களது புதையல்களைப் பாதுகாக்கும் பொருட்டு நாஜிகள் அனுப்பி வைத்த ரயில் ஒன்று, போலந்து நாட்டில் கண்டு பிடித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போலந்து நாட்டில் உள்ள ஒரு பாழடைந்த சுரங்கப்பாதை ஒன்றில் அந்தப் புதையல் ரயில் புதைந்திருக்கலாம் என இது குறித்துத் தகவல்கள் தொகுப்போர் தெரிவித்துள்ளனர்.

495 அடி நீளம் கொண்ட அந்தப் புதையல் ரயில் குறித்து உள்ளூர் வாசிகள் கூறுகையில், அதில் விலை உயர்ந்த கற்கள், தங்கக் கட்டிகள் மற்றும் துப்பாக்கிகள் என குவித்து வைத்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். 1945 ஆம் ஆண்டு கிழக்கு ஜேர்மனியில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களையே ரஷ்யாவின் செம்படைகளுக்குப் பயந்து நாஜிக்கள் போலந்து வழியே அனுப்பியிருக்கலாம் என்று சமீபத்தில் ஆய்வாளர்கள், குறிப்பிட்ட சுரங்கப் பாதையில் நுழைந்த புதையல் ரயில் பின்னர் அங்கிருந்து வெளியே வந்திருக்க வாய்ப்பில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.



கலாம் எனக் தெரிவிக்கின்றனர். நெடுங்காலம் அந்தச் சுரங்கப்பாதை பொதுமக்கள் பயன்பாட்டில் இருக்காததால் அதை மூடிவிட்டதாகவும் பின்னர் அந்தச் சுரங்கப்பாதை இருக்கும் இடம் கூட எவருக்கும் தெரியவில்லை எனவும் ஒரு பிரிவினர் தெரிவிக்கின்றனர். நாஜிகளால் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை ஒப்பிடுகையில், இந்தப் புதையல் ரயிலில் உள்ள பொருள்களின் மொத்த மதிப்பு 125 மில்லியன் பவுண்டுகள் இருக்குமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இது இவ்வாறிருக்க போலந்து நாட்டின் சட்டங்களின் படி பொது மக்களால் கண்டெடுக்கப்படும் அனைத்துப் பொருள்களின் மதிப்பில் 10 வீதம் அரசுக்கு வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கக் கடன் திட்டத்துக்கு ஜேர்மனி நாடாளுமன்றம் ஒப்புதல்

பேர்லின்,ஓக.21

கிரேக்கத்துக்கான சர்வதேசக் கடன் திட்டத்துக்கு ஜேர்மனி நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஜேர்மனியின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலுக்கு அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், 63 பேர் மட்டுமே எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வாக்களித்தனர். முடிவில், 400 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இந்தத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

113 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

இது தொடர்பான விவாதத்தின் போது, கிரேக்கத்தால் கடனை திரும்பச் செலுத்த முடியுமா? என்று உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த நிதியமைச்சர் வுல்ப்காங் ஷாபுல், இது தொடர்பாக எந்த உறுதியும் இல்லையென்றாலும் கிரேக்கத்துக்குப் புதிய தொடக்கத்துக்கான வாய்ப்பை அளிக்காமல் இருப்பது பொறுப்பில்லாத செயலாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

தலையை வெட்டி உடலைத் தூணில் தொங்கவிட்ட ஐ.எஸ்.

82 வயதான தொல்லியல் ஆய்வாளருக்கு நிகழ்ந்த பரிதாபம்

பல்மைரா,ஓக.21

ஐ.எஸ். தீவிரவாதிகள் 82 வயதுடைய தொல்லியல் ஆய்வாளர் ஒருவரைக் கொலை செய்து, அவர் வாழ்நாள் முழுவதும் போற்றிப் பாதுகாத்த புராதன இடத்திலேயே தொங்கவிட்டுள்ளனர். பல்மைராவில் இருப்பதாகக் கூறப்படும் புதையல் தொடர்பான தகவலைக் கூற மறுத்தமைக்காகவே ஐ.எஸ். அமைப்பினர் இந்தக் கொடூரத் தண்டனையை வழங்கியுள்ளனர். அந்தத் தொல்லியல் ஆய்வாளரது தலையை வெட்டி அவரது உடலைப் புராதன இடத்திலேயே தொங்க விட்டுள்ளனர்.

மத்திய கிழக்கின் மிகப்பெரும் சாதனை பல்மைரா நகரம். அந்தக்காலத்தில் இருந்த ரோமப்பேரரசின் ஏனைய நகரங்களைப் போன்றதல்ல பல்மைரா. மத்திய கிழக்கின் வரலாற்றுப் பெருமைகளில் ஒன்று பல்மைரா. காரணம் அந்த நகரம் கலை ரீதியிலும் கலாசார ரீதியாகவும் தனித்தன்மை கொண்டிருந்தது. பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வந்த பல்மைராவின் பிரம்மாண்டமான கோயில்கள், நெடுந்தூண்களைக் கொண்ட ராஜவீதிகள், திறந்தவெளி கலையரங்கம் போன்றவையெல்லாம் பல்மைரானியர்களின் கலை உணர்வுக்கும், கட்டடக்கலை நிபுணத்துவத்துக்கும் சான்றுகளாக நிலைத்து நிற்கின்றன.

ஆனால் தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகளால் அழிவின் விளிம்பில் இருக்கிறது பல்மைரா. சிரியாவின் இந்தப் புராதான நகரின் தலைமைத் தொல்லியல் ஆய்வாளராகப் பணியாற்றி அரிய பொக்கிஷங்களை பாதுகாத்தவர் காலித் ஆசாத். கடந்த ஒரு மாதமாக ஆசாத்தை சிறைவைத்து அவரிடமிருந்து பல்மைராவில் இருப்பதாகக் கூறப்படும் புதையல் தொடர்பான தகவல்களைப் பெற ஐ.எஸ். தீவிரவாதிகள் முயற்சித்து வந்தனர். ஆனால் எந்தத் தகவல்களையும் அவர் தெரிவிக்க மறுத்துவிட்டதால் அவரது தலையை வெட்டிக் கொலை செய்து, பல்மைராவில் உள்ள ரோமானிய தூணில் தொங்கவிட்டுள்ளனர். கடுமையாகச் சேதமடைந்திருந்த அந்தத் தூணை, ஆசாத் 50 வருடங்கள் கடுமையாக உழைத்து சீரமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



வடகிழக்கு சிரியாவில் தற்கொலைத் தாக்குதல்

பெய்ரூட்,ஓக.21

சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் குர்துப் படையினர்மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 16 பேர் உயிரிழந்திருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, இந்த தாக்குதல் பற்றி கூறும்போது – சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள காமிஷ்லி நகரில், வெடிபொருள் நிரப்பிய காரைச் செலுத்தி வந்த தீவிரவாதி ஒருவர், குர்துப் படையினர்மீது மோதி வெடிக்கச் செய்துள்ளார்.

அதில் குர்துப் படையினரும், பொதுமக்களுமாக 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 50 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இறந்தவர்களுடன் செல்பிப் போட்டி

மாஸ்கோ,ஓக.21

இறந்தவர்களுடன் செல்பி எடுக்கும் போட்டி ரஷ்யாவில் நடத்தப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செல்பி மோகத்தில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு உத்வேகம் கொடுக்கும் விதமாக ரஷ்ய இணையத்தளம் ஒன்று இறந்தவர்களுடன் செல்பி எடுக்கும் போட்டியை அறிவித்தது.

அதில், சிறந்த செல்பிக்கு குறிப்பிட்ட பரிசுத்தொகையையும் அறிவித்தது. அதனைப் பார்த்த செல்பி மோகம் கொண்டோர், சற்றும் யோசிக்காமல் அந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். அதில், விபத்தில் உயிரிழந்த 13 வயது பெண்ணுடன் எடுத்த செல்பி ஒளிப்படம் பரிசைத் தட்டிச் சென்றுள்ளது. மனிதர்களின் சாவு, சக மனிதருக்கு ஆழ்துயரத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஒரு கொண்டாட்டத்தைத் தருகிறது என்பதை விளக்குவதாக உள்ளது இந்தச் செல்பி போட்டி. தற்போது, இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

சிரிய அகதிகளை ஏற்பதில் பாகுபாடு

டமாஸ்கஸ்,ஓக.21

சிரிய அகதிகளில் கிறிஸ்தவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்போவதாக ஐரோப்பிய நாடான ஸ்லோவாக்கியா தெரிவித்துள்ளது. சமூக ஒருங்கிணைப்பை மனதில் வைத்தே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக ஸ்லோவாக்கியா தெரிவித்துள்ளது.

துருக்கி, இத்தாலி, கிரேக்கம் ஆகிய நாடுகளில் உள்ள சிரிய அகதிகளின் முகாம்களில் இருந்து, இரு நூறு கிறிஸ்தவ அகதிகளைத் தெரிவு செய்து அவர்களை ஏற்றுக்கொள்ளப் போவதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இவான் மெடிக் தெரிவித்துள்ளார்.

ஸ்லோவாக்கியாவில் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இஸ்லாமிய சமூகத்தினர் வாழ்கின்றனர் என்றும், இது ஒரு பாரபட்சமான நடவடிக்கை இல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இவான் மெடிக் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளை நீடித்துக் கொள்வார்களா புலம்பெயர்ந்து வாழும் உறவுகள்?

ராஜராஜன்

அண்மைய நாள்களாக புலம் பெயர்ந்து வாழுகின்ற எமது உறவுகள் பெருமளவில் தாயகத்துக்கு வருகை தந்து கொண்டிருக்கின்றனர். இவர்களது நடை, உடை, பாவனைகளை அவதானிக்கும் எவருமே இவர்களை இலகுவில் அடையாளம் கண்டு கொள்வர். அதிலும் இள வட்டங்களைப் பார்க்கும் போது அவர்கள் இந்த மண்ணுடன் ஒட்டாதவர்களைப் போன்று காணப்படுகின்றனர்.

ஈழத் தமிழர்கள் இல்லாத நாடு எதுவுமில்லையென நாம் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம். இது நியாயமான ஒன்றுதான். ஆனால் இந்தப் பெருமையின் பின்னணியில் உள்ள பாதிப்புக்களையும் நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

என்னதான் சமாதானம் கூறிக் கொண்டாலும், புலம்பெயர்ந்து வாழுகின்றஎமதுஉறவுகளின் அடுத்ததலை முறை தமது மொழிவழிக் கலாசாரத்தைத் தொடர்ந்து பேணுவார்களா என்ற ஐயம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் அன்னிய நாடுகளில் வேற்று மொழிக் கலாசாரத்தாலும் வேற்று மதங்கள் காரணமாகவும் வேறுபட்ட மக்கள் மத்தியில் எம்மவர்கள் வாழ்கின்றனர். அத்துடன் அவர்களைச் சார்ந்து இருக்க வேண்டிய தேவையும் இவர்களிடத்தில் காணப்படுகின்றது. இதனால் தமது மொழியையும், கலாசாரத்தையும் முழுமையாகப் பேணமுடியவில்லை. இதன்தாக்கம் அடுத்துவரும் தலைமுறைகளில் அதிகரிக்கப் போகின்றது.

எம்மவர்கள் போரைக் காரணம் காட்டியே வெளிநாடு சென்றனர். இதற்கு முன்னரெல்லாம் படித்தவர்களும், வசதி படைத்தவர்களும், அரசியலில் முக்கிய பங்கு வகித்தவர்களும் மட்டுமே வெளிநாடுகளை எட்டிப்பார்க்க முடிந்தது. சாமானியர்களுக்கு இதை எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. போரினால் தமிழ் மக்கள் எதிர் போரும், இங்கு இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான சம்பவங்களும் எம்மவர்கள் வெளிநாடு செல்வதற்கான மன உந்துதலை அவர்களுக்கு ஏற்படுத்தி வைத்தது வெளிநாடு செல்வது பொருளாதார ரீதியிலும் மிகுந்த பயனை அளித்ததால் அங்கு செல்வதற்குப் பலரும் போட்டியிட்டனர். இதற்குப் பெரும் பணம் செலவாகும் என்ற போதிலும், அவற்றையெல்லாம் மீளப் பெற்று விடலாம் என்ற நம்பிக்கையும் அதிகரித்தது. நாளடைவில் வெளிநாட்டுக்குச் செல்வது எமது உறவுகளின் முக்கியமான குறிக்கோளாகவே மாறிவிட்டது.

அனேகமாக 1977ஆம் ஆண்டு ஆரம்பித்த எமது ஆட்களின் வெளி நாட்டுப் பயணங்கள் இன்றுவரை ஓயவில்லை. மாறாகப் புதிய வடிவங்களில் இடம்பெறத்தான் செய்கின்றன. இது ஓயுமென்று கூறுவதற்கும் முடியாதுள்ளது. ஏனென்றால் எத்தனை லட்சங்களைக் கொட்டியேனும் அக்கரை தாண்டுவதற்குப் பலர் இன்னமும் தயார் நிலையில் உள்ளனர்.

கொண்ட இழப்புக்களை வெளிநாட்டுப் பணம் ஈடுசெய்ததை எவருமே மறுக்க முடியாது. மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்தப்பட்டு பொருள்களின் விலையும்அதிகரிக்கப்பட்டதால் தமிழ் மக்கள் பட்டினிச்சாவை எதிர் கொண்ட வேளையில் இங்குள்ள கணிசமானவர்களை வெளிநாட்டில் வசிக்கும் உறவுகள் அனுப்பி வைத்த பணம் தான் காப்பாற்றியது என்ற உண்மையையும் எவருமே மறுக்க முடி யாது.

இதைவிடப் பல ஏழைக் குடும்பங்களின் வாழ்விலும் வெளிநாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பணம் ஒளியேற்றியுள்ளது. பரம் பரைப் பணக்காரர்கள் செல்வத்தில் மிதந்த காலம் மாறி வெளிநாடுகளில் உறவுகளைக் கொண்டிருந்தவர்களும் செல்வத்தில் திழைத்த காலம் ஒன்று உருவானது.

ஆனால் புலம்பெயர்ந்து சென்றவர்கள் தாம் வசிக்கும் நாடுகளில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டே பணத்தைச் சம்பாதிக்கிறார்கள் என்ற உண்மையை இங்குள்ள அவர்களின் உறவுகள் எண்ணிப் பார்ப்பதில்லை என்பது தான் வேதனை தருகின்ற விடய மாக உள்ளது. ஒருசிலர் வெளி நாட்டுப் பணம்தானே என்ற அலட் சியத்தில் பணத்தைப் பணமாக மதிப் பதில்லை என்பதும் ஒரு கசப்பான உண்மை.

இதேவேளை – இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வசிப்பதால் இங்கு பாதிப்புக்களும் இல்லாமலில்லை. இலங்கையின் இரண்டாவது பெரிய இனம் என்ற அந்தஸ்து தமிழர்களின் கைகளைவிட்டு நழுவப்போகின்றது. நாடாளுமன்ற அங்கத்துவத்தில் தற்போது பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில்கூட தமிழர்களுக்கு உரிய இடங்கள் கிடைக்காத நிலையொன்றும் உருவாகியுள்ளது. உறவுகளைப் பிரிந்து வாழுகின்ற பரிதாப நிலையில் இங்குள்ளவர்கள் வாழ்வது வேறு வேதனை தருகின்றது. நீண்ட காலமாகத் தமது பெற்றோர்களின் முகங்களைப் பார்க்க முடியாத நிலையில் புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகள் அவர்களின் பிணங்களைப் பார்க்கவென இங்கு வருவதும், சிலர் அதற்குக் கூட இயலாத நிலையில் கண்ணீர் வடிப்பதும் வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன. இங்கு வருகை தருபவர்களில் பலர் வெளி நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்ற சுகாதாரத்தை இங்கும் எதிர்பார்க்கின்றனர். அவர்களது குழந்தைகள் வீட்டுக் கிணறுகளில் தவளைகள் இருப்பதைக்கண்டு அருவருப்புடன் முகம் சுழிக்கின்றனர். அந்தக் கிணறுகளின் நீரைத் தொடுவதற்குக் கூட அவர்கள் அசூசைப்படுகின்றனர். தமது பெற்றோரின் காலத்துக்குப் பின்னர் இவர்கள் தமது தாய் நாட்டுக்கு வருகை தருவார்களா என்ற சந்தேகமும் கூடவே எழுகின்றது. அதுமட்டுமல்லாமல் மனதில் வேதனையும் எம்மையறியாமலேயே தலைகாட்டுகின்றது.

மொறிசியஸ், பிஜித்தீவு போன்ற நாடுகளில் வாழ்கின்ற பூர்வீகத் தமிழ் மக்கள் இன்று தமது மொழி, கலாசாரம், தனித்துவமான அடையாளங்கள் யாவற்றையும் இழந்து வாழுகின்ற நிலை எமது உறவுகளுக்கும் ஏற்படக்கூடாது என்பதே எமது நீண்ட பிரார்த்தனையாக உள்ளது.

> அநேகமாக 1977ஆம் ஆண்டு ஆரம்பித்த எமது ஆட்களின் வெளி நாட்டுப் பயணங்கள் இன்றுவரை ஓயவில்லை. மாறாகப் புதிய வடிவங்களில் இடம்பெறத்தான் செய்கின்றது. இது ஓயுமென்று கூறுவதற்கும் முடியாதுள்ளது. ஏனென்றால் எத்தனை லட்சங்களைக் கொட்டியேனும் அக்கரை தாண்டுவதற்குப் பலர் இன்னமும் தயார் நிலையில் உள்ளனர்.

மீண்டும் ஒருமுறை விருதுகளை வென்ற சி.பி.எல். விற்பனைக் குழு

சிலோன் பிஸ்கற் லிமிட்டெட் நிறுவனம் அண்மையில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய விற்பனை மாநாடு 2015 விருதுகள் வழங்கும் நிகழ்வில் மூன்று முக்கிய விருதுகளை வென்று விற்பனை தலைமைத்துவத்தில் அதன் ஆதிக் கத்தையும், செயற்றிறனையும் மீண்டும் ஒருமுறை உறுதி செய்துள்ளது.

நாடுமுழுவதும் உள்ள நிறுவனங்களைச் சேர்ந்த விற்பனை பிரதி நிதிகளின் செயற்றிறனை கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படும் முன்னணி தேசிய நிகழ்வாக சிலிம் விற்பனை மாநாடு அமைந்துள்ளது. நாஸ்கோ 2015 நிகழ்வில் வர்த்தகத்துறையைச் சேர்ந்த பெரும்பாலானோர் பங்கு பற்றியிருந்தனர்.

இந்த ஆண்டில் வென்ற விருதுகள் சி.பி.எல். நிறுவனத்தின் தொழிற் துறையில் அதன் முக்கிய பங்கு மற்றும் சந்தைப்படுத்தலில் அதன் செயற்றிறன் போன்றவற்றை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன. 'சி ரேஞ்' முன்னணி வரிசையாளர் பிரிவில் தங்க விருதை நிலந்த மென்டிஸும், 'பி ரேஞ்' இல் பிரதேச முகாமைத்துவ பிரிவில் வெள்ளி விருதை விற்பனை பிரதிநிதி மஞ்சுள விஜேரத்வும், விற்பனை மேற்பார்வையாளர் பிரிவில் வெண்கல விருதை நந்தன பெர்னாண்டோவும் வென்றனர். சி.பி.எல். இன் விற்பனை படையினர் மூன்று தொகுதிகளுள் கட்டமைக்கப்பட்

வகைப்படுத்தப்பட்டிருந்தன. எமது வெற்றியாளர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். ஒவ்வொரு வெற்றியாளரும் தமது விற்பனை தலைமைத்துவத்திலும், நிறுவனத்தினுள் திறமைகளை வெளிப்படுத்துவதிலும் முன்னுதாரணமாக திகழ்ந்தனர் என சி.பி.எல். நிறுவனத்தின் பணிப்பாளரும், குழு பொது முகாமையாளருமான ஜ.எம்.கான் தெரிவித்தார். சி.பி.எல். நிறுவனம் மீண்டும் ஒருமுறை அதன் சக்திமிக்க விற்பனை படையினர் ஊடாக சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையில் தாம் வழங்கும் தரமான சேவை ஊடாக மட்டுமன்றி, வர்த்தகத்தின் அனைத்து அம்சங்களிலும் சந்தை முன்னோடியாக தமது நிலையான ஆதிக்கத்தை நிரூபணம் செய்துள்ளது என மேலும் அவர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையாக நாம் உபயோகிக்கும் ஆங்கிச் சொற்களும் அவற்றுக்கான சரியான சொற்களும்

Pensioner (பென்ஷனர்) பென்ஷனர் என்ற சொல் தான் சரியான சொல்லாகும். பென்ஷனியர் என்பது பிழையான உச்சரிப்பாகும். இதுபோலவே Small என்ற சொல்லை சிமோல் என்று உச்சரிக்கின்றனர். இதுவும் தவறாகும். ஸ்மோல் என்பதுதான் சரியான உச்சரிப்பாகும். ஆங்கிலம் படிக்கத் தொடங்கும்போது ஒரு பிள்ளைக்கு அடிப்படை சரியாக இருக்காததாலேயே இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன. ஆசிரியர்கள் பிழையான உச்சரிப்பைச் சொல்லிக் கொடுத்தால் மாணவன் அதை அப்படியே வாழ்நாள்வரை சொல்லிக்கொண்டே இருப்பான். ஆகவே ஆரம்பம் என்ற அத்திபாரம் நல்லதாக இருக்கவேண்டும். Labour என்ற சொல்லுக்கும் Labourer என்ற சொல்லுக்கும் வித்தியாசம் உண்டு. சிலர் இரண்டு சொற்களையும் தவறுதலாக உபயோகிக்கின்றனர் Lobour என்றால் வேலை Labourer என்றால் வேலையாள். சிலர் Lobour என்றால் வேலையாள் என்று நினைத்து அதை வேலையாள் என்று சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்துகின்றனர். Farmer, Teacher என்ற சொற்கள் R இல் முடிவடைவதால் Lobour ம் R இல் முடிவடைவதைப் பார்த்து இதை வேலையாள் என்ற சொல்லுக்கு பதிலாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் இந்தப் பிழைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். அடுத்து Local என்ற சொல்லைப் பார்ப்போம். சிலர் Local என்றே சொல்லை தரம் குறைந்த, இளக்கமான பொருள். என்றே நினைக்கின்றனர். அது தவறு. quality குறைந்தது அல்லது Grade குறைந்தது என்பது தான் தரம் குறைந்ததற்காகப் பயன்படுத்தக்கூடிய சொல்லாகும். Local என்றால் உள்ளூர் அல்லது உள்நாட்டு என்று பொருள் உதாரணம்: Local Product (உள்ளூர் உற்பத்தி) Foreign product (வெளி நாட்டு உற்பத்தி) ClimatedClimate என்றால் காலநிலையாகும். இதைச் சிலர் தவறுதலாகப் பயன்படுத்துகின்றனர். Climate என்பது ஒரு நாட்டில் பொதுவாக நிலவும் கால நிலையாகும். உதாரணமாக எமது நாட்டில் மாரி காலம் குளிர்காலமாகும். மழை காலமாகவும் காணப்படும். கோடை காலத்தில் வெயில், வெப்பம் நிலவும். Wea therd Weather என்பது அடிக்கடி மாறுவதாகும். உதாரணமாக Sunny Weather வெயில் காலநிலை Rainy Day, Cloudy Day என்று அடிக்கடி மாறும் காலநிலையைக் குறிப்பிடுவது தான் Weather. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் Cold Climate குளிர்காலநிலையைக் கொண்டுள்ளன. இந்தியா இலங்கை போன்ற நாடுகள் வெப்பவலய hot Climated க் கொண்டுள்ளன. Programme இந்தச் சொல் நிகழ்ச்சி நிரலைக் குறிப்பிடுகின்றது. சிலர் இத னைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். ஒரு விழாவின் நிகழ்ச்சி நிரலில் பல நிகழ்ச்சிகள் events, items இடம்பெறுகின்றன. நிகழ்ச்சி நிரலில் Programme இனுள் அடங்கியதுதான் events அல்லது items சிலர் அடுத்த event அல்லது items என்று சொல்வதற்குப் பதிலாக அடுத்த Programme என்று கூறுகின்றனர். பல இடங்களில் எனது காதுகளில் இது விழுந்துள்ளது. இனிமேலாவது announcers இந்தத் தவறை செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

One of my friends என்பது தான் சரியான வசனமாகும். சிலர் One of my friend என்று பிழையாகக் கூறுவதை நான் கேட்டுள்ளேன். எனது நண்பர்களில் ஒருவன் என்பது One of my friends. One of my friend என்பது பிழையாகும். அது போலவே One of my classmates, One of my relatives என்பவையே சரியான வசனங்கள் One of our teachers என்பதும் சரியே. Afriend of mine என்பது சரியான வசனம். சிலர் Its க்கும் It s க்கும் வித்தியாசம் தெரியாதிருக்கின்றனர். அனேகர் It's tail is black என்ற வசனம் பிழை என நினைக்கின்றனர். ஆனால் இது நூற்றுக்கு நூறு சரியானதாகும். It's என்பது It is என்பதுக்குப் பதிலாகப் பாவிக்கப்படும். abbrevitation(shor tened form) உதாரணமாக: It is flying. (It's flying) It is raining (It's raining) It's barking (It is barking). அடுத்து Hinduism என்ற சொல்லைப் பார்ப்போம். பலர் இந்தச் சொல்லை பிழையாக உச்சரிக்கின்றனர். வரின்டுசியம் என்கின்றனர். அது பிழை. வரின்டுஇசும் என்பதே சரியான சொல். அவர்கள் இந்தச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதும்போது Hindusium என்று பிழையாக எழுதுகின்றனர். ஆகவே சரியானதைப் படித்துக் கொள்ளவும்.

B.S.A. அரியரட்னம்
ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர்

வாசகர் திருமுகம்

கேலிச் சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசுக்கு பெரிய சவால்

அடுத்து வரும் மாதங்களில் ஜனாதிபதி சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கையின் வரலாற்றிலேயே மிகவும் கடினமான, ஆபத்தான ஒரு விடயத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இலங்கையின் உள்நாட்டு போரின் இறுதித் தருணங்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் குறித்த தனது விசாரணை அறிக்கையை செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிடவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கை, மிகமோசமான,கொடூரமான சம்பவங்கள் குறித்து மிகவும் தெளிவான விபரங்களை வெளியிடலாம். பெயர்கள் திகதிகள் கூட இடம்பெறலாம் என தெரிவித்த அரசின் ஆலோசகர் ஒருவர், அதனைக் கையாள்வது கடினமாகக் காணப்படலாம் எனக் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தை கையாள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்நாட்டுபொறிமுறையை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளார்

மேலும் தமிழர்கள் அதிகமாக வாழும் வடபகுதிக்கு அதிகாரங்களை வழங்குவதற்கான பகிரங்கப்படுத்தப்படாத திட்டங்களும் உள்ளன.

எனினும் இவற்றை முன்னெடுப்பது கடினமான சவாலாக அமையப் போகின்றது. இலங்கை அரசு முன்னெடுக்கும் எந்த உள்நாட்டு விசாரணையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தைத் திருப் திப்படுத்துவதாகக் காணப்படவேண்டும். மேலும் சர்வதேச விசாரணையைக் கோரும் தமிழ்க் கட்சிகள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளைத் திருப்திப்படுத்துவதாகவும் இது அமைய வேண்டும்.

அதேவேளை, இலங்கையின் புதிய அரசு, தான் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிவது போன்ற தோற்றப்பாடு ஏற்படுவதை விரும்பாது. அது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்மறையான உணர்வலைகளைத் தோற்றுவிக்கலாம். அவர்கள் வெளிநாட்டு தலையீடுகள், பயங்கரவாதத்தின் மீள் எழுச்சி குறித்து அச்சம் கொண்டுள்ளனர்.

இவையனைத்தும் ராஜபக்ஷவை நோக்கி எமது கவனத்தைத் திருப்புகின்றன. மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான அவரது முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. தோற்கடிக்க முடியாதவர் ராஜபக்ஷ என்ற விம்பமும் நொறுக்கப்பட்டுள்ளது. அவர் போர் நடைபெற்ற வேளை இடம்பெற்ற குற்றங்களுக்காக நிச்சயம் பொறுப்பு கூறவேண்டிய நிலை ஏற்படலாம். புதிய அரசை அமைப்பதற்கான வேலைகளை முன்னெடுக்கும் அதேவேளை, அடுத்த மாதம் ஜெனிவாவில் வெளியிடப்படவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைக்கு பதிலளிப்பதற்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ள வேண்டிய இக்கட்டு நிலைமை இந்த அரசுக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த அமர்வில் வெளியிடப்படவிருந்த குறித்த அறிக்கை, இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமையவே செப்ரெம்பர் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. ஆயினும், இம்முறை அந்த அறிக்கை வெளியிடப்படுவதில் எந்தவித மாற்றமும் இருக்காது. இதனால் இலங்கை அரசினால் அறிக்கைக்கு சாக்குப் போக்கு எதுவும் சொல்லிவிடமுடியாது.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத போதும், தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஜனாதிபதி மைத்திரிபாலவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த தேசிய அரசு என்பது இலகுவான விடயம் அல்ல. பல கட்சிகளையும் உள்வாங்கிச் சமாந்தரமாக அமைக்கப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறான ஒரு கடுமையான வேலைப்பளுவுக்குள் இருந்துகொண்டு ஐ.நா.விசாரணை அறிக்கைக்கு முகம் கொடுப்பதும் இலகுவானதல்ல.

சிறிசேன முன்னர் தான் ராஜபக்ஷவை எந்தவித சர்வதேச விசாரணையிலிருந்தும் பாதுகாப்பேன் என தெரிவித்திருந்தார்.

எனினும் எந்த உள்நாட்டு விசாரணையிலும், முன்னாள் ஜனாதிபதியின் செயற்பாடுகளையும் கருத்தில் எடுக்க வேண்டியிருக்கும். அதனால் அவரைத் தங்களது தேசத்தின் பாதுகாவலராகக் கருதும் பெரும்பான்மையில் பழைய காயங்களை அது மீண்டும் தூண்டக்கூடும்.

எனவே புதிய அரசுக்கு பெரும் சவால் காத்திருக்கிறது என்பது மட்டும் உண்மை.

பத்தி எழுத்து

இதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

அரசின் மினுங்கும் அறிவிப்புக்கள் தலையீடுகள் இன்றி செயலாகுமா?

இணக்கப்பாட்டை விரும்பும் புதிய அரசுடன் சேர்ந்து முன்னோக்கிச் செல்வதற்கு, பொதுத் தேர்தல் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

அமைச்சுப் பதவிகள் மற்றும் நாடாளுமன்றில் புதிதாக உருவாக்கப்பட உள்ள புதிய பதவிகள் என்ற இரண்டு வழிகள் மூலமாக அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றி முன்னோக்கிச் செல்வோம். அதுவே, வாக்காளர் பெருமக்கள் எமக்கு இட்டுள்ள கட்டளை.

நாட்டின் பிரதமராக மீண்டும் பதவி ஏற்றுள்ள, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மேற்சொன்ன புதிய கோணத்தில் கருத்து ஒன்றை வெளியிட்டு, அதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வினயத்துடன் வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

★ இந்த வேலைத் திட்டத்தை நடை முறைக்குக் கொண்டு வருவதற்கு, அதனை நாடாளுமன்றத்தில் முன்வைத்துக் கொள்கை ஒன்றை வகுத்துக் கொள்ளலாம்; கொள்வோம்--

★ மக்களால் தெரிவு செய்யப்பட்ட எல்லோரும் இந்தத் திட்டத்துக்கு, முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கினால், நல்லாட்சியை உருவாக்க இயலும் என்பதை செயலால் செய்து காட்டுவோம்-- என்றும் பிரதமர் விதைந்து உரைத்துள்ளார்.

பிரதமரின் மேற்சொன்ன நோக்கும் போக்கும் நாட்டு நலன் நாடிய புதிய பார்வை, திட்டம் எனக் கருத வல்லவை.

★ முந்தைய பழைய அரசியலை, ஒரு புறத்தே கட்டிச் சுருட்டி வைத்துவிட்டு, நாட்டின் அடிப்படைப் பிரச்சினை குறித்து எல்லோரிடமும் இணக்கப்பாட்டை உண்டாக்குவதே உகந்தது. அதன் பொருட்டே நாம் மக்களிடம்-- வாக்காளர்களிடம்-- ஆணையைக் கோரினோம்.

- அதனை நாடாளுமன்றில் ஆழ மனதிருத்தி தேசிய இணக்கப்பாட்டை உருவாக்கும் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும்.

• பதவியை ஏற்றுக்கொண்டதும், ஜனாதிபதியுடன் இணைந்து, ஏனைய அரசியல் தலைவர்களுடன் பேச்சு நடத்திக் கொள்கைத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே எனது குறிக்கோள்.

• எமது நாடு குறித்தும் எங்கள் மக்கள் குறித்தும் எல்லோரும் ஒன்று கூடிச் சிந்தித்து தேசிய மட்டத்திலான இணக்கப்பாட்டை உருவாக்க வேண்டும்-- என்றும் பிரதமர் அழுத்திக் கருத்து வெளிப்படுத்தி இருக்கிறார்.

மேற்போந்த, மக்களுக்கு நன்மை விளைக்க வல்ல ஒரு நல்லாட்சியை உருவாக்குவதற்கு உதவுமாறே நாம் கேட்கிறோம். மக்கள் தமக்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்குமாறு தமது பிரதிநிதிகளான எங்களிடம் கேட்கிறார்கள். அதன் பொருட்டு நாம் ஒன்றிணைந்து செயற்படுவதே மிகப் பிரதானமாகும்.

மக்களால் - வாக்காளர்களால் - தெரிவு செய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் - கட்சிகள் அனைத்தும், அரசின் தேசியக் கொள்கைக்கு ஆதரவளிக்க வேண்டும்-- என்றும் பிரதமர் அழுத்தி உறுத்தித் தெரிவித்திருக்கிறார். அவ்வாறு இல்லை எனின், அவர்கள் மக்களுக்கு எதிரானவர்கள் என்றாகிவிடும்.

அதேவேளை-

மாவட்ட இணைப்புக் குழுக்கள் அமைக்கப்படும் என்றும் அவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகள் அல்லாத கிராமப் பிரமுகர்களும் தலைமை வகிப்பர் என்ற புதிய திட்டத்தையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

புதிய அரசின் தேசியக் கொள்கைகளுக்கு, நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் இணங்க வேண்டும். அதற்கு மறுப்புத் தெரிவிப்பார்கள் ஆயின், அவர்கள் மக்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களாகக் கருதப்படுவர் என்றும் பிரதமர் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார்.

நாடாளுமன்றம் செயல்வடிவில் உண்மையிலேயே, மக்கள் மன்றம் என்ற நிலைக்கு வித்திடுவதாகப் புதிய அரசு புளுகித் தள்ளலாம். ஆனால் பிரதமர் எடுத்துரைத்திருப்பது போன்று, யாவுமே அசகு பிசகு இன்றி செயல் வடிவமாகப் பொலிய வேண்டுமே....!

வெறும் சொற்களில் வெளிவருவது செயலளவில் ஆட்சியினரின் தலையீடு இல்லாமல் முளைக்குமா, உயர்ந்து வளருமா என்பதற்குக் காலம் தான் பதில் சொல்லும். காத்திருப்போமே....!

பிள்ளையார் சுழி, நல்ல தொடக்கத்தின் ஆரம்பம் இது!



செ.உமாசுதன்

மனித சமுதாயம் காலந் தோறும் அதன் அறிவு, ஆற்றல்,திறன்கள்,உணர்வுகள், சாதனைகள், விழுமியங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றில் படிப்படியாக வளர்ச்சியும், பெருக்கமும், முதிர்ச்சியும் பெற்று வரும்போது பல்வேறு மாறுதல்கள், மாற்றங்கள் நிகழ்வது இயல்பாகும். ஆம்... மாற்றங்கள் நல்லனவாய் அமையலாம். வேறுசில தீயனவாயும், கேடு விளைவிப்பனவாகவும் கூட அமையலாம். மனிதர்கள் நாங்கள் பகுத்தறியும் ஆற்றலையும், நல்லன, தீயன என்பவற்றைப் பிரித்துணரும் திறனையும் பயன்படுத்தி மாற்றங்களுக்கு நெகிழ்ந்து கொடுத்து நல்லனவற்றை ஏற்று, அல்லாதவற்றை விலக்கி வாழும் சமுதாயமாக நிலைபெற வேண்டும். தொடர்ந்து உரிமையோடு வாழும் பெருமை யைப் பெறவேண்டும்.

ஒடுக்கு முறைகளதும், அடக்கு முறைகளதும் கரங்களில் சிக்குண்டு துன்பங்களின் கனதியால் அவதியுறுகின்ற தமிழ் இனம் நடைபெற்று முடிந்த எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில்தான் ஒற்றுமையாக இருந்து அல்லாதவற்றை விலக்கி வாழும் சமுதாயம் என்பதை நிரூபித்திருக்கின்றது.

தமிழர்களாகிய நாங்கள் எந்தவொரு நல்ல காரியத்தை நிறைவேற்றுகின்ற போதும், நிகழ்வுகளை ஆரம்பிக்கின்றபோதும் இந்துக்களின் முழுமுதற் கடவுளான விநாயகனை வேண்டி பிள்ளையார் சுழி இடுவதையும், விநாயகனை முன்னிறுத்துவதைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருந்து வருகிறோம். இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் நல்லதொரு தொடக்கம் பிள்ளையார் சுழியோடு ஆரம்பமாயிருக்கிறது. வடக்கு – கிழக்கு பிரதேசங்களிலே தமிழ் மக்களின் ஆதரவு ஒற்றுமையால் வென்றிருக்கிறது. வடபுலத்திலே குறிப்பாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலே ஐந்து முகங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இது, அந்த ஆறுமுகனின் அண்ணன் பஞ்சமுக விநாயகனின் கிருபைதான்.

தெற்கிலே போட்டியிட்ட பேரினவாதக் கட்சிகளிடையேகடும் போட்டி நிலவியது. அவை இரண்டில் ஒன்றான பச்சைநிற ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. இந்தக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி என்ற புதிய கூட்டணி தனித்து அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கக் கூடிய ஆசனங்கள் கிடைக்கவில்லை. தொங்கு நாடாளுமன்றம் ஒன்றே உருவாகவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெற்று மீண்டும் ஒரு முறை அமோக வெற்றியைப் பெற்றிருக்கிறது. மூன்றாவது பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

> **“ வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலே தமிழ் மக்களின் ஆதரவு ஒற்றுமையால் வென்றிருக்கிறது. வடபுலத்திலே குறிப்பாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலே ஐந்து முகங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இது அந்த ஆறுமுகனின் அண்ணன் பஞ்சமுக விநாயகனின் கிருபைதான்.**

தெற்கிலே தோற்றம் பெற்றுள்ள யானைமுகம் ஓர் மாயைத் தோற்றம் தான். வடக்கு கிழக்கிலே தோற்றம் பெற்றுள்ள முகங்களே நிஜமானவை.

இந்த ஐந்து முகங்கள் தீர்வு கிடைக்கும்வரை இடைவிடாது பயணிக்க வேண்டும். சந்தர்ப்பங்களை சாதகமாக்க சில இடங்களில் கரும்பாய் இனிக்க வேண்டும். பல இடங்களில் தீர்வு வேண்டி அந்த மாய முகன் காதுகளில் புகுந்து குடைய வேண்டும். தமிழர்களுக்கு நல்லவிடிவு கிடைக்க அவர்களை மத்தாய் கடைய வேண்டும். நல்லதொரு தொடக்கம் நலம் தரும் என நம்புவோம். இறைவனை வேண்டி இறைஞ்சுவோம்.

ஈழத்தின் தமிழ்த் தலைமைகளில் ஒவ்வோர் முறையும் ஒற்றுமையோடு பயணிப்பதில் ஏற்படுகின்ற தடங்கல்களை ஒரு தடவை யோகர் சுவாமிகள் சொல்லியிருக்கிறார். வேட்டியை கிழித்துக்கட்டத்தொடங்கி விட்டார்கள் இனி கட்டக்கட்டக் கிழியும் இந்த சொல் மிக ஆழமானது எம்மவர்களின் நிலையை அன்றே இவ்விதம் எடுத்துரைத்திருந்தார் யோகர்சுவாமிகள்.

பஞ்சம் படை வந்தாலென்ன, பாரெல்லாம் வெந்தாலென்ன அஞ்சு வோமா நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி என்று பின்னால் நடக்கப் போவதை முன்னால் நற்சிந்தனையில் குறிப்பிட்டார். ஈழத் தமிழர்கள் பஞ்சத்தால் தவிப்பார்கள், படைகளால் தவிப்பார்கள், இறைவன் தான் எமக்கு தஞ்சம் என்பதை சுவாமிகள் கூறினார். இதனை நாங்கள் இதுவரை காலமும் அனுபவ ரீதியிலே உணர்ந்தோம். இப் போதும் உணர்ந்து கொள்கிறோம். மக்கள் மத்தியில் இருந்த தெளிவின்மையும், சில சக்திகளின் குழப் பங்களும், மந்திர வித்தைகளும், குழையடிப்புக்களும் இந்த தேர் தலில் இரு மாயைகளை தோற்றம் பெறச் செய்திருக்கின்றன. இவை இந்த தேர்தலில் வேடமிட்டு வென் றிருக்கின்றன. நலம், தீது என்பவற்றை மக்கள் பிரித்துணர இட மளிக்க வில்லை. அல்லனவற்றை விலக்கி ஓட்டமெடுக்க செய்தலை மழுங் கடித்திருக்கிறது. கால ஓட்டத்திலே தூக்கியெறிந்து வெற்றிட மின்றி வெற்றி நடைபோட வேண்டும் நாம். அதற்குச் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

அந்தவகையிலே,எதுவாக நீபாவனை செய்கின்றாயோ அது நீயாவாய் இதற்கெல்லாம் விடாமுயற்சி அதாவது சலியாமை வேண்டும். பாடுபட அஞ்சுபவனுக்கு ஒரு பிரயோசனமும் உண்டாகாது. பாடின்றி பட்டங்கள் கிடையாதென்பது உலக வழக்கு. காரிய சித்தி எய்தும்வரை விடா முயற்சி செய். இறுதியில் யாவும் ஜெயமாகும். செய்தல், செய்யாமை இவற்றுள் இயல்பாய் எமக்கு தேவைப்படுகின்ற செய்தல் என்பதைப் பற்றி நிற்க வேண்டியவர்களாக தமிழர்களாகிய நாங்கள் இருக்கிறோம்.

தவத்திரு யோகர் சுவாமிகளின் கீழ்வரும் சிந்தனையை சிரமேற் கொண்டு செயற்படுவோம். ஒன்றுக்கும் பயப்பாடாதே, வெற்றியுன் சொந்தம், எத்தனைமுறை தவறினாலும் தைரியத்தை கைவிடாதே. நீ ஒருநாளும் அழியமாட்டாய். காரியம் கைகூடும் மட்டும் வழியிலே தங்கிவிடாதே. உற்சாகத்தோடு முன்னேறிச் செல். உனக்கு சகல சக்தியும் கட்டுப்படுவதைக்காண். வீண்வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே. எழுந்திரு...! விழித்துக் கொள்....! நிலம், நீர், காற்று, நெருப்பு , வானம் இவைகளால் ஆக்கப்பட்ட வீட்டில் இறைவன் வசிக்கிறான். ஆகையால் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்போம். உரிமை எனும் தீபம் ஏற்றி விடியல் எனும் ஒளியை எங்கும் பரவச் செய்வோம். உறுதியுடன் எப்போதும் தளர் வடையாது வீர நடைபயில்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் போருக்குப் பின்னர் சமூக உளவியல் புனர்வாழ்வு

சண்டே ரைம்ஸ்
வார இதழில் பேராசிரியர்
தயா.சோமசுந்தரம் எழுதிய கட்டுரை

பாதிக்கப்பட்ட ஒருவரது காயங்களை ஆற்றி அவரைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதே புனர்வாழ்வு எனக் கூறப்படுகிறது. காயங்கள் என்பது உடல், உள மற்றும் சமூக வடுக்களை உள்ளடக்குகிறது.

போர் காரணமாக அல்லது ஆழிப் பேரலை காரணமாக ஒருவர் இழந்த தனது உடல் மற்றும் உள நலங்களை மீண்டும் அவர் பெறும் விதமாக செயற்படுவதே புனர்வாழ்வு என்பதன் நோக்காகும்.

உளஆற்றுப்படுத்தல், உளப்பிணிச் சிகிச்சை, நடத்தை மற்றும் அறிவாற்றல் சிகிச்சைகள் போன்றவை பாதிக்கப்பட்ட ஒருவரை மீளவும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான உள புனர்வாழ்வின் கீழ் பயன்படுத்தப்படும் சில சிகிச்சை முறைமைகள் ஆகும்.

குடும்ப மற்றும் சமூக மட்டச் சிகிச்சைகள், புனர்வாழ்வு, தொண்டர் நிறுவனங்கள் வலைப் பின்னல்கள், தொழில்சார் சிகிச்சை மற்றும் தொழிற்பயிற்சிகள் போன்றவை சமூக மட்ட உள மற்றும் உடல் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான சிகிச்சைகள் ஆகும்.

இதேபோன்று, ஆத்மார்த்தமான நம்பிக்கை மற்றும் பலம் போன்றன பாதிக்கப்பட்ட ஒருவரின் உடல் உள ஆற்றல்களை அனைத்து மட்டங்களிலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளாகும்.

இலங்கையில் குடும்பங்கள் மற்றும் சமுதாயங்கள் குறிப்பாக வடக்கு – கிழக்கு மற்றும் நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழ்வோர் கடந்த 25 ஆண்டுகளாக போர் வடுக்களைச் சுமந்து கொண்டு வாழ்கின்றனர்.

அத்துடன் இவர்கள் பல்வேறு இடப்பெயர்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். காயமடைந்துள்ளனர், தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர், தமது குடும்ப உறுப்பினர்கள் பலரை, நண்பர்களை இழந்துள்ளனர், தமது வீடுகளை, தொழில்வாய்ப்புக்களை மற்றும் பெறுமதி மிக்க பல்வேறு வளங்களை இவர்கள் இழந்து வாழ்கின்றனர்.

சுகாதார அமைச்சு, யுனிசெப் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் இணைந்து அண்மையில் தனிநபர்களின் உளப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். இந்த வகையில், போருக்குப் பின்னான உளத்தாக்கங்களுக்கு 13 சதவீதத்தினரும், 49 சதவீதத்தினர் பதற்றத்துக்கும், 42 சதவீதத்தினர் மனஅழுத்தங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்த ஆய்வானது போரின்போது இடம் பெயர்ந்த வன்னிப் பிரதேச மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று புத்தளத்திலுள்ள இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 18.8 சதவீதத்தினர் பொது மனத் தாக்கங்களுக்கும், 14 சதவீதத்தினர் மரபுவழி மனநோய்க்கும், 1.3 சதவீதத்தினர் பெரிய மன அழுத்தத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு ஆய்வில், போருக்குப் பின்னான மனத் தாக்கங்களுக்கு 6.7 சதவீதத்தினரும், மன அழுத்தத்துக்கு 15.7 சதவீதத்தினரும், 7.9 சதவீதத்தினர் மரபுவழி உளத் தாக்கத்துக்கும், 10.8 சதவீதத்தினர் தொடர்பறு சீர்குலைவாலும், 3.3 சதவீதத்தினர் மூளைப் பாதிப்புக்கும், 3.5 சதவீதத்தினர் மதுபான சீரழிவுக்கும் ஆளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னான உளவியல் தாக்கத்தின் விளைவாக தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சி மற்றும் வீட்டு வன்முறைகள் உட்பட பல்வேறு உளசமூகப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. போரின் தாக்கம், வடக்கு – கிழக்கு மக்கள் மத்தியில் மிகப் பெரிய உள மற்றும் உள சமூகப் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு உளசமூக புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இராணுவ மற்றும் ஆயுதக்குழுக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம், இவர்களது குடும்பங்கள் மத்தியில் பிணக்குகள் மற்றும் வீட்டு வன்முறைகள், மதுபானப் பாவனை, போதைப் பொருள் பாவனை, சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகள், தற்கொலைகள் போன்றன அதிகரித்துள்ளன.

தொடர் இடப்பெயர்வின் காரணமாக குடும்பங்கள் பிரிந்துள்ளன. குடும்ப உறுப்பினர்கள் இறந்துள்ளனர், காணாமற்போயுள்ளனர், காயமடைந்துள்ளனர், பெண்கள் தமது குடும்பங்களைத் தலைமை ஏற்று நடத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. முழுச் சமூகத்தின் வடிவமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய சூழல் முறைமைகள் அதாவது வாழ்வு முறைமை, கிராமங்கள், உறவுகள், தொடர்புடைமை, சமூக முதலீடுகள், கட்டமைப்புக்கள், நிறுவகங்கள் போன்றவை சீர் குலைந்துள்ளன. இவற்றின் ஒட்டுமொத்த விளைவால் சமூக இழைகள் அறுந்துள்ளன. நம்பிக்கையீனங்கள், தொடர்புகள் துண்டிக்கப்படல், தங்கியிருத்தல், ஊக்குவித்தல் இல்லாமை, அதிகாரம் இழக்கப்பட்டமை போன்ற பல்வேறு சீர்குலைவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான மன வடுக்கள் பெற்றோர் சிறுவர் தொடர்பாடல் மூலம் கடத்தப்படுகின்றன. போரின் பின்னரான சமூக மட்டத் தாக்கங்கள் பல மட்டங்களிலும் பரவியுள்ளன. இவ்வாறான வடுக்களைப் போக்குவதற்கு தனிப்பட்டவர்களிடம் உளவியல் சார் அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படுவது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

சமூக மட்டப் பிரச்சினைகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். இதற்கும் மேலாக, குடும்பங்கள், சமூகங்கள் மத்தியில் சமூக–பொருளாதார புனர் வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, அவை வெற்றி கொள்ளப்பட வேண்டும். மிகப்பெரிய இயற்கை அழிவுகள் அல்லது மிகக்கொடிய உள்நாட்டு போர் போன்றவற்றின் விளைவுகள் சமூக முதலீட்டில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. நீண்டகாலப் போரின் போது சமூக முதலீடு என்பது அழிக்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். நேர்மறையான சமூக முதலீடு என்பது சமுதாயத்தை மீளக்கட்டியெழுப்பவும், அழிவுகளை எதிர்த்து நிற்கக்கூடிய ஆளுமையையும், வினைத்திறனுடன் இவற்றை முகங்கொடுக்கும் ஆற்றலையும் மேம்படுத்துகிறது. பாரம்பரிய இலங்கைச் சமுதாயங்களின் சமூக முதலீடு என்பது உயர்வாக உள்ள போதிலும், இவை சமூக, குடும்ப மற்றும் இனவழி தொடர்பாடலால் பின்னிப் பிணைந்துள்ளன. போட்டி, இனங்களுக்கிடையிலான நல்லுறவு எட்டப்படாமை போன்ற பல்வேறு காரணிகளே நாட்டில் போர் ஆரம்பிப்பதற்கான காரணியாகும்.

பாதுகாப்பின்மை, அச்சம், பலமான உணர்வுகள் போன்றவை ஒரு குழுவின் அடையாளம், கலாசாரம், வாழ்வு முறை, நில வளங்களைப் பயன்படுத்துதல், நீடித்து நிலைத்து நிற்றல் போன்ற பல்வேறு காரணிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது, எதிர்ப்புகள் தலைதூக்குகின்றன. இதுவே பின்னர் கூட்டுச் செயற்பாடுகள், எதிர்ப்புக்கள், ஆயுதக்குழுக்கள் மற்றும் வன்முறைகள் தோன்றக் காரணமாகும். ஆட்சியாளர்களுக்கும் அதிகாரத்துவம் மிக்க சமூகத்துக்கும் இடையில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதேபோன்று ஏழைகள் அல்லது அதிகாரத்துவ வளங்களை அடைய முடியாதவர்கள், தீர்மானம் இயற்றுபவர்கள், சந்தர்ப்பவாத கட்டமைப்புக்களைக் கட்டுப்படுத்துதல், வளப் பகிர்ந்தளிப்பு போன்ற நிலையிலும் மோதல்கள் ஆரம்பிக்கின்றன. குழுக்களிடையே பாரபட்சம் காண்பித்தல், சிறுபான்மையினர் மத்தியில் சமூக முதலீடு பற்றாக்குறை நிலவுவதும் மோதலுக்கான காரணியாகும். இவ்வாறான பல்வேறு காரணிகளால் ஏற்படும் போரின் பின்னர் பாதிக்கப்பட்ட சமூகங்கள் உடல் மற்றும் உளத் தாக்கங்களுக்கு ஆளாகுகின்றன.

> தொடர் இடப்பெயர்வின் காரணமாக குடும்பங்கள் பிரிந்துள்ளன. குடும்ப உறுப்பினர்கள் இறந்துள்ளனர், காணாமற்போயுள்ளனர், காயமடைந்துள்ளனர், பெண்கள் தமது குடும்பங்களைத் தலைமை ஏற்று நடத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. முழு சமூகத்தின் வடிவமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போருக்குப் பின்னான புனர்வாழ்வு, மீளிணக்கப்பாடு போன்றவற்றுக்கான முக்கிய அம்சமாக நம்பிக்கையை ஏற்படுத்துதல் அமைந்துள்ளது. சமூகத்தையும் தேசத்தையும் ஒன்றாக்கும்போதே புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கப்பாடு என்பது சாத்தியமாகிறது.

சட்டம் மற்றும் ஒழுங்குமுறையைப் பின்பற்றுதல், நீதி, அரச கட்டுமானங்கள், அதிகாரிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும், பல்வேறு சமூக உறுப்பினர்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். புங்குடுதீவில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு, மக்கள் அரச பொறிமுறை மீதான நம்பிக்கையை இழந்தமையே காரணமாகும். சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி போன்றவற்றுக்குப் பொறுப்பளிக்க வேண்டியவர்கள் மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். போரின்போதும் அதன் பின்னரும் மக்கள் இவ்வாறான சட்ட ஒழுங்கின் பாதிப்பால் பல்வேறு துன்பங்களைச் சந்தித்துள்ளனர். இதுவே அவர்கள் இன்று சட்டத்தை மதியாது அதைத் தமது கைகளில் எடுத்துள்ளமைக்கான பிரதான காரணமாகும்.

இலங்கையின் வடக்கில் நிலவும், தற்போதைய போருக்குப் பின்னரான சூழல் தொடர்பாக தனிநபர்கள், குடும்பத்தினர், சமூகம் மற்றும் சமூக, கலாசாரம் எனப் பல்வேறு முறைகளின் கீழ் மதிப்பாய்வு செய்யப்பட்டது. பெரும்பாலான மக்கள் மன அழுத்தங்களுடன் வாழ்வது இதன் மூலம் அறியப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, 2010இல் யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரியில் கல்விகற்ற வன்னிப் பிரதேச மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் அவர்களில் 82 சதவீதத்தினர் நேரடியாகப் போரின் தாக்கத்தை அனுபவித்துள்ளனர்.

67 சதவீதத்தினர் மரணத்திலிருந்து தப்பியுள்ளனர். 63 சதவீதத்தினர் தமது குடும்ப உறுப்பினர்களை மற்றும் நண்பர்களை இழந்துள்ளனர். 43 சதவீதத்தினர் படுகொலைகளை நேரில் பார்த்துள்ளனர், 23 சதவீதத்தினர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர், 23 சதவீதத்தினர் கடத்தப்பட்டவர்கள், 18 சதவீதத்தினர் சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். 38 சதவீத மாணவர்கள் மனவடுசார் நிகழ்வுகளையும் 28 சதவீத மாணவர்கள் மனவடு நிகழ்வுகளுக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான எவ்வித உளசமூக உதவிகளையும் பெற்றிருக்கவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கதே. இவ்வாறானவர்கள் தற்கொலை செய்துகொள்ளும்போது அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஏனெனில் இவர்கள் பல்வேறு மன உளைச்சல்களுடனேயே தற்போது வாழ்ந்து வருகின்றனர். இவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான உளப் புனர்வாழ்வு வழங்கப்படவில்லை.

வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 10 தொடக்கம் அதற்கும் மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் எதிர்பாராத வகையில் திடீரென மரணமடைந்தமை இந்த மக்கள் மத்தியில் ஆழமான மனவடுக்களைத் தோற்றுவித்துள்ளன. இவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களது உறவுகள் காணாமற்போயுள்ளனர், குடும்பங்கள் பிரிந்துள்ளன, கைதுகள் இடம்பெற்றுள்ளன, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், குண்டுத் தாக்குதல்களையும் எறிகணைகணை மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் நேரில் பார்த்துள்ளமை போன்ற பல்வேறு துன்பியல் அனுபவங்களை வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்கள் நேரடியாக அனுபவித்துள்ளனர்.

இவர்கள் உளத் தாக்கங்களுக்கு மட்டுமல்லாது, தாகம், பசி, நீண்ட நடை, மருத்துவ வசதியின்மை, தங்குமிட வசதியின்மை போன்ற பல்வேறு துன்பங்களை போரின்போது அனுபவித்துள்ளனர்.

இவ்வாறான துன்பியல் அனுபவங்கள் மக்களின் உள உடல் தாக்கங்களில் பாதிப்பைச் செலுத்துகின்றன. இதுவே உளசமூகத் தாக்கங்களுக்கு காரணமாகும். இவை அதிகரிக்கும் போது குறித்த நபர் மனநோயாளி என அடையாளங் காணப்படுகிறார்.

போரின் தாக்கமே வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கும் காரணம் என சுட்டிக் காட்டப்படுகின்றது. இவ்வாறான போரியல் தாக்கங்களால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு பாதிப்புக்களைச் சந்திக்கின்றன. தொழில்வாய்ப்பற்ற நிலை அதிகரித்துள்ளது. இதனால் கீழ்த்தரமான சில தொழில்களை மேற்கொள்ளும் நிலை காணப்படுகிறது.

குறிப்பாக, கசிப்பு உற்பத்தி, குறைந்த வருமானமே கசிப்பு உற்பத்தியால் கிடைக்கின்ற போதிலும், வேறெந்த தொழிலிலும் ஈடுபட முடியாத சிலர் இதில் ஈடுபடுகின்றனர். கசிப்புக் குடிப்பதால் அது நுரையீரலையும் மற்றும் பிரதான உறுப்புக்களையும் செயலிழக்கச் செய்கிறது.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம், குறிப்பாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பன அதிகரிப்பதற்கும் போர்ப் பாதிப்புக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவ்வாறான மிகமோசமான போருக்குப் பின்னான மனவடுக்கள் ஆற்றப்படுவதற்கான தக்க தருணம் இதுவாகும். இது மேலும் தாமதிக்கப்படாது ஆற்றுப்படுத்தல்கள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

நன்றி புதினப் பலகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுடோக்கு எண் விளையாட்டு

			1		8			
	6	1				7		
9						5		
		3	7		5			
					9			
8	7				2	4	9	
								2
2				8	1			
1		4	3					

நேற்றைய சுடோக்கின் விடை

2	5	1	4	6	7	8	9	3
4	9	3	1	5	8	2	7	6
7	6	8	2	3	9	4	1	5
3	7	5	9	1	2	6	4	8
6	8	9	7	4	3	1	5	2
1	2	4	6	8	5	9	3	7
9	4	2	3	7	6	5	8	1
8	3	6	5	9	1	7	2	4
5	1	7	8	2	4	3	6	9

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண் டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

வேகவைத்து சாப்பிட வேண்டிய உணவுகள்

எண்ணெயில் வறுத்த உண வுகளை விட, வேக வைத்த உணவுகள் உடல் ஆரோக்கி யத்துக்கு உதவும்.
ஏனெனில் வேகவைத்த உண வுகளில் உள்ள சத்துக்களே உடலில் சேரும், அந்த வகை யில் வேகவைத்துச் சாப்பிடவேண்டிய உணவுகள் சில–
1. கரட்டை குளிர்ந்த நீரில் கழுவிய பின் னர் உப்புச் சேர்த்து வேகவைத்து சாப் பிடவேண்டும். வேகவைத்த கரட் தான் கண்களுக்கு நல்லது.
2. தினமும் ஓர் வேகவைத்த பீட்ரூட்டை சாப்பிட்டால் குருதி ஓட்டம் சீர்படும். மேலும், பீட்ரூட்டை 3 நிமிடங்கள் தான் வேக வைக்க வேண்டும்.
3. வேகவைத்த உருளைக் கிழங்கில் கலோரிகள் குறைவு, இதனால் உடல் நிறை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.
5. அவரையை வேகவைத்து அதில் கொஞ்சம் உப்பு, மிளகு சேர்த்துச் சாப் பிடு வது நீரிழிவு நோயாளிகளுக்குச் சிறந்தது.
6. சோளத்தில் இருக்கும் நார்ச்சத்து உடலுக்குப் போய்ச் சேரவேண்டுமெனில் அதனை வேகவைத்துச் சாப்பிடுவது நல்லது.

	மருதனார் மடம்	சாவகச்சேரி	கண்ணாடி	நெல்லியடி	திருநெல் வேலி	கிளிநொச்சி	மன்னார்	வவுனியா
முள்ளங்கி	40	–	40	60	80	60	60	30
கத்தரி	120	80	80	80	100–120	60	80	40
கரட்	160	160	100	100	100–180	160	140	150
மரவள்ளி	60	50	60	40	60	40	60	40
பயிற்றை	140	40	60	100	60	40	140	50
பாகல்	120	100	100	100	80	120	120	80
கருணைக்கிழங்கு	120	100	100	120	80	80	120	70
பெ.வெங்காயம்	120	100	120	100	90	120	120	90
சி.வெங்காயம்	80	100	100	80	80	80	80	50–60
பூசணி	40	30	50	30	30–35	40	60	40
தக்காளி	100	120	100	80	80	120	100	70–80
வாழைக்காய்	60	50	50	80	40	40	60	30
கீரை	15	30	30	10	20	30	35	20
பொன்னாங்காணி	20	40	30	20	20	40	15	10
பச்சை மிளகாய்	160	170	250	160	160	400	120	150
புடோல்	40	30	50	40	60	40	80	50
தோவா	90	100	80	80	60	80	100	60
வெண்டி	40	30	50	40	80	80	80	70
போஞ்சி	160	–	180	180	140	160	180	160
லீக்ஸ்	80	100	160	100	80–100	80	120	130
தேங்காய்	40	45	50	50–60	60	40–60	50	35
உருளைக்கிழங்கு	100	90	100	90	80–90	90	100	80
தேசிக்காய்	80	60	80	160	60	60	150	100–110
வல்லாரை	20	20	10	10	30	20	20	08–10
கறிமிளகாய்	120	100	140	80	160	160	160	80
இராசவள்ளி	120	100	160	160	140	120	180	90
முருங்கைக்காய்	100	120	60	40	100	90	120	65–70

இறைநாமத்தை உச்சரிப்போம்

ஞானச்சுடர்

இன்றைய இளம்சமுதா யம் தெற்கு நோக்கிப் பயணஞ்செய்வதைத் தடுத்து நிறுத்தி இறை நாமத்தை உச்சரிக்கப் பண்ணி, வடக்கு நோக் கித் திருப்ப வேண்டி யது பெற்றோர்களின் கடமை. எந்த நேரமும் ஏதாவது சப்பிக்கொண்டு, வேறுபல அவத்தொழில் களைச்செய்துகொண்டு, தேவையற்ற ஒரு பிர யோசனமில்லாத கெட்ட சிந்தனையில் ஈடுபட் டுத் தவப்பொழுதை அவப்பொழுதாகக்கழிக் கும் மானுடரே சிறிது சிந்தியுங்கள். இறைவன் தந்த இந்த உடம்பு நிலையில்லாதது. நீர்க் குமிழிக்கு நிகரானது. யாக்கை என்பது ஆன் றோர் வாக்கு. எனவே நாம் உயிருடன் இருக் கும் பொழுதே இறை வனின் நாமத்தை உச்ச ரித்து நல்ல வழியில் செல்ல வேண்டும்.

நாளை

ஆவணி–05
சனிக்கிழமை
22.08.2015
திதி: ஸப்தமி
மு.ப.8.43
வரை
நட்சத்திரம்:
விசாகம்
மாலை
06.22 வரை
சுபநேரம்:
03.05–04.35 வரை
இராகுகாலம்:
09.05–10.35 வரை

இலட்சியத்தை நோக்கி முன்னேறு

உனது நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அது குறித்துக் கவலைப் பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக்கொண்டு முன்னேறிய படியே இரு!
மற்றவர்களுக்கு நன்மை செய் வது புண்ணி யம்; தீமை செய் வது பாவம்.
மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.
கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

	பாற்பாணம்	மன்னார்	கிளிநொச்சி	பருத்தித் துறை	சாவகச்சேரி	மாதகல்
இறால்	500	650	800	600	650	550
நண்டு	250	400	400	300	200	400
கணவாய்	500	600	700	600	600	–
பாரை	500	500	600	500	–	400
சுறா	500	600	500	600	–	450
சீலா	250	500	400	350	300	–
விளை	550	400	450	400	400	350
மூரல்	250	400	300	300	–	350
கும்பிளா	350	400	400	400	–	–
கிழாக்கன்	450	800	700	400	–	–
ஓரா	300	400	300	400	–	300
திரளி	200	300	200	250	–	250
நகரை	150	300	300	300	–	–
கூடை	100	200	130	120	150	80
ஒட்டி	200	150	300	300	–	250
திருக்கை	100	350	200	250	200	120
பாலை	300	300	400	400	300	300
வாழை	100	200	–	300	–	–
கொய்	80	200	150	100	50	–
மதனம்	100	300	200	250	100	200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாத இராசி பலன்கள்

மிதுனம்

சேமித்து வைப்பதில் தேனீக்களைப் போலவும், செலவழிப்பதில் ஒட்டகத்தைப் போலவும் குணம் கொண்ட நீங்கள், சரியெனப் பட்டதையே செய்வீர்கள். கடந்த ஒருமாத காலமாக இராசிக்கு 2இல் அமர்ந்து உங்களை ஏடாகூடமாக பேசவைத்து, கோபப்பட வைத்து, சில நேரங்களில் வெறுப்பை ஏற் படுத்திய சூரியன் 3 ஆம் வீட்டில் வலுவாக நுழைந்திருப்பதால் தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். இளைய சகோதர வகையில் இருந்து வந்த பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். இராசிக்கு 2 ஆம் வீட்டில் செவ்வாய் நிற்பதால் சில நேரங்களில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவீர்கள். மற்றவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். குரு 3 இல் தொடர்வதால் எதிர்பார்ப்புக்கள் தாமதமாக முடியும். பிரபலங்களுடன் கருத்து மோதல்கள் வரும். சனிபகவான் வக்ரமாகி 5 இல் நிற்பதால் ஓரளவு நன்மை உண்டாகும். சோர்வு, களைப்பு நீங்கி உற்சாகமடைவீர்கள். உங்களின் இராசியில் புதன் இந்த மாதம் முழுக்க வலுவடைந்திருப்பதால் பரபரப்பாகக் காணப்படுவீர்கள். ஒரேநேரத்தில் இரண்டு மூன்று வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடித்துக் காட்டுவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். வீடு மாறுவீர்கள். தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் விலகும். தாயார் ஆதரவாக இருப்பார். தாயாரின் உடல் நலம் சீராகும். அரசியல்வாதிகளின் கோரிக்கையை மேலிடத்தில் ஏற்பார்கள். கன்னிப் பெண்களுக்கு காதல் கனியும். கல்யாணம் கூடி வரும்.

மாணவர்கள் சமயோசித புத்தியைப் பயன்படுத்த வேண்டும். கெட்ட நண்பர்களை விட்டு விலகுங்கள். வியாபாரத்தில் கொஞ்சம் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். வேலையாள்களை மாற்றி விட்டு அனுபவமிகுந்தவர்களைப் பணியில் அமர்ந்து வீர்கள். புது முகவர் எடுப்பீர்கள். பெரியளவில் யாருக்கும் முற் பணம் கொடுக்க வேண்டாம். பங்குதாரர்கள் உங்களை கேட்கப்படுத்தும்படி பேசினாலும், அவசரப்பட்டு வார்த்தைகளைவிட வேண்டாம். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி அதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் சம்பள உயர்வுக்காகப் போராடுவீர்கள். சில பணிகளைப் போராடி முடிக்க வேண்டி வரும்.

கலைத்துறையினர்கள் மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவீர்கள். வேற்றுமொழி வாய்ப்புக்களால் புகழடைவீர்கள். விவசாயிகள்: தரிசு நிலங்களையும் இயற்கை உரத்தால் பக்குவப்படுத்தி விளையச் செய்வீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் தடைப்பட்ட வேலைகளை முடித்துக் காட்டும் மாதமிது. சுபயோக பலன்கள் நிறைந்த மாதம். சுபகாரிய நிகழ்ச்சிக்கான பிள்ளையார் சுழிபோடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் நிலவும். மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் நலமடைவார்கள். தடைப்பட்டகட்ட வேலைதொடங்கும். ஸ்திரமான முடிவுகள் எடுப்பீர்கள். நண்பர்களிடம் இருந்து சற்று விலகி இருப்பது நல்லது. கர்ப்பிணிகள் கவனமாக இருப்பது அவசியம். கல்வி வகையில் திடீர்ச் செலவுகள் இருக்கும். கணினி, செல்போன் போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசி செயற்படுவது நல்லது. வெளிமாவட்டங்களிலுள்ள கோயில்களுக்குச் சென்று வருவீர்கள். உத்யோகத்தில் தடைகள் நீங்கும். விரும்பிய மாற்றங்கள்வரும். வியாபாரம் உச்சமடையும். புதிய பதிவுகள்கிடைக்கும். வரவு –செலவுகளில் கவனமாக இருப்பது நல்லது.

பரிகாரம்: ஸ்ரீராமஜெயராம என்று தினமும் 108 முறை சொல்லலாம். புதன்கிழமை சக்கரத்தாழ்வாரை வழிபடலாம். வீதியோரம் வசிப்பவர்களுக்கு ஆடை தானம் செய்யலாம்.

கடகம்

பொதுவாக அமைதியை விரும்பும் நீங்கள் போட்டியென வந்து விட்டால் விஸ்வரூபம் எடுத்து மற்றவர்களை மிரள வைப்பீர்கள். உங்கள் இராசியிலேயே செவ்வாய் அமர்ந்திருப்பதால் வேகமாக சில முக்கிய காரியங்களை முடிப்பீர்கள். சோர்வு, அசதி எல்லாம் நீங்கும். நெருக்கடி நேரத்திலும் புத்திசாலித்தனமாக முடிவெடுப்பீர்கள். சிலநேரங்களில் உடல் உஷ்ணம் அதிகமாகும். லேசாக அடிவயிற்றில் வலி வரக்கூடும். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது சாதகமாக முடியும். பாதிப் பணம் தந்து முடிக்கப் படாமலிருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப்பதிவு செய்வீர்கள். குருபகவான் இராசிக்கு 2 ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் பேச்சில் முதிர்ச்சி தெரியும். அனுபவ பூர்வமாகப் பேசிப் பல காரியம் சாதிப்பீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். சிலருக்கு புது வேலை அமையும். சூரியன் இந்த மாதம் முழுக்க 2 ஆம் வீட்டில் நிற்பதால் கண் பார்வையைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். கண்ணில் அடிபட வாய்ப்பிருக்கிறது. இருசக்கர வாகனங்களில் செல்லும்போது தலைக்கவசம் அணிந்து செல்வது நல்லது. புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் சமயோசித புத்தியால் சாதிப்பீர்கள். அரசகாரியங்கள் சாதகமாக முடியும். வழக்கு சாதகமாகத் திரும்பும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள்,எந்த கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப் பாருங்கள். கன்னிப் பெண்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

மாணவர்கள்: ஆசிரியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் கிடைக்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். வாடிக்கையாளர்கள் உங்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வார்கள். பழைய வேலையாள்கள் மீண்டும் பணியில் வந்து சேர்வார்கள். பங்குதாரர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். உத்தியோகத்தில் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். புதுப் பொறுப்புகளும் தேடி வரும். புகழ், கௌரவம் கூடும். விவசாயிகளுக்கு, விளைச்சல் அதிகரிக்கும். பக்கத்து நிலத்தையும் வாங்குமளவுக்கு வருமானம் உயரும். தொட்டது துலங்கும் மாதமிது. தன, பஞ்சம ஸ்தான கிரக பலம் காரணமாக ஏற்றம், மாற்றம் உண்டு. குடும்பத்தில் இருப்பவர்கள் ஒத்துழைப்பார்கள். பிள்ளைகளுக்குத் தோஷம், தடை நீங்கி திருமண யோகம் கூடிவரும். விலகி நின்ற சொந்தங்கள் நெருங்கி வந்து உறவாடுவார்கள். வரவேண்டிய பணம் கை வந்து சேரும். தந்தை உடல்நலத்தில் அக்கறை தேவை. இட மாற்றம் சம்பந்தமாக நல்ல முடிவு வரும். சொத்து விடயமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். வங்கியில் இருந்து சாதகமான பதில் வரும். கன்னிப் பெண்கள் நிதானமாகப் போவது நல்லது. மாமன் வகை உறவுகளால் ஆதாயம் இருக்கும். அலுவலகத்தில் வேலைச்சுமை உண்டு. புதிய பொறுப்புஏற்கவேண்டி வரும். வியாபாரம் ஸ்திரமாக இருக்கும்.

பரிகாரம்: ஸ்ரீராம ஜெயராம என்று தினமும் 108 முறை சொல்லவும். பௌர்ணமியில் அம்மன் கோயிலுக்குச் செல்லலாம். பக்தர்களுக்கு சுலோகப் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கலாம்.

குடும்பத்தில் அன்னியோன்னியம் அவசியம்

திருமணமான ஆணும் சரி, பெண்ணும் சரி. தங்கள் இணையை அன்பாலும், அரவணைப்பாலும், அன்னியோன்னியத்தாலும், நட்பாலும், காதலாலும் அணைத்துக் கொள்ளவேண்டும். இது எவர் மனதிலும் சலனத்தை ஏற்படுத்தாது. பரஸ்பர நம்பிக்கை, ஒருவர் மீது ஒருவர் வைக்கும் அளவு கடந்த நிபந்தனையற்ற அன்பு, புரிதல், அனுசரித்தல், நட்பு பாராட்டுதல் அன்னியோன்னியம் போன்றவை தம்பதியருக்குள் அவசியம்தேவை. ஆனால்நிஜத்தில் நடப்பது என்ன? கணவரை பெண்கள் சம்பாதிக்கும் இயந்திரமாகக் கருதி அது வேண்டும், இது வேண்டும் என்ற நச்சரிப்பில் பாதி ஆயுளைக் கழிக்கிறார்கள். குழந்தைகளையே பேணிக் கணவரைக் கண்டுகொள்ளாமல் விடும்போது மனத் தடுமாற்றங்கள் கணவருக்கு ஏற்படுகிறது. இதே போன்று அடிப்படை அன்பும் மனிதாபிமானமுமின்றி வீட்டு வேலைகளுக்கும், தனது வயதான பெற்றோரைக் கவனிக்கவும் மட்டும் பயன்படுத்திக் கொண்டு உடல் அளவிலோ மனதளவிலோ அரவணைப்புச் செலுத்தாத வேளைகளிலே தடம் மாறும் அப்பாவிப் பெண்களும் இருக்கிறார்கள். தவறுகளுக்கான காரணங்கள் ஆராயப்பட்டுக் களையப்படுவது தம்பதியர் நிலை தடுமாறாமலிருக்க உதவும். ஒரு ஆணுக்குப் பெண்ணிடமிருந்து உடல் சுகத்துடன் உளச் சுகமும் தேவைப்படுவதுபோல ஒரு பெண்ணுக்குக் கோடி கோடியாய் பணமோ நகைகளோ சொத்துக்களோ மகிழ்ச்சியைக் கொடுத்திடாது. கணவரின் அன்பான பேச்சு, அக்கறை, காதல், கனிவான அணுகுமுறையே அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். அதேபோன்று கணவரின் திறமைகள் என்ன? எந்த நேரத்தில் என்ன மனநிலை? பிடித்தது என்ன? பிடிக்காதது என்ன? உணர்வுகளுக்கு மரியாதை கொடுக்கப்படுகிறதா? முகத்திலும் அகத்திலும் வித்தியாசம் காட்டுங்கள். துணையைப் புரிந்து நடந்து பாருங்கள், மனைவியின் அழகை, செய்யும் சிறிய நல்ல செயல்களையும் அவ்வப்போது பாராட்டுங்கள், குற்றங்களையும் விரலை நீட்டிச் சுட்டிக் காட்டாமல் அக்கறையுடன் பொறுமையாய் அன்புடன் நண்பனாய் இருந்து பாருங்கள். மனைவியும் கணவரிடத்தில் அன்பாகப் பழகுவதோடு மட்டுமில்லாமல் குறிப்பறிந்து பழகலாமே? மனைவியும் உடல் அழகையும் உள்ள அழகையும் மேம்படுத்த கணவருடன் அன்னியோன்னியமாக இருக்க வேண்டும். இயந்திரமயமான உலகிலே பணம் சம்பாதிப்பதும் சொத்துக்கள் சேர்ப்பதும் குழந்தைகளைப் படிக்க வைப்பதுமே வாழ்க்கையில்லை. அவை வாழ்வின் இன்றியமையாதவை என்றால் கணவர் மனைவி உறவு அதைவிட இன்றியமையாதது, வயதானாலும் மனதுக்கு என்றும் இளமைதான். ஒவ்வொருநாளும் இணையை உயிருக்கு உயிராக்க காதலியுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோபத்தைத் தவிருங்கள்!

ஒரு கிராமத்தில் ஒருத்தன் அழகிய புள்ளிமான் ஒன்றைத் தனது வீட்டில் வளர்த்து வந்தான். ஒரு நாள், அந்த மான் காணாமல் போய்விட்டது. அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அந்த மனிதன், அந்த மானைப் பிடித்துக் கொண்டு சென்றவனைப் பழிவாங்கத் துடித்தான். கடவுளிடம் முறையிட்டான். கடவுளும் காட்சிகொடுத்தார். கடவுளிடம் அந்த மனிதன், தான் ஆசையாய் வளர்த்த மானைத் தாருங்கள் என்று தானே கேட்டிருக்க வேண்டும்? ஆனால் அவரே அவ்வாறு கேட்கவில்லை. மாறாக, ஆத்திரத்தில், நான் ஆசையாய் வளர்த்த மானை யாரோ அபகரித்துச் சென்று விட்டார்கள். அந்த மானைத் திருடியவன் யாராக இருந்தாலும் அவனை எனக்கு முன்னால் நிறுத்த வேண்டும் என்று கேட்டான்.

அதற்குக் கடவுள், "பக்தா! மானை நான் உனக்குத் திருப்பித் தருகிறேன். ஆனால், மான் காணாமற்போனதற்கு காரணமானவர்கள் யார் என்று கேட்காதே" என்றார்.

"கடவுளே! நான் மிகுந்த கோபத்தில் உள்ளேன். மானைத் திருடியவனைப் பழிவாங்காமல் விடமாட்டேன். எனவே, திருடியவனை இங்கு வர வழைக்க வேண்டும்" என்றுபிடிவாதமாக அந்த மனிதன் கேட்டான். இதனைக் கேட்ட கடவுள், சரி. நீ கேட்கும் வரத்தைத் தருகிறேன். ஆனால், பின்னால் வருத்தப்படக் கூடாது என்றார். அந்த மனிதனும் சரி என்றன்.

தந்தேன் நீ கேட்ட வரத்தை. அந்த மானைத் திருடிச் சென்றவர் உனது பின்னால் நிற்கிறா என்று பக்தனிடம் கூறினார் கடவுள். உடனே அவன் திரும்பிப் பார்த்தான். மிகப் பெரிய சிங்கம் ஒன்று நின்று கொண்டிருந்தது. சிங்கத்தைப் பார்த்தவுடன், பழிவாங்கும் ஆத்திரம் மறைந்து, பயம் கவ்விக் கொண்டது. அய்யோ கடவுளே காப்பாற்று! என்று அலறியடித்துக் கொண்டு ஓடினான்.

இந்தக் கதையில் வரும் மனிதனுக்கு அறிவு வேலை செய்யவில்லை. ஆத் திரம் தான் வேலை செய்தது. அது அழிவைத் தந்தது. எனவே, கோபத்தைத் தவிருங்கள். அன்புடனும், அமைதியுடனும் வாழுங்கள்.

விடுகதைகள்

1.கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
கரும்பு

2.பிடுங்கலாம், நடமுடியாது அது என்ன?
தலைமுடி

3.வாலால் நீர் குடிக்கும்,வாயால் பூச் சொரியும் அது என்ன?
விளக்கு

4.நன்றிக்கு வால், கோபத்துக்கு வாய், அது என்ன?
நாய்

5.உயரத்தில் இருப்பிடம். தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?
இளநீர்

6.தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?
அன்னாசிப்பழம்

7.எட்டுக்கால் ஊன்றி இருகால் பட மெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அவர் யார்?
நண்டு

மொனராகலை

இது இலங்கையின் தெற்கே ஊவா மாகாணத்தில் உள்ள மாவட்டமாகும். மொனரா கலை மாவட்டத்தில் உள்ள ஒரு நகரமும் இதுவேயாகும். இது கொழும்பு–மட்டக்களப்பு பிரதான பாதையில் அமைந்துள்ளது. இந்த நகரம் மொனரா கலை பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. மொனராகலை இலங்கையின் 25 மாவட்டங்களில் ஒன் றாகும். மொனரா கலை மாவட்டம் 3 நாடா ளுமன்றத் தொகுதி களைக் கொண்டுள்ளது. இது 319 கிராம சேவகர் பிரிவுகளையும், 11 பிரதேச செயலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.



எண்ணங்களைக் கட்டுப்படுத்தி வெற்றி காணுங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

13. நாம் வாழ்க்கையின் கீழ் மட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால் அதன் உயர்ந்த பரிமாணங்களைப் பற்றி பகுத்தறிந்து வாழும் ஆனந்தத்தை இழந்துவிடுகிறோம்.

14. நீங்கள் தொடர்ந்து நல்ல வழியில் சிந்தித்தால் நீங்கள் வெறுமனே உள்ளமும் உடலும் மட்டுமல்ல அதற்கும் அப்பாலும் உள்ளவர் என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

15. உள்மன நிலைமைகளை விவேகத்துடன் கையாண்டு உங்களை அவமானப் படுத்திய தால் வரும் துன்பங்களை மறக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதை மனதில் வைத்திருந் தால் நல்ல சிந்தனைகளின் வீச்சுக்கு தடையாகிவிடும்.

16. உள்மன நிலையை மாற்றிக் கொண்டால் அமைதியானவராகவும் அதிக சக்தி மிக்கவராகவும் நீங்கள் மாறிவிடுவீர்கள். வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களில் மாட்டுப் பட்டு தவிக்கமாட்டீர்கள்.

17. மனக்குழப்பம் என்று பலர் கூறுவார்கள். நீங்கள் அதற்கு ஆட்பட்டுவிடக்கூடாது குழப்பம் என்பது ஓடும் மேகங்களைப் போன்றது. அவ்வப்போது வரும், போகும். அதைக் கழற்றி விட்டு இயல்பாக வாழப் பழக வேண்டும்.

18. இந்தக் கணத்தை ஆனந்தமாகக் கழி. நேற்றைய கெட்ட தினத்தையே எண்ணிக் குமைந்து கொண்டிருக்காதே.

19. பிணம் நீரில் இலகுவாக மிதக்கும். ஆனால் மனிதன் நீரில் மூழ்கி இறந்துவிடுவான். மனிதன் நீரில் மூழ்கக் காரணம் அவன் நீருடன் சண்டை போடுகிறான். பிணம் நீருடன் சண்டையிடுவதில்லை. ஆதலால் மிதக்கிறது. வாழ்க்கையைக் கடல் என்று கூறுவார்கள் அந்தக் கடலுடன் சண்டையிட்டு மூழ்காது பிணம் போல இலகுவாக மிதக்க வேண்டும்.

20. நீங்கள் குழப்பமாக இருப்பதால்தான் சகல பிரச்சினைகளும் வருகிறது. பாம்மைப் பயத்துடன் அணுகினால் தீண்டிவிடும். இயல்பாக இருந்தால் வந்த வழியே போய்விடும்.

21. எதிரியையும் அன்புடன் நேசித்தால் பகை தானாக விலகிவிடும். எந்தக் காரியம் செய்தாலும் அன்பின் சக்தியை பிரயோகியுங்கள்.

22. கோபமாக இருக்கும்போது மனம் பாரமாக இருக்கும். அன்பாக இருக்கும்போது காற்றில் மிதக்கும். இதுதான் இறைவனுடைய அருள் சுரக்கும் விதி.

23. [illegible] ஆன காயம் ஆற சிறிது [illegible] எடுப்பதைப் போல கஷ்டங்களின் காயம் ஆறவும் சிறிது காலம் எடுக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

24. உடல், உணர்ச்சி, அறிவு ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைத்து சமமாக ஓட விட்டால் மாயாஜாலம் போல பெரும் சக்தி உருவாகும். அப்போது இந்தப் பிரபஞ்சம் சொல்ல முடியாத ஆனந்தத்தை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணில்

பதவிகளை வகித்த முக்கிய உறுப்பினர் களுக்கு முக்கிய அமைச்சுக்களை வழங்க புதியஅரசுதீர்மானித்துள்ளது. ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் ஆகியோர் தேசிய அரசொன்றை ஸ்தாபிக்கும் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றனர். தேசிய அரசுக்கு ஆதரவளிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளது. இந்நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது குறித்தும் ஜனாதிபதியும், பிரதமரும் ஆலோசித்து வருகின்றனர். (த-சி)

தமிழ்த் தேசிய

தமிழ்க் காங்கிரஸின் விருப்பு வாக்குகளும் வெளியிடப்பட்டுள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் முதன்மை வேட்பாளர் – கஜேந்திரகுமார் பொன் னம்பலம் – 9 ஆயிரத்து 509 (இவர் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பில் இணைந்து 2004 ஆம் ஆண்டு போட்டியிட்ட போது 60 ஆயிரத்து 770 வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்)

செல்வராசா கஜேந்திரன் – 5 ஆயிரத்து 353 (இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து 2004 ஆம் ஆண்டு போட்டியிட்டபோது ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 77 வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்)

விஸ்வலிங்கம் மணிவண்ணன் – 4. ஆயிரத்து 283

திருமதி பத்மினி சிதம்பரநாதன் – 3 ஆயிரத்து 471 (இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து 2004 ஆம் ஆண்டு போட்டியிட்டபோது 68 ஆயிரத்து 240 வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்)

அமிர்தலிங்கம் இராசகுமாரன் – 3 ஆயிரத்து 206

திருமதி சின்னமணி கோகிலவாணி – 2 ஆயிரத்து 235

ஜெயரட்ணம்வீரசிங்கம்–ஆயிரத்து511

திருநாவுக்கரசு சிவகுமரன் – ஆயிரத்து 142

தேவதாசன் சுதர்சன் – ஆயிரத்து 81

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் – ஆயிரத்து 80

கடந்த 2010 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து போட்டியிட்டிருந்தபோதும், 5 சதவீத வாக்குகளைப் பெற்றுக் கொள்ளாமையினால் அந்தக் கட்சியில் போட்டியிட்டிருந்தவர்களின் விருப்பு வாக்கு எண்ணப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் விருப்பு வாக்குகளில் பத்தாவது இடம் பெற்றுக் கொண்ட திருமதி மதினி நெல்சனை விட, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் முதன்மை வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 4 ஆயிரத்து 230 வாக்குகள் குறைவாகப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-ரி3-ரி5)

தேசிய

மஜயந்த, எஸ்.பி.திஸாநாயக்க, மஹிந்த சமரசிங்க, சரத் அமுனுகம ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண் டாகப் பிளவு பட்டது. பொதுத் தேர்த லின்போது உட்கட்சி மோதல் மேலும் உக்கிர மடைந்தது. இதனால் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல அதிரடி நடவ டிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்பதுடன் தனது விசுவாசியான பிரசன்ன சோலங்காராச்சி ஊடாக தேர்தல் முடிவடையும்வரை சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடுவதற்கு நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவையும் பெற்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பொதுச் செயலாளர்களாகச் செயற்பட்ட அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோரை அப்பதவிகளிலிருந்து ஜனாதிபதி நீக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தேர்தல் முடிவடைந்த பின்னர் முதற் தடவையாக நேற்று சுதந்திரக் கட்சியின் மத்திய

கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க, குறைந்தபட்சம் இரண்டு வருடங்களுக்காவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான தேசிய அரசை முன்னெடுப்பதற்கான ஆதரவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று குறிப் பிட்டார்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் 13 போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 106 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆட்சியமைப்பதற்கு மேலும் 7 ஆசனங்கள் தேவைப்படும் நிலையில், ஐக்கிய தேசிய முன்னணியுடன் தேசிய அரசை அமைப்பதற்கு சுதந்திரக் கட்சி ஆதரவு கரம் நீட்டியுள்ளது.

இதன்பிரகாரம் அமையவுள்ள அமைச்சரவையில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடம் வழங்கப்படவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் 100 நாள் வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய அரசில் இணைந்து செயற்பட்டமை சுட்டிக் காட்டத்தக்கது. (த-சி)

மீள் வாக்கு

லாளர்களுக்கு நேற்று விளக்க மளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்றத் தேர்தல் நீதியான தாகவும் – வெளிப்படைத் தன்மையுடனும் நடந்து முடிந்துள்ளது. இதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேவேளை, சில ஊடகங்கள் பொது மக்களுக்குத் தவறான தகவல் களை வழங்கித் தேர்தல் திணைக் களத்துக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள். தேர்தலின் வாக்கு எண்ணும் நடவடிக்கையின் போது கட்சி, சுயேட்சைக் குழுக்களின் முகவர்கள் பங்கெடுத்திருந்தனர்.

கட்சிகளின் வாக்கு எண்ணிக்கை முடிந்து,முடிவுஅறிவிக்கப்பட்டபின்னர் மீள் வாக்கு எண்ணிக்கைக்கு கோரிக்கை விடப்பட்டது. கட்சிகளின் முகவர் கையெழுத்திட்டு சரி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் மீள் எண்ணிக்கை சாத்தியமற்றது. இந்த முடிவில் திருப்தியில்லை என்றால், நீதிமன் றத்தை நாட முடியும்.

விருப்பு வாக்குகள் எண்ணப்படும் போது, கடந்த காலங்களை விட இந்த முறை வேட்பாளர்களும் நேரடியாகச் சென்று அதனைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலாக, கட்சிகள் – சுயேச்சைக் குழுக்களின் முகவர்களும் அங்கு நின்றிருந்தனர். அவர்கள் முன்பாகவே அவை எண்ணப்பட்டன. தேர்தல் முடிவுகளில் திருப்தியீனம் இருக்கும் எவராலும் நீதிமன்றத்தில் சென்று வழக்குத் தாக்கல் செய்யலாம்.

தேர்தல் வாக்கு எண்ணிக்கை இடம் பெற்றுக்கொண்டிருக்கும்போது ஒரேயொரு முறைப்பாடு ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வாக்குப் பதியும் அலுவலர், வாக்குச் சீட்டைப் பார்க்காமல் பதிந்து கொண்டிருக்கின்றார் என்று முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்து உடனடியாக முன்னாள் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கிருஷ்ணானந்தனை அனுப்பியிருந்தோம். குறித்த முறைப்பாட்டைச் செய்தவருடன் அவர் குறிப்பிட்ட வாக்கு எண்ணும் அறைக்குச் சென்று எதேச்சையாக ஒரு கட்டு வாக்குச் சீட்டுக்களை எடுத்து, வாக்குச் சீட்டுக் கட்டில் உள்ளதும், பதிவில் உள்ளதும் சரியாக இருக்கின்றதா என்று ஒப்பிட்டுக் காட்டினார். இரண்டும் சரியாக இருந்தது. இதனையடுத்து குறித்த முறைப்பாட்டைச் செய்தவர், அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

வாக்கு எண்ணும் நிலையத்திலிருந்து பிரதான வாக்கு எண்ணிக்கை அதிகாரி எமது மத்திய நிலையத்துக்கு வாக்கு எண்ணிக்கையை அனுப்புவதற்கு முன்னர், மீள் எண்ணிக்கைகான கோரிக்கை விடப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோரிக்கை விடப்படவில்லை. மேலும், வாக்கு எண்ணிக்கை கணக்கிடப்பட்ட பின்னர் கையெழுத்து வாங்குவதற்கு கட்சிகளின் முகவர்கள் சிலர் நிற்கவில்லை. அவர்கள் சென்று விட்டார்கள்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றம் உத்தரவிடுமாக இருந்தால் மீளவும் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும். இது வரை எவரும் எழுத்துமூலமான குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை – என்றார் அரச அதிபர். (த-5-ரி3)

கூட்டமைப்பின்

துக் கொள்வதாகவும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்தி ரன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வொன்றைக் காண் பதற்கு தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதன் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஆணை வழங்கி யுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத் துவத்துடனேயே வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் நிற் கின்றார்கள் என்ற தெளிவான செய்தியொன்று புதிய அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்களால் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதைப் போன்று தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதை மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதுடன், வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட விடயங்களில் ஜ.நா. பிரேரணை முழு அளவில் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் மற்றும் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் மேலும் காலதாமதப்படுத்தப்படாமல் தீர்க்கப்படவேண்டும் என்ற விடயங்களை மக்கள் எதிர் பார்த்துள் ளனர். புலம்பெயர்ந்துவாழ் அமைப்பு என்ற ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நீண்டகாலமாக இணைந்து வேலைசெய்வதுடன், தமிழ் மக்களின் பிரச்சினைக்குப் பேச்சுமூலம் தீர்வொன்றைக் காண்பதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் முழுமையான ஆதரவை எதிர் பார்த்துள்ளோம்.

ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஆரம்பமான சாதகமான முற்போக்கான மாற்றத்தின் பின்னர் மற்றுமொரு முறை சாதகமான மாற்றத்துக்காக மக்கள் வாக்களித்துள்ளனர். சிறப்பானதொரு தேர்தலை நடத்தியமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றது.

இந்தத் தேர்தல் முடிவைத் தொடர்ந்து கடந்த 8 மாதங்களாக நாட்டில் முன்னெடுக்கப்பட்ட முற்போக்கான மாற்றம் தொடரும் என நம்புகின் றோம். தமிழ் மக்களுக்கு அமைதியான – நீதியான எதிர்காலமொன்றைப் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல தரப்புடனும் இணைந்து செயற்பட உலகத் தமிழர் பேரவை தயாராகவுள்ளது" – என்று கூறியுள்ளார். (த)

தேசியப்

தலைவர் இரா.சம்பந்தனிடம், கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் முக்கியஸ்தர்கள் நேற்று நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பில் கலந்து கொண்ட சிவசக்தி ஆனந்தன், ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கூட்டமைப்பின் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தெரிவு செய்யப்பட்ட 14 நாடா ளுமன்ற உறுப்பினர்களில் 6 நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளின் சார்பிலும் தெரி வாகியுள்ளனர்.

எனவே, மூன்று கட்சிகளும் இணைந்து தங்களுக்கு ஒருவரை நியமிக்கும் வகையில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கவேண்டும் என்றும், மற்றைய தேசியப் பட்டியல் ஆசனத்தை தமிழரசுக் கட்சி தான் விரும் பியவருக்கு வழங்கட்டும் என்றும் நேற்றைய சந்திப்பில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இருப்பினும் தேசியப் பட்டியல் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் எந்தவித இறுதி முடிவும் எட்டப்படவில்லை. இது தொடர்பில், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசாவுடன் பேசிய பின்னர், முடிவு தெரிவிப்பதாக, இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது. (த-5)

மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா ஆறுமுகம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மூளாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா ஆறுமுகம் நேற்று (20.08.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற வினாசித் தம்பி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், விஜயராசா, கிருஸ்ணராசா, நகுலேஸ்வரி, ஜெயராசா ஆகியோரின் அன்புத் தாயும், சிவப்பிரியா, சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமியும், சோபிகா, சாருஜன், கபிசன், ரஜீவன், ராகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஆ.ஜெயராசா (மகன்)

INVITATION FOR BIDS
TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

Work/Service Details	Non-refundable Deposit (Rs.) (Bid fee)	Security Deposit (Rs.)	Validity Period of Bid Security (Days)	Approximate Direct cost of the work (Rs. In million)	Minimum ICTAD Grade
Renovation of Drug Stores	500.00	70,000.00	91	3.42	C 8
Renovation of NTS Demonstration Room and Painting of NTS Boundary Wall	500.00	45,000.00	91	2.22	C 9
Construction of NTS Bicycle park, Repair works at NTS Tutors Quarters and Aluminium Partition for Ward No 11	500.00	20,000.00	91	0.95	C 10

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.08.2015 up to 03.09.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 04.09.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

சதாசிவம் தங்கரத்தினம்

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தை வதிவிடமாகக் கொண்ட சதாசிவம் தங்கரத்தினம் நேற்று 20.08.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப் பிள்ளை சதாசிவத்தின் மனைவியும் பாலசுப்பிரமணியத்தின் (பாலச்சந்திரா மோட்டார்ஸ் உரிமையாளர்) அன்புத் தாயாரும் தவமணி பாலசுப்பிரமணியம், சின்னத்துரை, தவராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலச்சந்திரா, பாலரஞ்சன், பாலதனுசன், பாலமுகுந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.08.2015 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No. 14 பொன்னையாவீதி
(post office lane), ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
0777656918

தகவல்
மகன் - சதாசிவம்
பாலசுப்பிரமணியம்

மரண அறிவித்தல்

ஐயாத்துரை பஞ்சரட்ணம்

3/3, பத்திரகாளிகோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பஞ்சரட்ணம் நேற்று (20.08.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், நிர்மலாகுமாரியின் அன்புக் கணவரும், துவாரகா, பிரியா (லண்டன்), காலஞ்சென்ற ஜனார்த்தனன் மற்றும் கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், மதியாவரணம், பாலசிங்கம், தணிகாசலம் மற்றும் கணேசமூர்த்தி, ஈஸ்வரி, முத்துராசா, தையல்நாயகி, நவரத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகுமாரி, கிருஸ்ணகுமார், கமலாகுமாரி, தங்கவேல், ஞானகுமாரி, குசலகுமாரி, காலஞ்சென்ற மகேந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாபு, பகீரதன் (லண்டன்), ரமேஸ் ஆகியோரின் மாமனும், வைதேகி, வைஷ்ணவி, ருக்ஷனா, ரக்ஷனா, பானு, சகானா, வைசாலி, நஜித், ராகவி (லண்டன்), அபிநயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.08.2015 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/3, பத்திரகாளிகோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 354 6547

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி சாமிநாதன்

(நில அளவை திணைக்கள ஓய்வுநிலை)



நவாலியைப் பிறப்பிடமாகவும் கலக்லேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி சாமிநாதன் 17.08.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் கமலராணியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்றவர்களான தம்பிராஜா, அப்புத்துரை, வீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசநாதன், நந்தினி (கனடா), நந்தகுமார், முகுந்தகுமார், ரதீஸா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமுதினி, ஜெயக்குமார் (கனடா), யோகேஸ்வரி, லதாஜினி, விமலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரபி, அபிரா, அர்ச்சனா, தாட்சாயினி, தனஞ்செயன், தாமரா, தனுஜா, நிரோஜன், நிருஜன், நிசாந்தினி, நிதுஷா, நிஷாந், வர்ணா, விகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.08.2015 வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரயைக் காக பி.ப 2.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0213734282

கலக்லேன்,
மானிப்பாய்.

கூட்டமைப்பின்

என்று சோபித தேரர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவ தேசியக் கூட்டமைப்புக்கான பலத்தை வழங்காமல் விடாது என்று நம்புவதாக தெரிவித்துள்ள சோபித தேரர், சிறுபான்மையினர் என்று அவர்களைப் பார்க்காமல் இந்த நாட்டின் பிரஜைகளாக மதிப்பளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இந்த முறை தேர்தலில் மக்கள் இனவாதிகளைத் தூக்கி எறிந்துள்ளதாகவும், பொதுபல சேனாவுக்கு ஏற்பட்ட தோல்வி இந்த நாட்டின் இன வாதிகள் மீது விழும் முதல் அடி எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ரணில் – மைத்திரி ஆட்சியை மக்கள் விரும்புவதாகவும் அவர்களின் ஒற்றுமை மூலமே நாட்டை நல்லிணக்கத்தை நோக்கி நகர்த்த முடியும் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மரண அறிவித்தல்

திருமதி பராசக்தி குணரத்தினம்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி குணரத்தினம் 20.08.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும் ராஜ்குமார் (சுவிஸ்), ராஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமுதினி யோகேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி மற்றும் சுந்தரலிங்கதிர்காமநாதன் (ஜேர்மனி), ராணி (நாதன் உணவகம்), யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சுபாஜினி (ஆசிரியை), சுதாஜினி (பிரான்ஸ்), சுரேந்திரன் (வைத்தியர் - நெல்லிப்பழை வைத்தியசாலை), சுவேந்திரன் (லண்டன்), விஜயதர்சினி ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

44/2 சங்கிலியன் வீதி,
நல்லூர்.

தகவல் -
Dr. சுரேந்திரன்
(0779604195)

இன்றைய மோதல்கள் ஏ.எல். வி.கழகத்தொடர்

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகாகளுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்காடு மகாத்மா அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பண்டத் தரிப்பு பிறைட் ஸ்ரார் அணியை எதிர்த்து உரும் பிராய் திருக்குமாரன் அணி மோதவுள்ளது. மாலை 5.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசை

யக்கார. சு.கவில் உள்ள மஹிந்த ஆத ரவு அணியினர் எதிரணியில் இருந்தபடி செயற்படப்போவ தாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்தவுடன் கைகோத்து எதிர ணியில் செயற்படுவ தற்கு 60இற் கும் மேற்பட்ட எம்.பிக்கள் தயா ராகவே இருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுதந்திரக் கட்சி தேசிய அரசில் இணைவதற்கு முடிவெடுத்துள்ள தால்.சு.க. தலைமையிலுள்ள ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டாக உடையும் நிலை உரு வாகியுள்ளது.

விமல் வீரவன்ஸ தலைமையி லான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமை யிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, தினேஷ் குண வர்த்தன தலைமையி லான மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன இணைந்து நாடாளுமன் றத்தில் தனித்து இயங் கும் எனத் தெரியவரு கிறது.

அத்துடன், ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி யின் தேசியப் பட்டியலில் இடம்பிடித்துள்ள லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதா ரன, இலங்கை கம்யூ னிஸ்ட்கட்சித்தலைவரான டியூ குணசேகர ஆகியோர் தேசிய அரசுக்குத் தமது ஆதரவை வழங்குவார் கள் என எதிர்பார்க்கப் படுகிறது. தமக்குரிய தேசியப் பட்டியல் நிய மனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இவர் கள் மைத்திரி பக்கம் நிற்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. (த-சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

கல்வியாண்டு 2013/2014 விரிவுரைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம், 2ஆம், 3ஆம், 4ஆம், வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2013/2014 இற்கான விரிவுரைகள் 24/08/2015 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

18/08/2015 பதிவாளர்

சிவாச்சாரியார் உடன் தேவை

கொக்குவில் கிழக்கு, மாத்தனைக் கந்தசுவாமி கோயி லுக்கு அந்தண சிவாச்சாரியார் உடன் தேவை. 35-50 வய துக்குட்பட்ட குருக்கள் நிலையில் உள்ளவர் விரும்பத் தக்கது. சுயவிவரம் (தொ.பேசி.இல. உடன்) கொண்ட விண்ணப்பத்தை 27.08.2015 இற்கு முன் கிடைக்கத் தக்கதாக தலைவர் / செயலாளர், மா பாலன சபை, மாத் தனைக் கந்தசுவாமி கோயில், கொக்குவில் கிழக்கு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சம்பியன் ஒழுங்கை, மாத்தனை, கொக்குவில். செயலாளர் மா. பரிபாலன சபை.

மரண அறிவித்தல்

திருமதி பார்வதி முத்தையா

புலோலி வடக்கு, அறுபது பாகக் கிணற்றடி வாசிகசாலை வீதி, பருத்தித் துறையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி முத்தையா நேற்று (20.08.2015) வியா ழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தெய்வானை தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின் னம்மா தம்பதியரின் மருமகளும், முத்தையாவின் அன்பு மனை வியும், அருட்செல்வம், (பிரான்ஸ்), ஆனந்த் (வேலவன் பல்பொருள் வாணிபம்-மருதடி), காலஞ்சென்ற இந்திரன் ஆகி யோரின் அன்புத் தாயும், வசந்தி, ஜீவவாசுகி ஆகியோரின் மாமி யும், மதுமிதன், மதுஷா ஆகியோரின் அன்பு மிக்க பேர்த்தியும், இராசு, இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், பவளராணி, நவமணி, நடேசலிங்கம் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.'

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.08.2015) வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி வடக்கு, அறுபதுபாகக் கிணற்றடி, வாசிகசாலை வீதி, பருத்தித்துறை.

தகவல்: ஆனந்த் (கண்ணன்) 077 670 1148

''நீதிமானுடையபேர் புகழ்பெற்றுவிளங்கும்'' நீதி-10:7

மரண அறிவித்தல்

பிறப்பு 14 11 1939

இறப்பு 19 08 2015

திருமதி. ஞானம்மா மமான்ஸ்

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, மட்டக் குளி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஞானம்மா மமான்ஸ் 19.08.2015 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு-சிசிலியா தம்பதியரின் அன்பு மகளும், க லஞ்சென்றவர்களான செபஸ்ரியன்-அனந்தாசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செபஸ்ரியன் மமான்ஸின் பாசமிகு மனைவியும், வளர்மதி (ரவன்ஸ்), லூட்ஸ் (கோகுலம்), கெனடி, யூட், யூக்கலிஸ்ரா (குஞ்சரம்), ஜொனிற்றா (கொலின்), றோச், மேசி, செரின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மான்மொலின், புஸ்பா, காயத்ரி, ராஜன், மேவின், டிவைனி, றொபின், ஹொட்பிறிசுகத் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜோயல், ஜெறி, பெ(டி)ன்ஹர், ஜெனிபர் (கிறிஸ்ரா), பி(டி)றீன், றூத், ஜெஷ்ரன், ஜெரூபன், யூனிஸ், பே(டி)ணிஸ், ஜெனிஸ், ஜோஜி, கெஷியா, றேச்சல், றோடா, றொஸ்னி, கேர்ஷொன், கவின்ஷொன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அலெக்சாண்டர், டனியா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற றீற்றம்மா, கிறேஸ்மணி, யோகம், வின்சலோ ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கிறகரி, அக்கிலோஸ், காலஞ்சென்றவர்களான ஞானமணி, விக்ரர் மற்றும் யோசை, எட்வேட், பிலோமினா ஆகியோரின் அன்பு மைத்துனியு மாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (22.08.2015) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 5/4 யூபிலி பாவத்தை, மட்டக்குளியிலுள்ள அவரின் வீட்டில் நடைபெற்று, மாதம்பிட்டி பிரதான மயானத்தில் நல் லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராஜன் : 077-2737612
கெனடி : 077-9160067
மேசி : 077-9402037
செரின்(London) : 00447577888097

தகவல்: குடும்பத்தினர்.

நெஞ்சைவிட்டகலா 10ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் தவராசா சுகந்தன்

(முன்னாள் காசாளர் - நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை)

தோற்றம் 28.05.1978

மறைவு 13.08.2005

திதி - ஐப்பசி

காலனவன் விரித்தவலை கடுகதியில் வந்துவிட
கணநேரம் நில்லாமல் காற்றாய் நீ சென்றுவிட்டாய்
பூவுலகில் உன் கணக்கு முடிவடையும் முன்னரே
இறைவன் உன் கணக்கை முடியாது என்தானோ?
தந்தை முகம் காணாது தனயனவன் ஏங்கிட
துணையிழந்து துணையிழந்து பாரினில் தவித்திட
உருண்டோடிவை பத்து வருடங்கள் ஆயினும்
உன்நினைவோ எம் மனதில் பசுமரத்தாணிபோல்
ஜனனமது மரணத்தின் முடிவினைத் தெரிந்தாலும்
மனமது ஆறுதில்லை ஞாபகங்கள் குறையுதில்லை
பத்தல்ல இருபதல்ல நாறு வருடங்கள் சென்றாலும்
பக்கத்தில் நிழலாகத் தொடர்ந்திடுமே உன் நினைவலைகள்
இனி என்ன செய்திடுவோம் நாம்
உன் ஆன்மா ஏறே இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருநெல்வேலி.

அண்ணா - சுதன், மனைவி, மகன், குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
aat [Sri Lanka]
Foundation, Intermediate, Final
AA1, AA2, AA3
Qualification:- GCE O/L 6 PASSES
MEDIUM - TAMIL & ENGLISH
Muk;gk; :- -22- 08 - 2015 rdpf;fpoik.
cld; gjpTfis Nkw;nfhs;sTk;.
Further Details
JAFFNA COLLEGE
Undergraduate Dept
Contact Tel number :- 0212223382, 0212329149

பதவி வெற்றிடம்
(கணக்காளர், களஞ்சியப் பொறுப்பாளர்)
மேற்படி எமது நிறுவனத்துக்கு கணினி அறிவுடைய கணக்காளர் ஒருவரும், கணினி அறிவுடைய களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரும் தேவை. முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
ஏ.எம்.ரி. ரான்ஸ்போர்ட் சேர்விஸ்
இல. 230, 232, ஆஸ்பத்திரி வீதி, கொழும்பு 13
தொடர்பு 0112451558, 0112342138
மின்னஞ்சல்
amttransportservice@gmail.com

FLC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்லுபடியாகும்
விரிவுரையாளர்: MR. V. JEGAN (Trained Teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற்கொண்டவர்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி, Jaffna. | 181, பிரதான வீதி நெல்லியடி TP: 021 320 2973 | கச்சேரி வீதி சாவகச்சேரி
Bus நிலையம் → தபாலகம் → 100M → பலாலி வீதி → FL Centre

துயருறுகின்றோம்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி யோகேஸ்வரி பஞ்சாட்சரம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி அழகம்மா வைத்திலிங்கம்
ஆண்டு பல சென்றாலும் ஆறாக்கவலை தந்து
மீண்டுவரா உலகிற்கு சென்றீரோ .....
ஆண்டவன் அடிபணிந்து அல்லும் பகலும்
வேண்டுகின்றோம் ஆத்ம சாந்திக்காக.....
ஓம் சாந்தி .. ஓம் சாந்தி.. ஓம் சாந்தி
பாடசாலை நலன்புரிக்கழகம்
பரி/அல்லாரை அ.த.க வித்தியாலயம், மீசாலை.

விளம்பரத்துறையில் வேலை வாய்ப்பு
ஊதியம் சராசரியாக மாதம் 30,000
யாழ்ப்பாணத்தினை தலைமையகமாக கொண்டமைந்த திருமலைதிருது முழுநேரமாக / பகுதிநேரமாக விளம்பரம் செய்பக்கூடியவர்கள் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகிறார்கள்
• அடிப்படை கல்வித்தகமை O/L • சிறந்த தொடர்பாடல் திறமை • நேர்த்தியான உடையலங்காரம்
• வாடிக்கையாளரிடம் தன்மையாகவும் மரியாதையாகவும் நேர்த்தியாகவும் பழகும் திறமை • நாணயம்
• வயது: உங்கள் விருப்பப்படி எந்தவயதாகவும் இருக்கலாம் நேரம் வேண்டுமானாலும் செய்யலாம்
• மாதாந்த சராசரி வருமானம் 30,000 (உங்களின் திறமைக்கு உழைப்புக்கு ஏற்ப கூடவும் தரலாம்)
நிறுவனம் பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும், 10 நாட்கள் பயிற்சியின் பின்னர் வேலை ஆரம்பம் 6 மாதத்தின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
V2 TRAVELS & TOURS
நேர்முகத்தேர்வு : 22-08-2015
தொடர்புகளுக்கு : 0768226243
யாழ்ப்பாணம் 49A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சங்கா விடைபெறும் ஆட்டம் ஆரம்பம்
இந்தியா வலுவான தொடக்கம்

இந்தியா – இலங்கை அணிகளுக் கிடையே நடைபெற்றுவரும் மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் முதலாம்நாள் முடிவில் இந்தியா 319–6 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானிக்க ஆரம்ப வீரர்களாக களத்தில் விஜய் மற்றும் ராகுல். முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே முதல் இலக்கு வீழ்த்தப்பட்டது. விஜயை டக்குடன் பவிலியனுக்கு அனுப்பி னார் பிரசாத். அடுத்த சில பந்துப் பரிமாற்றத்தில் வெறும் 4 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ரஹானே. தற் பொழுது இந்தியா 12–2.

ராகுலுடன் இணைந்தார் கோக்லி. இணைப்பாட்டம் பலம்பெறத் தொடங்கியது. ஆரம்பத்திலிருந்தே பதட்டத்தை உணராமல் அடித் தாடிக் கொண்டிருந்தார் கோக்லி. ஹேரத், பிரசாத் என்று அத்தனை வீரர்களின் பந்துகளையும் பிரித்து மேய்ந்துகொண்டிருந்தார். கோக்லி யின் ஆட்ட வேகத்துக்கு நேர் எதிர் மாறாக விளை

யாடிக்கொண்டிருந் தார் ராகுல். எதுஎப்டியோ இணைப் பாட்டம் நூறு ஓட்டங்களை இலகு வாக எட்டியது. ஆட்டமிழப்புக்கான எந்த வாய்ப்புக்களும் கோக்லி யால் வழங்கப்பட வில்லை. ஆளுக் கொரு அரைச்சதம் கடந்து இருவரும் பயணித்துக்கொண்டிருந் தனர். சிக்சர்களும் இருக்கவே செய் தது. இணைப்பாட்டமாக 164 ஓட் டங்கள் பகிரப்பட்டிருந்த வேளை யில் 78 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்தார் கோக்லி. ரோகித் சர்மாவு டன் இணைந்து நிதானித்து சதம் கண்டார் ராகுல். 108 ஓட்டங் களைப் பெற்றிருந்த வேளையில் சிக்சர் விளாச முனைந்து புக்காட்டி தவறான கணிப்பால் சந்திமாலிடம் பிடிகொடுத்து ராகுல் பவிலியன் திரும்ப இந்தியா 231–4.

கடந்த சில ஆட்டங்களாக சொதப்பி வரும் ரோகித் தனது இருப்பைத் தக்கவைக்கும் வித மாக நேற்று நிதானிக்கவே செய்தார். சகா ரோகித்துக்கு பக்கபலமாக இருக்க மத்திய வரிசையில் மற்றுமொரு இணைப்பாட்டம் அரங்கேறியது. இறுதிவரை ரோகித் சர்மாவால் நிலைக்க முடியவில்லை. 79 ஓட் டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் இந்தியா 319–6. சகா 19 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

மரண அறிவித்தல்

திருமதி பத்மராணி யோசப் யோகராஜா

உடுவில் றோட் மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மராணி யோசப் யோகராஜா நேற்று 20.08.2015 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பிராஜா மற்றும் பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும் யோசப் யோகராஜா அவர்களின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம், தவமலர், சற்குணராஜா, காலஞ்சென்ற சதாநந்தன் மற்றும் பத்மாவதி, தயாபரன், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் பத்மலோஜனி ஆகியோரின் அன்பு சகோதரியும் பரமரட்ணம், Alex, Ninshi, ரெஜினா, Prashanth ஆகியோரின் அன்பு மைத்துனியும் றொகானா, உமாநந்தன், Sanjayan, Kavisayan, Mathushayini, Paulin, Benjamin, Aksayan ஆகியோரின் அன்பு சித்தியும் அத்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
K.T.T. குடும்பத்தினர்
(K.T.T. ரவல்ஸ்)

உடுவில் றோட்,
மானிப்பாய்.

மரண அறிவித்தல்

கந்தையா பொன்னுத்துரை

(உரிமையாளர் மனோ நகை மாளிகை
85, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை நேற்று (20.08.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், சிவமுருகன், சிவகுமரன், சிவசக்தி (சுவிஸ்), சிவசிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகலட்சுமி, பாரதி, நிர்மலன் (சுவிஸ்), கஜேந்திரன் (கச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீனா, தரன்யா, நிரோஜினி, நிரோஜா, சிவப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, நல்லம்மா, பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2015) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாசுவன் காளியான்மேடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
0774457331

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org